
திருக்கருவைத் தலபுராணம்



ரீ பால்வண்ணநாதர் ஆலயத்தின் முன் தோற்றம்

உ
சிவமயம்.
திருக்களாவுடையான் துணை.

திருக்கருவைத் தலபுராணம்.

தொகுப்பாளர் :
திரு. சி. ஆ. இராமசாமிப்பிள்ளை அவர்கள்
கரிவலம்வந்தநல்லூர்.

பார்வையாளர் :
திரு. சி. நடராஜன் அவர்கள்,
தமிழாசிரியர், போர்டு உயர்நிலைப்பள்ளி,
கரிவலம்வந்தநல்லூர்.

உரிமையாளர் :
திரு. பி. ரா. பாலசுப்பிரமணியஞ்செட்டியார்
அவர்கள்
கரிவலம்வந்தநல்லூர்.

ஸ்ரீ முருகன் பிரிண்டிங் பிரஸ்,
இராஜபாளையம்.
1964.

சித்தி விநாயகர் காப்பு.

பூமனதி ரும்பரவை துயில்வானம் மறையுணராப் புனிதன் பொற்பார்
சோமனதி யாருகு தும்பை முடித்தா ரடியைத் தொழுவார் நெஞ்சத்
தேமனதி புகட் கருவை நாதர்புராணஞ் சொலற்கு-செழிக்கு மேன்மைச்
சேமநதிக் கரை மருவும் சித்திவிநா யகனடியே சிந்திப்பாமே.

வீர சண்முகர் துதி.

பாலெடுத்த குடமுலைப்பா ரந்தாங்கா திடையிறிமென் பதச்சிலம்பு
ஓலெடுத்த தனிமடவார் இருவருடன் மயிற்பரியில் உலவு மேலோன்
மாலெடுத்த மலையுஞ்சூ ரமலையும் பிளப்பமலை மாதா தந்த
வேலெடுத்த பன்னிரு தோள் வீரசண்மு கன்அடியே விரும்பி வாழ்வாம்.

பால்வண்ண நாதர் துதி

மருவையம்பதிபன் தாதையே முதல வானவர் யாவரும் மற்றும்
வெருவையந்திரத் தான்விடமுண்டவ் விபுதரைக் காத்தருள் விமலன்
உருவையம் பிகைதான் பெறப்பகுந்தளித்த ஒருவன்சீர் உருவருவாகி
கருவையம் பதியில் களாநிழல் வளர்பால் வண்ணனைக் கருத்துற
[வைப்பாம்.

ஒப்பனை அம்மை துதி

மலர்மலியற் குழல்போற்றி வார்புருவச் சிலைபோற்றி மணிசேர் தூய
இலகிளவெண் ணகைபோற்றி யினியவருட் டிறன்போற்றி யிளகா
[வஞ்சக்
கலெனுமனங் கரைந்துருகக் கருணைபொழிந் தெமையாளங் கன்னியாகி
உலகனைத்தும் பயந்தளிக்கும் ஒப்பனைத்தாய் மறைச்சிலம்பார்
[ஒண்டாள் போற்றி,

கலைமகள் துதி

தவளமலர் கலையாளைக் கலைபலவுங் குடியிருந்த தாயை யென்றுந்
துவளொரு தந்திடையாளைப் புத்தகங் குண்டிகை துலங்கும்
[தொடிக்கையாளைக்
குவளைமலர்க் கண்ணாளை கோகனகப் பதியிருக்கும் கொடியன்னாளைக்
பவளயிதழ்ப் பாரதிதன் பதமலரென் றுளமலரில் பதித்து வாழ்வாம்,

முன்னுரை.

சிவபெருமான் கோவில்கொண்டு எழுந்தருளிய தலங்கள் பல. அவற்றுள் அமுதினும் இனிக்கும் அருந்தமிழ் பாண்டிய நாட்டில் பஞ்ச தலங்களில் ஒன்ருகிய தேயுலிங்க க்ஷேத்திரம். இத்தலத்தில் சைவ சமய ஆசாரியரான நால்வரால் பாடப்பெற்று சிறப்பிக்கப் பெற்றது.

தேவார முதல்வரான மூவரில் தம்பிரான் தோழர் சுந்தர மூர்த்தி நாயனுரால் சிறப்பித்துச் சொல்லப்பட்ட வேடுபரீ என்னும் நூலில்,


சங்கரனுர் மேற்சார்ந்த தற்பரனுர் நம் உலகாள்
பங்கரனுர் தென் கருவைப் பால்வண்ணர்—செங்கரும்பின்
பாட்டுரைக்கு முன்னே பரிசு கொடுத்த நிதி
ஏட்டி லடங்காதே என் செய்வேன்.

என்றும் கூறியுள்ளார். மேலும் மூவரால் பாடப்பெற்ற தேவாரங்கள்; திருநாவுக்கரசரால் நாற்பத்தொன்பதினுயிரம் பதிகமும் சுந்தரமூர்த்தி நாயனுரால் முப்பத்தெட்டாயிரம் பதிகமும், திருஞானசம்பந்தரால் பதினுராயிரம் பதிகமும் பாடப்பெற்றதாக பெரிய புராணம் திருமுறை கண்ட வரலாற்றில் கூறப்படுகிறது. இவற்றில் சில பதிகங்கள்தான் இக்காலத்தில் விளங்குகின்றன. மற்றப் பதிகங்களெல்லாம் சிவபெருமான் திருவருளால் கயிலையி லிருப்பதாக சிதம்பரந் தலபுராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

மேலும் இத்தலத்தின் சிறப்பை இப்பதியை அரசாட்சி செய்து வந்த வரதுங்கராமபாண்டியன் தாம் இயற்றிய 'திருக் கருவைக் கலித்துறை அந்தாதியிலும், பதிற்றுப்பத்தந்தாதியிலும் கூறி இருப்பதைப் பின்வரும் செய்யுளால் அறிக.

திருவும் குலனும் மனையும் சிருரும் சிறந்த செவ்வி
உருவும் தவமும் கடிது எய்தலாம்- உமை மாது கொங்கை
மருவும் புயத்தர் களா நிழளார் செக்கர் வான நிறம்
பொருவும் சடிலர் திருத்தொண்டின் மேலன்பு பூண்டவர்க்கே.

'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' (தாயுமானவர்)



சிவனடியார்க்கு அடியவன் பி. ரா. பாலசுப்பிரமணியன்

செல்வ மீயுஞ் சிறப்பு மளித் துளத்
தல்ல றீர்க்கும றிவையுத விடுங்
கல்வி நல்குங் கதிதரும் பொற்கிரி
வல்வி லான்களவீ சனை வாழ்த்தவே.

என்று சிறப்பித்திருக்கிறார். மேலும் இத்தலத்தின் சிறப்பை வெண்பாவந்தாதியில் காண்க.

இத்தலபுராணத்தில் சொல்லும் கதைகள் பௌடிக புராணத்துள் ஏழும், பிரம்மகை வர்த்த புராணத்துள் ஒன்பதும் ஏனைய காந்தப் புராணத்தும் உள்ளன.

இத்தலபுராண வடமொழியைத் தமிழ்மொழி ஆக்கியவர் விஸ்வநாத தீட்சிதர். பின் ச. திருமலைவேல் கவிராயர் என்பவர். இப்புராணத்தை செய்யுளுருவாக இயற்றி இருக்கிறார். இவர் இயற்றிய 'திருக்கருவைத் தலபுராணம்' செய்யுள் உருவாகவே முற்றும் இருப்பதால் இது கற்றவருக்கேயன்றி மற்றையவருக்கு எளிதில் புலப்படாமையால் சாதாரண கல்வியறிவுடையவரும் படித்து இன்புறும்படி தமிழில் வசனமாக எழுதி அச்சிட்டு உதவ வேண்டுமென்று பலநாள் நினைவுற்றவரும் சிவ தவநேசச் செல்வரும், சைவ வைசிய குலதிலகரும், இதில் என்னை யீடுபெறச் செய்து இந்நூல் வெளியாகும் வரை அன்பால் இன்முகங்காட்டி இடையிடையே ஊக்கியும் வந்த **கரிவலம்வந்தநல்லூர், திரு பி ரா. பாலசுப்பிரமணியம் செட்டியார் அவர்களுக்கும்,** வடமொழியை தமிழ் மொழியில் பெயர்த்துக்கொடுத்த விஸ்வநாத தீட்சிதருக்கும், பின் செய்யுளுருவாக இயற்றிய திருமலைவேல்க் கவிராயருக்கும், காலத்தில் அச்சிட்டு உதவிய ஸ்ரீ முருகன் அச்சகத்தாருக்கும் என் நன்றி என்றும் உரியது.

இத்தகைய திருப்பணி எற்கு என்றும் நேர, திருவருள் உதவுக; அன்பர்கள் ஆசி செய்க என்று பிரார்த்திக்கிறேன்.

திருக்கருவைப் புராண எழுத்துக்களில் நிறைவுள்ளதேல் அது உயர்தரு திருவருளின் உதவுதல், குறைவு உளதேல் அது என் அறிவினைத் தகையும் கருமல காரியம், அறிஞர்கள் இதை உணர்வர். உள்ள குறைகளை உணர்த்துவர், மறு பதிப்பில் திருத்திக்கொள்வம் என்னும் நம்பிக்கை உடையேம். ஒப்பனை சமேதப் பால்வண்ணநாதர் உவந்து எழுந்தருளிய திருக்கருவை திருக்கோவில் திருப்பணி வரிசையில் நின்று முத்திபெற்ற அடியார் களுக்குத் திசை நோக்கிய என் வணக்கம் என்றும் உரியது.

பதினெண் புராணமும் இயற்றிய வேதவியாசரின் சீடரு மான சூத முனிவரிடம் நைமிசாரண்ய தவயோகியான சௌனகாதி முனிவர் கேட்கலுற்றனர்.

முனிவர் பெரும! பூவுலகில் தமிழ் காத்த பாண்டி நாட்டில் பஞ்ச தலங்களில் ஒன்றாகிய திருக்கருவைத் தலமான தேயுலிங்க க்ஷேத்திரத்தில் சிவபெருமான் பால்வண்ண வடிவத்துடன் எழுந்தருளி, வேண்டுவார்க்கு வேண்டிய வரம் அருளிச்செய்கிறாரென்று முன்னமே கேள்வியுற்றோம்,

முனிபுங்கவா! அக் கருவைப்பதி மான்மியத்தை அடியேங்கள் தெரிந்து உய்யும்படி விரிவாக எடுத்துரைக்க வேண்டுமென்று சௌனகாதி முனிவர் கேட்க, சூதமுனிவர் சொல்லலுற்றார்.

சிவபுண்ணியத் தெளிவு

மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி
நாதமா இலிங்க மாதி நளினபுட் கரணி யாதி
சேதமுற் றிடின்முன் போலச் செய்துளோர்க்கு-உறுபலன் தான்
ஓதுமுன் செய்துளோரின் ஆயிரங் குணிதம் ஓங்கும்'

இத்தலபுராணத்தை எழுதி, அத்துடன் வழிபடுவோர்க்குப் பயன் படும் முறையில் ஆலய அமைப்பு, மூர்த்திகள், தீர்த்தங்கள் முதலியவற்றின் சிறப்புகளையும், சமய தத்துவங்களையும் விளக்கி வரதுங்கராம பாண்டியரால் அரிய அந்தாதிகளைத் தொகுத் துதவிய நூலாசிரியருக்கும், இதை வெளியிட்டுதவிய கருவைநகர் **திரு. பி. ரா. பாலசுப்பிரமணியம் செட்டியார் அவர்களுக்கு** சைவ உலகம் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.


வாழ்க கருவைமாநகர்!

ஓங்குக வரதுங்கர் புகழ்!!

வளர்க திருநெறி!!!

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்!!!!

திருக்கருவைத் தலபுராண அட்டவணை.



திருக்கருவை களாநிழல் வாழும் பால்வண்ண நாதர்

சிவமயம்.

திருக் கருவைத்தல வரலாறு

தலமும் — இருப்பிடமும்

கரிவலம்வந்தநல்லூர் என விளங்கும் இக் கருவைத்தலம் அமிழ்தினுமினிய தமிழ் உயர்வுகொண்ட தென் பாண்டிநாட்டுப் பஞ்ச தலங்களில் ஒன்ருன அக்கினித்தலம். இத்தலம் எத்தலத் தினும் சிறந்தது. மூர்த்தி தலம் தீர்த்தம் எனும் முப்பெரும் பேற்றையும் உடையது.

இத்தலம் திருநெல்வேலி ஜில்லா சங்கரநயினர்கோவில் தாலூகாவிலிருந்து வடக்கே எட்டுக்கல் தூரத்தில் திகழ்ந்து விளங்குகிறது கரிவலம்வந்தநல்லூர்.

இது தலங்களில் உயர்ந்தது. மூர்த்தியில் முதன்மை பெற்றது, தீர்த்த விசேடம் நான்கினைக்கொண்டது. சுக்கிரன் வழிபாடு செய்த தீர்த்தத்துக்குச் சுக்கிர தீர்த்தம் என்றும், அக் கினி தேவன் வழிபாட்டால் அக்கினி தீர்த்தம். சூல தீர்த்த மென்றும். அம்பாள் தவ வழிபாட்டால் தேவி தீர்த்தமென்றும் பெயர் பெற்றது.

இத்தலத்திற்குக் காரணப்பெயராக விளங்குவது அநாதி புரம், பாவநாசம், சித்துருவம், ஞானபாசுரம், சிவசக்திபுரம், அமுதாசலம், சீவன் முத்திபுரி, உபயபுரி, கரிபுரம், அம்பரபுரம், திருக்களாவனம் ஆகும். இதன் ஜனத்தொகை ஏறக்குறைய ஐயாயிரமாகும். இத்தலத்தைச் சேவிக்கச் செல்வோருக்கு என்றும் பஸ் வசதியும், ரெயில் வசதியும மிகுதியுள்ளது. பஸ்ஸில் ஏறி திருக்கருவைத்தலம் எல்லையில் வந்ததும் வான் நோக்கி எழுந்த கோவிற்கோபுரம், வருகின்ற பக்தர்களை வரவேற்பது போல் தோன்றும். அதை அணுக வந்தேன் என்ற அமைதி தரும்.

காவல் தெய்வம்

கோபுர வாயிலின் வடபக்கம் ஒரு பர்லாங்கு தூரத்தி லிருக்கும் நிட்சேப நதியைக் காண்கிறோம். அதன் மகிமையைப் பின் வரலாற்றில் காண்க. நதியின் வடகோடியில் கம்பீரமான தோற்றத்துடன் முப்புராரி அம்மன் தேவி திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கிறள், நதியின் தென்கோடியில் மாரியம்மன் என்னும் தேவி திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கின்றுள். இந்த இரு தெய்வங்களும் ஊர்க்காவல் தெய்வமெனச் சொல் வார்கள். வானம் மழையை மறந்த நாளில் நகர மக்கள் ஒன்று கூடி இரு தேவதைகளுக்கும் அபிஷேக அலங்காரங்களால் வழி பாடு நடத்துவார்கள் அவ்வளவுதான் எங்கிருக்கும் மேகங் களும் ஒன்று சேர்ந்து வேண்டிய அளவு மழை பெய்யும். இங் குள்ள ஐதீகங்களுள் இதுவும் ஒன்ருகும்.

இரு தேவதைகளின் வழிபாடு

பொழுது தவருமல் இரு பூசாரிகள் அருமையாக இத் தேவியை ஆராதிக்கிருர்கள். பக்தகோடிகள் நதியில் ஸ்நானம் செய்து, வரும் வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை தோறும் கொலுவிருக்கும் தேவிகளை பூசிக்கப்பெற்றும், வயனம் காக்கும் பக்த கோடிகளுக்கு கண்ணில்லோர் கண் பெறவும், தீரா நோ யுற்ருேர் நல்வழிப்படவும், மலடிகள் மைந்தர் பெறவும் தேவி தன் அருளை அள்ளி, அள்ளி வழங்குகிருள்.

பொய்கையும் – தேரும்

கோபுர வாயிலுக்கு சற்று கிழக்கே அகன்று, ஆழ்ந்து பல படித்துறைகளைக்கொண்ட பொய்கையைப் பார்க்கிருேம். அப்பொய்கைக்குப் பால்தடாகம் என்றும், சுக்கிர தீர்த்தம் என்றும் பெயர் பெற்றது. அதன் மேல்பக்கம் அமைதியும் நியதி யுமான இடத்தில் கணேசப் பெருமான் ஆலயமும், அடுத்தாற் போற் திருத்தேரும் விளங்குகிறது.

திருக்கோபுரம்

எடுப்பான தேர்நிலைக்குச் சற்று மேல்புரம் கிழக்கு நோக்கிய கோபுரம் இருக்கிறது. வாயிலின் தென்கோடியில் விக்னேசுவரரும், வடகோடியில் பாலதண்டாயுதபாணியும் இருக்கிறார்கள். தம்மை வழிபடுவோருக்கு வேண்டியதைக் கொடுக்கிறோம் என்னும் திருக்கருணையுடன் விளங்குகிறார்கள். கோபுரத்திற்கு முன்புறம் ஐந்தாம் திருநாள் மண்டபம் இருக்கிறது. திருவிழாக் காலங்களில் வீதி வலம் வருகின்ற விமலன் இனிய கோலம்பெற அங்கு வந்து இறங்குவன். அருமையாக இவைகளையெல்லாம் அறிகிறோம். அதன்பின் கோபுர வாயிலுள் நுழைகிறோம்.

கொடிமரம்

உயர்ந்ததும், தூய்மையானதுமான கொடிமரம் பலிபீடத்துடன் எதிரில் தோன்றும். இதன் தத்துவங்கள் பல. 'நேர்மை பெற நில்', 'சிவ வழிபாடே இம்மைக்கும் மறுமைக்கும் வழி, என்ற நியதியை அது நினைவூட்டுகிறது.

தெற்கு வெளிப்பிரகாரம்

பிரகாரத்தின் கீழ்பக்கம் அழகான ஒரு மண்டபமும் அக்கினி தீர்த்தம், சூல தீர்த்தம் என்றுள்ளது. அதன் வரலாற்றை அக்கினி தேவன் பாவந்தீர்த்த வரலாற்றில் காண்க. தென்புரம் கீழ்திசை நோக்கிய பராசத்தி பீடத்தைப் பார்க்கிறோம். பராசத்தியைத் தவறாது வழிபடுவோருக்கு நவக்கிரகங்களாலும் முனி, பூத, பசாசுகளாலும் ஏற்படுகின்ற இன்னல்களை நீக்கி அருள்புரிகின்றாள்.

மேற்கு வெளிப்பிரகாரம்

தென்கோடியில் கனியின் ஞாபகம் கொண்ட விக்னேசுரரும், வடகோடியில் கனிக்காக உலகம் சுற்றும் சண்முகரையும் காணலாம். இவர்களை வழிபடுவோருக்கு சகோதரர்கள் ஒற்றுமையுடன் இன்புறுவர்.

வடக்கு வெளிப்பிரகாரம்

அங்கே சிறந்து வானளாவி ஓங்கி நிற்கும் வில்வமரத்தைக் காண்கிறோம். அதன் பக்கத்தில் தேவி தீர்த்தம் ஒன்று இருக்கிறது. அதன் மகிமையை தேவி தவம்பெற்ற சர்க்கத்தில் காண்க.

மூலவரான பால்வண்ணர் சந்நிதி

சிறந்த மூலவ சந்நிதிக்குள் நுழையச் சித்தம் ஈர்க்கின்றன அங்கே அதிகார தேவரிடம் விடைபெற்று உட்பிரகாரமாகிய தென்பக்கம் செல்கின்றோம். அவ்விடம் முறையே வீற்றிருந்தருளும் சுரதேவர், அஷ்டலெட்சுமி, சப்த மாதா, நால்வரான அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், அறுபத்துமூவர்கள் காண்கின்றோம். தென்பால் உகந்திருக்கும் தெக்ஷிணுமூர்த்தியும் வழிபட்டுக்கொண்டு, மேற்கு உட்பிரகாரம் செல்கின்றோம். அவ்விடத்தில் தென்கோடியில் சித்திவிநாயகரையும், வடகோடியில் வீரசண்முகரையும், மேல்புறம் பஞ்சலிங்க மூர்த்திகளையும், கீழ்புரம் அயன்மால்காணுத முகலிங்கரையும் வழிபட்டு, வடக்கு உட்பிரகாரம் வருகின்றோம்,

அவ்விடம் தென்முகம் நோக்கி ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராஜப் பெருமானையும், பால்வண்ணப் பெருமான் பிறப்பிடமாகிய களாவனப் பதியையும், சூரசம்கார மூர்த்தியாகிய ஆறுமுகப்பெருமானையும், வழிபட்டுக் கொண்டு மூலவரான கற்பக்கிரகத்துள் இருக்கும் கோடி சூரியப்பிரகாச ஒளிபொருந்திய பால்வண்ணநாதப் பெருமானை வழிபட்டுக்கொண்டு இடபால் வீற்றிருக்கும் ஒப்பனை அம்பாளைத் தெரிசிக்க சித்தம் மிளிர்கின்றது. அம்பிகையை வழிபாடுசெய்து வெளிவந்து, இலட்சுமணப்பெருமாளால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசிக்கப்பட்ட இலட்சுமணேஸ்வரரையும், கோமளாம்பிகையையும், அடுத்து நவக்கிரகங்களையும் வழிபட்டுக்கொண்டு மேல்திசை வந்ததும் அதன் எதிரில் வசந்தமண்டபம் தோன்றும் அதில் வசந்த காலத்தில் அம்பாளுக்கு இடப்பாகம் கொடுத்து வீற்றிருக்கும் காட்சி பக்தகோடிகளைப் பரவசப்படுத்தும்.

பக்தகோடிகளாகிய நாம் விருந்தோம்பல், சுற்றந்தாளல் முதலிய பல இல்லறம் நடத்தி வாணாளை வீணுக்காமல் பக்தி செய்து உலகம் உய்யவும், நாம் உய்யவும், அகில உலகங்கள் உய்யவும், வழிகாட்டியாய் நின்று இத்தலத்தில் வழிபாடு செய்து பேறு பெற்ற அடியார்பெருமக்களின் வரலாற்றையும் படித்து இன்புறுவோமாக.

சிவகருமஞ்செய்யார் திருநீறு சாத்தார்
தவநிலையாஞ் சைவநெறிசாரா — ரவனிதனிற்
கான்பரந்த பச்சைக்களாநிழலைக்கைதொழா
ரேன்பிறந்தார் மானிடராயின்று.

சென்றது காலஞ் சிதைந்த திளமை நல
நின்றது சாவென் றுநினைந்துருகி — மன்றி
னடிக்கின்ற பால்வண்ணர் நாமமெண்ணு மாந்தர்
படிக்கின்ற நூலெல்லாம் பாழ். — வரதுங்கர்.

வரதுங்கர் சரித்திரம்

சீரும் சிறப்பும் வாய்ந்த எந்நாட்டினும் நந்நாடெனப் புகழும் தென்பாண்டி நாட்டின் நிட்சேபநதி, சேமநதி, கிருபாநதியெனத் தெய்வத் திருநாமம் பெற்றதுமானதும் அரி, பிரம்மாதி தேவர்களும், காகபுசுண்டர், அகத்தியர், நாரதர், வசிஸ்டர் முதலிய முனிபுங்கர் பூசிக்கப்பட்டதும், சிவபெருமான் நித்திய தாண்டவம்புரிய *அம்பலமாகக் கொண்டதும், பாண்டியநாட்டு பஞ்ச ஸ்தலங்களில் ஒன்றாகிய தேயுலிங்கத் தலமான இக்கருவை மாநகரத்தை செங்கோலாட்சி நடத்திய ஆரியச் சக்கிரவர்த்தியின் வம்ச பரம்பரையிலுதித்த அரசருள் ஒருவரான வீர பராக்கிரமன் புத்திரன் வீரபாண்டியன் என்பான். இக் கருவைமா நகரத்தை ஆட்சி புரிந்து வந்தான்.

அவ்வரசனுக்கு முன் செய்த சிவபுண்ணியத்தால் இற்றை நாட்டு எழுநூற்று ஐம்பது வருடங்களுக்கு முன் கலியுக ஆண்டு நாலாயிரத்து முன்னூற்றி ஐந்தில், அக இருள் நீக்கும் ஞானசூரியராக இரு புதல்வர்கள் அவதரித்தார்கள். அஞ்ஞான்று பல நல் விழாக்கண்டு வேதவேதியருக்கு வேண்டுவன கொடுத்து சிவ கடாட்சத்தாலவதரித்த அப் புதல்வர்களுக்கு வரதுங்கன், அதிவீரன் என்னும் திருநாமம் சூட்டி அருமை பாராட்டி வளர்த்தனன். நாள் செல்லச்செல்ல அவர்களுக்குச் செய்யவேண்டிய சடங்குகளைக் குறைவின்றிச் செய்து பல பொற்பணிகளையும் பணிவித்தனன். பின் அவ்விருவருக்கும் நூல் கற்பிக்கும் திறமையுள்ள சகலகலை வல்லவனுமான ஓர் ஆசிரியனைக்கொண்டு கல்வி கற்பித்துச் சகல கலைகளிலும் வல்லவனாக்கினான்.

அதிவீரனைச் சுவீகாரம் செய்தல்

இங்ஙனம் நிகழும் நாளில், தென்காசி நகரத்தைச் செங்கோலாட்சி புரிந்து வந்த காசிகண்ட பராக்கிரம பாண்டியனுக்கு புத்திரப் பேறின்மையால் வீரபாண்டியன் இடத்துக்கு வந்து தனக்கு ஒரு புத்திரனைச் சுவீகாரம் செய்துகொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ள தன் புதல்வரில் இளையவனான அதிவீரனைச் சுவீகாரம் செய்து கொடுத்தான்.

பின்னர் வரதுங்கன் என்பான் அடக்கம், அன்பு, அறிவு' அவாவறுத்தல், இன்சொல், ஈகை, ஒழுக்கம், சாந்தம், தவம்' நடுநிலைமை, பத்தி, வாய்மை முதலிய நற்குணங்கள் உள்ளத்தே வளரத் தானும் வளர்ந்தான். அதுகண்ட தந்தை வீரபாண்டியன் தன் செல்வனான வரதுங்கனிடம் இராச்சிய பாரத்தை ஒப்புவித்து தவ வழி நின்றனன்.

வரதுங்கன் அரசாட்சி

பின்னர் வரதுங்க பாண்டியன் நீதி வழுவாமல் செங்கோல் நடத்திவரும் நாளில் தந்தையான வீரபாண்டியன் தூய சிந்தையனாக இவ்வுலக வாழ்வைத்துறந்து சிவானந்த வாழ்வெய்தினான். தந்தை தேக வியோகம் அடைந்த பின் வரதுங்கன் தந்தைக்குச் செய்யவேண்டிய பிதிர் கருமங்களை குறைவற நடத்தி அரசு புரிந்திருந்தனன்.

வரதுங்கன் திருமணம்

அந்நாளில் காசிராசன் புத்திரியும் அசுவினி நாளில் ஜெனித்தவளும், கற்பில் அருந்ததியையும், கல்வியில் நாமகளையும், பொறுமையில் பூமி தேவியையும், வனப்பில் இந்திரையையும் நிகர்த்தவளுமான சிவகாமசவுந்தரி என்னும் மாதரசை மணப்பான் கருதி, அக்காசிப்பதி அரசனிடத்துக்குத் தன் அமைச்சரை அனுப்பி மணம் பேசி அம்மாதரசியைத் திருமணம் செய்து இன்புற்றிருந்தனன்.

அங்ஙனம் வாழும் நாளில் பட்டமகிஷியான சிவகாம சவுந்தரியிடம் புத்திரப்பேறின்மையால்,

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை – யறிவறிந்த
மக்கட்பேறல்ல பிற."

என்று ஆன்றோர் கூறியபடி, மனைவாழ்க்கைக்குச் சிறந்த மக்கள் பெறுவான் வேண்டி பரணி முதல் ரேவதி வரை ஜெனித்த மாதரை மணம் செய்வித்து சுகித்திருந்தனன். பின்னர் சிவகாம சவுந்தரி முதல் ராஜபத்தினியாகிய இருபத்தேழுபேர்களிடத்திலும் புத்திரப்பேறின்மையைக் கருதி அவ் வரதுங்கன் பல தான தருமமும், ஸ்ரீ பால்வண்ணநாதப் பெருமானுக்கு அபிடேக அலங்காரங்கள், உற்சவங்கள் பல நடத்தி அப்பெருமானை இரவு பகலாக மறவாத சிந்தையாகி துதி செய்துகொண்டிருந்தான். அந்நாளில் அநாதிபுர ஈசனான சிவபெருமான் அரசன் கனவில் தோன்றி அன்ப! நீ மகவின்மை கருதி மனதில் கவலை கொள்ளேல் உன் அந்திய காலத்தில் நாமே உமக்குச் செய்யவேண்டிய தகன கிரியை முதலியன செய்து முத்தியும் கொடுப்போம் என்று சொன்னதை அரசன் விழித்தெழுந்து நாயினுங் கடையனான என்னை ஈடேற்றும் வண்ணம் எம்பெருமான் இங்ஙனம் எழுந்தருளினன் என ஆடிப்பாடித் துதித்து இருந்தான். அந்நாளில் கொக்கோக முனிவன் வடமொழியில் செய்திருந்த காமநூலை கொக்கோகம் என்னும் தமிழ் மொழியில் இயற்றினன்.

அரசனுக்கு பூர்வ வாசனையால் சிவஞான முதிர்ந்து உலகப் பற்றற்று சிவபூசையில் விருப்பம்கொண்டு சிவபூசை முதலியன ஆசாரியனால் பெறப்பெற்றாலேயன்றி பயனில்லையென்று தெரிந்து நாம் ஆசாரியனை என்று காண்போமென இரவு பகல் சிந்தித்திருந் தான். சிறிது காலம் சென்றபின் காஞ்சிபுரத்துக்குச் சமீபமான 'மாவண்டூர்' என்னும் நகரில் கௌசிக கோத்திரத்தில் ஜெனித் தோனும், வேதாந்த ஞானமடைந்த தூயசிந்தையுடையவனும் சீனிவாச ஆச்சாரியாரென்னும் பெயருடைய ஒருவன் கருவை யம்பதி சிவாலயத்துட் புகுந்து பால்வண்ணப் பெருமானைத் தெரிசிக்கும்போது சிவதரிசனத்துக்கு அங்குவந்த அரசன் அப் பெரியோனைக் கண்டு, சிவபெருமானருளால் நமக்குக் கிடைத்த ஆசிரியன் இவனேயெனக் கருதி காந்தம் கண்ட இரும்புபோல் மனம் அவன்பால் செல்ல, அழலிடைப்பட்ட மெழுகென உருகி அவனடியில் வீழ்ந்து சுவாமி! அடியேன் கடைத்தேரும் வண் ணம் அடியேனை ஆட்கொண்டு அனுக்கிரகிக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்தனன்.

அரசன் சிவபூசை பெற்றது

சற்குருவாய் வந்த வேதியன், அரசன் மனநிலை உணர்ந்து மகிழ்ந்து அரசனுடன் நிட்சேப நதியை யடைந்து சைவ தீட்சா சங்கற்பஞ்சொல்லி ஸ்நானம் செய்வித்து திருநீறு உத்திராக்கம் முதலியன அணிந்துகொள்ளச் செய்து சிவசந்நிதியில் அனடித்துப் போய் ஸ்ரீபஞ்சாக்கர உபதேசம் செய்து ஆத்மார்த்த சிவபூசையும் விதிப்படி செய்வித்தான். அரசன் அத்தேசிக உத்தமனுக்கு வசிக்க விடும் மற்றும் வேண்டுவன நல்கி உபசரித்து சிவபூசை வழிபாட்டில் சிறந்து விளங்கினன்,

அங்ஙனமிருக்கு நாளில் சிந்துதேசத்துக்கதிபனும் 'விட்டூரன்' எனப் பெயர் பெற்றவனும் பலாட்டியனும் துராசா ரனும் ஆகிய ஓர் மிலேச்ச அரசன் சதுரங்கசேனையுடன் அவ்வர துங் ன்கதஜஇரா ஆட்சிபுரியும் ாைனியாகிய கருவை மாநகரத்தை

முற்றுகை போட்டனன். அதனைத் தூதர் அரசனுக்குத் தெரிவித்தனர். அப்போது அவனுடனிருந்த அமைச்சர் முதலோர் உணர்ந்து விட்டூரன் மகாபராக்கிரமசாலியும், படைப்பெருக்குடையவனுமானவன். அன்னோன் அங்ஙனம் விரிந்த படையுடன் நமது நகரத்தை முற்றுகை போட்டிருக்கும் போது அஜாக்கிரதையாக இருப்பது சரியன்றே. அவனுடன் போர் புரிந்து வெல்வதும் அசாத்தியமே. அந்தோ! இனி என் செய்தும். என்றுரைத்தும் திகைத்திருந்தனர். அரசன் விட்டூரனுடன் போர் செய்யச்செல்வதற்கு மனமில்லாதவனுகி அமைச்சர் முதலியசபை யோரை நோக்கி

"அஞ்சலென்ற கரதலமுங் கணபணகங் கணமும்
அரைக்கிசைந்த புலியுடையு மம்புலிச்செஞ் சடையுங்,
கஞ்சமலர்ச் சேவடியுங் கனைகடிலுஞ் சிலம்புங்
கருணைபொழி திருமுகமுங் கண்களொரு மூன்று,
நஞ்சமுண்ட மணிமிடறு முந்நூலுமார்பு நலந்திகழ்குவெண்
ணீற்றொளியு மறிமானுமழுவும், பஞ்சடிச் சிற்
றிடையுமையா ளொப்பனைபா கமுமாய்ப் பால்வண்ண
னுளத்திருக்கப் பயமுண்டோ வெமக்கே"

என்ற செய்யுளைக் கூறி, திருக்ளாவுடையான் எழுந்தருளியிருக்கப் பெற்ற ஆலயத்துட் புகுந்து ஆலமுண்ட அருட்கடலே! திரிபுர மெரித்ததேவே! காமனைக் காய்ந்த கண்ணுதலே! மலைமகள்பாகா! சந்திர சடாதரா! அடியவரிடர் தீர்க்குமையனே! தீய சிந்தையுந் தீச்செயலுமுடைய விட்டூரனல் அடியேன் இடருருமல் திருவருள் புரிந்து இரட்சிக்க வேண்டுமென வணங்கினன்.

அப்போது அடியாருக்கெளியனுன திருக்களாவுடையான் திருவருளால் ஓர் அசரீர வாக்கு விண்ணிலெழுந்தது வரதுங்க! ஒன்றுக்கு மஞ்சேல். உன்பகைவனுன விட்டூரனை தாமே ஓடும்படி செய்வோமென உதித்த மொழியை உணர்ந்து பேரானந்தத்தில் மூழ்கி அடியற்ற மரம் போல் வீழ்ந்து, ஆடிப்பாடித் துதித்து தன் அரண்மனை சென்றனன்.

பின்னர் முகலிங்கப்பெருமான் அஞ்ஞான்று சைவசமய ஆசாரியரான திருஞான சம்மந்தருக்கும், அடியாருக்கும் தீங்கிழைத்த சமணரின் உடன்பாட்டுக்கு இணங்கி நின்ற பாண்டியனுக்கு வெப்பு நோய் பற்றித்தகிக்கும்படி செய்ததுபோல தன்னடியவனுன வரதுங்கனுக்குத் தீங்கிழைக்க நினைத்த விட்டுரனுக்கும் அவன் சேனைகளுக்கும் மெய்யில் அக்கினி பற்றித்தகிக்கும்படி செய்தனன். அப்போது விட்டுரனும் சேனைகளும் அந்த வெப்பம் தாங்காமல் ஓடிப்போனுர்கள்.

வரதுங்கன் ஞானோபதேசம் பெற்றது

பின்னர் வரதுங்கன் இவ்வுலக வாழ்வைக் கான்ற சோறெனை வெறுத்து ஞானமடைய வேண்டுமென அவாமேற்கொண்டு ஞானுசிரியன் தெரிசனம் நமக்கு என்று கிடைக்குமெனச் சிந்தித்து இருக்கும் நாளில் முனிவர் குலப்பெருமானுன அகத்தியன் ஒருநாள் பால்வண்ணப் பெருமானைத் தெரிசிக்கும்படி வந்தான்.

அம்முனிவன் வரவு கண்டு அரசன் எதிர் சென்றழைத்து ஓர் பொற்பீடத்து அமர்த்திக் கைகட்டி வாய்புதைத்து நின்று வணக்கத்துடன் சுவாமி! அடியேன் உலக வாழ்வை மெய்யெனக் கருதி இதுகாறும் உழன்றேன். இப்போது உலக வாழ்வை வெறுத்து நித்தியமாகிய மோட்சத்தையடைய விரும்பினேன். அடியேன் உய்யும் வகை அருள் செய்யெனக் கேட்ட முனிவன் அரசன் மன நிலையறிந்து அரச! சின்னுட் கழித்த பின்னர் ஓர் ஞானுசிரியன் இப்பதிக்கு வருவான். அவனுல் உனக்கு வேதாந்த ஞானம் உபதேசிக்கப் படுமென உரைத்துச் சென்றுன்.

சிலகாலம் சென்றபின் மகாராட்டிர தேசத்திலிருந்து அடையோகம், கருமயோகம், ஞானயோகம் சாதித்த இந்திரிய நிக்கிரக தவசிரேட்டனுன பாலசந்நியாசி யொருவன் அரசன் அவைக்களத்து வந்தனன். அம்முனிவன் வரவு கண்ட அரசன் ஆசனம் விட்டெழுந்து எதிர் சென்று அழைத்து வந்து ஒரு பொற்பீடத்திருக்கும்படி செய்து சோடசோபசாரம் செய்து அப்பெரியோனை நோக்கி "தேவரீர் வசிக்குமிடம் யாது? நமது திருநாமம் யாது? இங்கு வந்த காரியம் யாது? உரைக்கவேண்டுமென்று" சொல்லினன்.

அப்போது சந்நியாசி அரசனை நோக்கி அரசே! நமக்கு வசிக்குமிடம் இன்ன இடந்தான் என்பதில்லை உலகோர் சௌமியானந்தரென நம்மைச் சொல்வார். ஐயமேற் றுண்ணும் நமக்கு உன்னிடத்து வேண்டுவது ஒன்றும் இல்லை என்று சொல்லலும் அரசன் தனக்கு முன்னம் அகத்தியனுல் சொல்லப்பட்ட ஞானுசிரியன் இவனேயென உன்னி அத்தவசிரேட்டனை வணங்கி தனக்கு முன்னம் அகத்தியன் சொன்னதும் சொல்லிப் பிறவிப் பெருங்கடலில் கிடந்து கரைகாணுது தியங்கும் அடியேனுக்குத் திண்பெரும் புணையொன்று கிடைத்தது போலத்தேவரீர் பொற்பாத தெரிசனம் கிடைத்தது. அடியேனுய்யும்படி ஞானஉபதேசஞ் செய்தருள வேண்டுமென்று பிராத்தித்தான்.

அப்போது முனிவன் மகிழ்ந்து அரசன் பரிபக்குவ நிலையுணர்ந்து அரசே! நீ விரும்பியவாறு செய்வோமென, அம்மன்னனுக்கு விஞ்ஞான திட்சைகள் செய்வித்து, பாசத்தை யொழித்து முத்திபஞ்சாக்கரத்தையும் ஞானயோகத்தையும் உபதேசித்து திருவடி சூட்டியருளினுன். வரதுங்கன் அவ்வுபதேசப் பொருளைக் கேட்டுச் சிந்தித்து நிட்டையிலமலர்ந்து சிவானந்தம் அடைந்து இல்லற ஞானியாய் விளங்கினுன்.

வரதுங்க பாண்டியன் சோலைநகரடைந்தது

அவ்வாறு விளங்கிய ராஜஞானியான அரசனுக்கு இருவினையொப்பு மலபரிபாக முற்றமையால் பரமேசனுன சிவபெருமான் திருவருளால் அக்கருவைத் தலத்து ஐந்து கூப்பிடு தூரமுள்ள இடமெங்கும் சிவலிங்கங்களாகத் தோன்றக் கண்டு அரசன் காலால் மிதிப்பதும் மலசலாதி கழிப்பதும் அபசாரமெனக் கருதி அந்நகரில் வசிப்பதற்குப் பயந்து அந்நகரத்துக்கு அரையோசனை தூரத்தில் வடபாலிருக்கும் தேவிநதி பராசரநதியின் கரையருகில் ஓர் நகரம் நிருமாணம் செய்து அந்நகருக்குச் சோலைநகரென பெயரிட்டுத் தன்மனைவியரோடும், மந்திரிபிரதானிகளோடும் சதுரங்கசேனையோடும் சுபமுகூர்த்தத்தில் நகரப்பிரவேசம் செய்து அரண்மனை புகுந்து சதாசிவ சிந்தையுடன் அரசாட்சி புரிந்து வந்தான்.

அதிவீரபாண்டியன் வரதுங்கனுக்கு நைடதம் அனுப்புதல்.

அந்நாளில் வரதுங்கன் தம்பியான அதிவீரபாண்டியன் வடமொழியிலிருந்த நளன் சரிதையைத் தமிழில் மொழி பெயர்த்து காவியமாக இயற்றி அக்காவிய முறையைத் தன் முன்னோன வரதுங்கனுக்கு ஒரு தூதன் வசம் கொடுத்தனுப்பினுன்.

தூதுவன் கொண்டுவந்த காவியத்தை அரசன் கண்ணுற்று அந்தோ! நம் அருமைத்தம்பி அதிவீரன் கல்வியறிவிற் சிறந்தவனுக இருந்தும்,

" பொய்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள் "

என, சைவ சமய ஆசிரியரும், தம்பிரான் தோழருமான சுந்தர மூர்த்தி நாயனுர் சொன்னதையறிந்தும் மின்போலத்தோன்றி மறைந்த ஓர் அரசனைக்குறித்துப் புகழ்ந்து பாடி வாணுளை வீணுளாக்கினனே என்று வருத்த முற்றுத்தான் பாடிய கருவைக் கலித்துரையந்ததாதியிலுள்ள,

" சங்கக் குழையனைத் தென்கரு வாபுரித்தாணுவைவான்
கங்கைச் சடையனைப் பாடல்செய்யாத கவிப்புலவீ
ரங்கச் சுமைகொண் டெ ழுநான்கு கோடியருநரகப்
பங்கத்தில் வீழவன் றேபொன்று வார்தமைப் பாடுவதே."

என்னும் செய்யுளை வரைந்து தன் அன்பிற் சிறந்த இளவலாகிய அதிவீரனுக்குக் கொடுத்தனுப்பினுன். தன் தமயன் தனக்கு அனுப்பிய அக்கவியை அதிவீரன் கண்டு கோபித்து இவ்வாறு சிந்திப்பதாயினுன்.

நாம் நெடுநாளாய் சிரமப்பட்டு அருமையாய்ப் பாடிய இக்காவியத்தையும் நம் கல்வித்திறனுமறியாது இகழ்ந்தனன். இக்காவியத்தில் நரஸ்துதி இருப்பினும் நாம் பாடிய கவியின் அருமை பெருமை நோக்கியேனும் புகழவேண்டு மன்றே? மேலும் இக்

காவியத்தலைவன் சாமான்யனு? சத்திய விரதம் பூண்டு நீதி வழுவாது அரசு செலுத்திய சக்ராதிபன் அல்லனோ? இவற்றை யெல்லாம் யோசியாமல் பொருமை மேற்கொண்ட தாலல்லவோ, நம்மை இங்கு நிந்தித்தான். இத்துன்மார்க்கனை மூத்தோனென்று பாராமல் நமது சதுர்வித சேனையைக்கொண்டு அவன் செருக்கை யகற்றி அவமானப்படுத்த வேண்டுமென்று கருதி போர்க்கோலங் கொண்டு யுத்த சன்னத்தனுய் நால்வகைச் சேனையுடன் புறப் பட்டுத் தமையன் அரசாட்சி செய்யும் சோலைநகருக்கு ஐந்து கூப்பிடு தூரத்தில் தன் சேனையை இறக்கி ஒரு தூதனையழைத்து நம்மையும், நம் காவியத்தையும் இகழ்ந்த நம் முன்னேனை வரதுங்கன் இடத்துச்சென்று நம்முடன் போருக்கு வரவேண்டு மெனச் சொல்லி அனுப்பினுன்.

அத்தூதன் சோலைநகரடைந்து சபாமண்டபத்தில் வீற்றிரு க்கும் வரதுங்கனைக் கண்டு வணங்கி அரசே! நின் இளவல்தான் செய்த காவியத்தையும் தன்னையும் இகழ்ந்த உன்னுடன் போர் செய்யக் கருதி இந்நகர்ப் புரத்து வந்திருக்கின்ருன். அதிசீக்கிரமாக யுத்தத்திற்கு அழைத்தானென்ன விண்ணப்பித்தான்.

அதுகேட்ட வரதுங்கன் புன்னகை புரிந்து நம் அனுசன் அதிவீரன் வருந்திச் செய்த காவியம் நரஸ்துதியாக இருக்கிறதே. ஆத்ம லாபத்தைப் பாடிலனே. என அனுதாபப்பட்டு அவன் நன்மையைக் கருதிச் சொன்ன வார்த்தை அவனுக்குத் தின்மை யாயிற்று. நம்மோடு யுத்தம் புரிய வந்தனன் போலும். "தாரம் வாய்த்தது வள்ளுவர்க்குத் தம்பி வாய்த்தது இராமனுக்கு" என் பது போல எல்லோருக்கும் உத்தம சகோதரர் வாய்ப்பது அரிது என்று நினைத்துத் தன் தம்பி அதிவீரனுக்குக் கொண்டு வந்த தூதனிடம்,

"செஞ்சுடரோன் மைந்தனையுந்தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே — மிஞ்சு
விரதந்தனைக் கொண்டு மெய்யன்பு பூண்ட
பரதனையும் ராமனையும் பார், "

என ஒரு வெண்பாப்பாடி ஒரு சீட்டில் வரைந்தனுப்பினன் அதனைத்தூதன் கொண்டுபோய் அதிவீரனுக்குக் கொடுக்க அதிவீரனும் வாங்கி சாந்தகுணக்கடலாகிய நம் தமையன் வரைந்து அனுப்பிய கவியைக்கண்ணுற்று உள்ளம் நெக்குருகி அந்தோ! என் அருமை பிதாவுக்கு ஒப்பான தமையன் எனக்குப் போதித்த நற்புத்தியைத் துற்புத்தியாக நினைத்து ஒருவன் தன்கையைக் கொண்டு தன் கண்ணைக் குத்திக்கொள்ளல் போல என் தமையனோடு போர் புரிவதற்குவந்தேன். ஆ ஆ சகோதரத்துரோகியானேனே நான் எவ்விதம் என் தமையன் சந்நிதானத்தில் செல்வேன் என்று துன்புற்றுச் சகல சாத்திரமுங் கற்றுணர்ந்த வேதியர்களை அழைத்து அவரிடத்துத்தனக்குற்ற பாவத்தைச் சொல்லி இந்த தோஷம் நீங்குதற்குரிய பரிகாரஞ் சொல்ல வேண்டுமென்று சொல்ல அம்மறையோர் அரசே! உன் தமையனுடன் போர் புரிய வந்த பாவம் தீர வேண்டுமானால் சிவலிங்கப் பிரதிட்டையும் அந்தணர்க்கு ஆலயமும் செய்து உம் முன்னோனையும் வணங்க வேண்டுமென்று சொல்ல அவர் உரைத்தபடியே சிவலிங்கப் பிரதிட்டை முதலிய செய்து பனைவிருட்சங்கள் சூளப்பட்ட அந்நகருக்குத் தால நகரென்றும் பனையூர் என்றும் பெயரிட்டு அதில் அநேக வேதியரைக் குடியிருத்தி வேண்டுவகொடுத்து, பின் அந்நகரத்துக்குக் கீழ்பால் உள்ள கருவையம் பதியடைந்து உலகீன்ற முதல்வியான ஒப்பனையம்மையுடன் பால்வண்ணநாதரையும் தெரிசித்து, அப்பதியிலிருந்து வடபக்கமிருக்கும் சோலை நகரடைந்து அரண்மனை புகுந்து அருளே திருவுருவமாகக் கொண்டிருக்கும் தம் தமையன் வரதுங்கனைக் கண்டு சிரமேற் கரங்கூப்பி அடியற்ற மரம் போல அவனடியில் வீழ்ந்து நின்று எழுந்து புகலுவான்.

என் அன்பிற் சிறந்த பெரியோய்! அடியேன் பேதமையால் பிரபஞ்சமாயையுடன் கிடந்து கட்டுண்டு நரஸ்துதி செய்து பாவத்துக்காளாகாமல் சீவ காருண்யத்தால் எளியேன்கெடாத வண்ணம் போதித்த புத்தியைச்சிறிதும் யெண்ணாமல் உனக்குத் தீங்கிழைக்க நினைத்த சிறியேன் பிழை பொறுத்து அடியேன் உய்யும்படி அருள் செய்ய வேண்டுமென்று வேண்டினன்.

அதிவீரன் உரைத்த அனைத்தையும் கேட்ட வரதுங்கன் அருமைத்தம்பியை மார்புறத்தழுவி என் ஆருயிர்த்தம்பியே நீ செய்த குற்றத்தை மன்னித்தேன். நீ செய்த நரஸ்துதியில் உனக் குற்ற பாவம் தீர காசித்தலம் சென்று வடமொழியிலிருக்கும் காசிப் புராணத்தை தமிழில் பாடுக. எனத் திருவாய் மலர்ந்தருளினன்.

அதிவீரன் காசிக்குப் போதல்.

அப்பால் அதிவீரன் அமைச்சரித்து ராச்சியத்தை ஒப்புவித்துத்தன் தமையனை வணங்கி விடை பெற்று ராசவேடத்தை மாற்றி தவவேடம் கொண்டு புறப்பட்டு காசித்தலம் புகுந்து தனையடைந்தோர் பாவந்தீர்க்கும் கங்கையில் மூழ்கி தூய சிந்தையனுய் பரமதயாநிதியான விசுவேசனைத் தொழுது வணங்கித்தரிசித்து அவனருளால் காசித்தலமான்மியத்தை தமிழிற்பாடி அக்காசிப்பதியில் அதிவீரன் இருந்தான்.

வரதுங்கன் மோக்க மடைந்தது.

அதிவீரன் அங்ஙனம் இருக்கும் நாளில் சோலை நகரை ஆட்சி செய்திருந்த வரதுங்கன் சிவஞான முதிர்ச்சியடைந்து அதிதீவிர பக்குவமுணர்ந்து அவனுக்கு அருள்செயக் கருதி மூவா முதற்பொருளான முகலிங்கப்பெருமான் ஒருநாள் அரசன் கனவில் தோன்றி எமதன்ப! வரதுங்கா! நீ விரும்பிய வண்ணம் நம் சோதியில் கலக்கும் நாள் கிட்டியது இப் பாவக் கலியுகத்தில் உன் போன்ற உத்தமர் இருப்பது பெரும் பாவமாகும். பேய்த்தேருக் கொப்பான நின் ராச்சியத்தையும் செல்வமனைத்தையும் தயாளசிந்தையுடன் வேதியருக்கும் தேவாலயங்களுக்கும் கொடுத்து இவ்விருத்தியை விடுத்து அகக் கண்ணுல் எம்மைக் கண்டு நம்,பாத நிழலை அடைந்து அஞ்செழுத்தைத் தியானித்து நிட்டை புரிந்து முத்தியை அடைதி என அறைந்து மறைந்தான்.

அரசன் நித்திரை தெளிந்தெழுந்து சிவபெருமான் கனவில் வந்தருளிய அருட்செயலை நினைந்து நினைந்து நாயினும் கடையனுகி என்னையும் ஒரு பொருளாகக் கொண்டு அருள் செய்வான் எழுந்தருளினனே, எம்பெருமானுக்கு நான் என்ன கைம்மாறு யாது செய்ய வல்லேன் என்று அப்பெருமானின் திருவருளை வியந்து ஆனந்த சாகரத்தினுள் மூழ்கியிருந்தனன்.

பின்னர் வைகறையெழுந்து காலைக்கடன் முடித்துச் சபா மண்டபம் சென்று இறைவ னஞ்செழுத்தை யிதயத்திலிருத்தி சபையிலுற்ற அமைச்சர், வேதியர் முதலியோரை நோக்கி இதனை விளம்புவான்,

ஓ, சபையோர்காள்! யான் நுமக்கு இப்போது சொல்லத் தொடங்கு மாற்றமானது நுமது மனத்தை மிகவும் வருத்தமுறச் செய்யும். ஆனுல் எனது ஆத்மலாபத்தைக் குறித்ததாயிருப்பதால் மகிழ்ந்து கேட்பீராக. இப்போது இவ்வுலக வாழ்வைத் துறந்து தூயசிந்தனையுடன் உண்மை ஞானத்தைக் கடைப்பிடித்து முத்தியடைவா யென்று எனக்குச் சிவபெருமான் கட்டளை பிறந்திருக்கிறது. யான் இனி ஆண்டவன் கட்டளைக்குப் பின் வாங்குதல் கூடாது என்று மனஅன்பில் சிறந்த நும்மைவிட்டுப் பிரியும் காலம் கிட்டி விட்டது. ஆதலால் எனது இராச்சியங்களையும், திரவியங்களையும் பிராமணர்களுக்கும், தேவாலயங்கட்கும் தானம் செய்ய நிச்சயித்திருக்கிறேன் என்று கூறுவான்.

அதுகேட்ட சபையோர் மனம் கலங்கி அரசனை நோக்கி வேந்தே! நின் வார்த்தையானது எமக்கு வேதனையைக் கொடுக்கிறது. எல்லாப் பாரங்களையும் அன்புடன் தாய்போல் பரிபாலித்துக்கொண்டிருந்த நின்னைப்பிரிந்து வாழ்ந்திருக்க எமது மனம் பரிதபிக்கிறது. இவ்விராச்சியத்தைத் தானம் செய்து விட்டால் மாலுமி இல்லா கப்பல் போல் நாடு துன்புறும் ஆதலால் அறிவிற் சிறந்த அரசே நினது பட்டமகிஷியான சிவகாம சவுந்தரி இடத்தில் இராச்சியத்தை ஒப்புவித்து அரசு புரிந்தருளும்படியும், நின் கருத்தின்படி அவ்வரசி அந்திய காலத்தில் தேவாலயங்களுக்கும், அந்தணர்களுக்கும் தானம் செய்யும்படி சாசனமெழுதிக் கொடுத்தருள்வது நம்மையாயிருக்கு மென்று வேண்டிக்கொண்டனர்.

அப்போது அரசன் சபையோர்களின் கருத்துக்கிசைந்து ஆண்டு மன்னன் பணிக்கு எதிர்பார்த்து நிற்கும் காரியஸ்தர்களால் தான சாசனத்திற்குரிய தாம்பிரப்பட்டயத்தில் தன்னி ராச்சிய முற்றிலுமுள்ள நதிப்பாசானமுள்ள வயல்களும், மழையினுல் விளைகின்ற பூமிகளும், சோலைகளும், மலைகளும், காடுகளும், அரண்மனைகளும், பொக்கிஷங்களிலுள்ள பணக் குவியல்களும், ஆபரணங்களும், வாகனங்களும் மற்றுமுள்ள யாவும் ஆலயங்களுக்கும், பிராமணர்களுக்கும் தரும சாசனமாக எழுதி வைத்து தன் அன்பிற்சிறந்த பாரியாகிய சிவகாம சௌந்தரியை யழைத்துச் சொல்லலுற்ருன்.

என் உயிரினும் சிறந்த அருமைக்காதலியே! இப்பொழுது இவ்வுலக வாழ்வைத் துறந்து முத்தியடையும்படி திருக்களாவுடையான் கட்டளை பிறந்திருக்கிறது. ஒருவன் இல்லறத்தை நடத்துவதற்கும், மோட்கத்தை அடைவதற்கும் துணையா இருப்பது அவனது மனைவியே ஆதலால், சிவபெருமான் கட்டளையிட்டருளியபடி தவநிலை அடைதற்கு மனந்துணிந்தேன். இவ்விராச்சியபாரத்தை ஏற்றுக்கொண்டு என்னுல் யெழுதி வைக்கப்பட்ட தரும சாசனப் பட்டயத்தில் கூறியுள்ள சொத்துக்களை உன் அந்திய காலத்தில் தேவாலயங்கட்கும், பிராமணர்களுக்கும் தானம் செய்வதற்கு உனக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன் இவ் விராச்சியத்தை நீயே கைக் கொண்டு அரசு செலுத்தி வருவாய் என்று கட்டளையிட்டான்.

அதுகேட்ட சிவகாம சவுந்தரி அனலில் பட்ட புழுப்போல் மனம் பதைக்க, கண்ணீர்ததும்ப, வாய் குழற, மதிமயங்கிச் சிறிது நேரம் கழித்து மனம் தேறி தன்கணவனை வணங்கி யென் ஆருயிர்த்துணைவா! உன்னை மணம் செய்த நாள்முதல் இன்று நாள் வரையும் 'குலமகட்குத் தெய்வம் கொழுநனே' என ஆன்ருேர் கூறியபடி உன்னையே தெய்வமாகக் கொண்டும், உன் சுக துக்கங்களை என் சுகதுங்கங்களாகக் கருதி உடலும் உயிரும் போல்

வாழ்ந்து கொண்டிருக்குமடியாளை, உடலிலிருந் துயிரைப்பிரிப்பது போலாகும். இப்பொழுது கூரிய வார்த்தை என்னைப் பரிசோதனை செய்வது போலத் தோன்றுகிறது. அடியேன் தவநெறி நிற்க விரும்பினுல் உன்னையகலாது நிழல்போலத் தொடர்ந்து உனக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கும்படி திருவருள் புரிய வேண்டு மென்று உரைத்தாள்.

அவ்வாறு உரைத்த மாதர்க் கரசியை நோக்கி அரசன் பாவாய்! ஓர் ஊருக்கு நேர்வழியாகச் செல்பவனைக்கள்வர் இடை யில் வந்து வழி மறித்தது போல் சிவபெருமான் திருவருளின் கட்டளைப்படியே நிற்கும் என்னிடத்து உலக மார்க்கத்தை யெடுத்துப் பேசுகின்ருய். இது பொருத்தமாகாது. (கற்புடைய மகளிர்கள் இயற்கை தன் கணவன் சொல் மாறுபடாமல் நடப்பதல்லவோ!) ஆதலால் யான் கூறியவாறு இராச்சியத்தைக் கைக்கொண்டு நின் அந்திய காலத்தில் தான சாசனப் பட்டயத் திற் கூறியபடி தானம் செய்க எனச் சொல்லித் தன் சொங்கோல் முத்திரையையும், தானசாசனப் பட்டயத்தையும் அப்பெண்மணி யின் இடத்துக் கொடுத்தனன். தன் கணவன் சொல்லைத்தட்டு வதற்குப் பயந்து ஒப்புக்கொண்டு சிவகாமசவுந்தரி அரசு புரிந்தி ருந்தனன். ஓர் நாளில் சிவானந்த நிட்டை புரிந்து கொண்டிருக்கும் முற்றத் துறந்த முனிவனுன வரதுங்கன் தன் நண்பர்களையும் கன் தன்தேவியாகிய சிவகாம சவுந்தரியையும் கடைக் கணித்து அழை த்து அன்பர்காள் யான் சிவபெருமான் திருவருள் நோக்கத்திற்கு உணவாக முழுதும் விழுங்கப்பட்டேன். இந்நாள் பிரணவதேகி யாய் முத்தி நிலையிற் பரிபூரணமடையப் போகின்றேன் என்று சொல்லி யருளினன்.

அரசன் சோதியிற் கலந்தது

"ஆக்கையெனும் புழுக்குரம்பை யணைந்தணையாப் பொருளை
யருளொளியைப் பராபரத்துக் கப்புறமா மறிவை
நீக்கமற மயிர்முனைக்கு மிடமறவெங் கெங்கு
நிறைந்துநின்ற முழுமுதலை நினைவிலெழுஞ் சுடரைப்
பாக்கியங்கள் செய்தனந்தந் தவக்குறை கண்முடிக்கும்
மழவடியார் தமக்குதவு பசுந்துணர்க் கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தா லளவுபடா வொன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியி லடைப்பாம்"

என்னுமோர் கவியும் சொல்லி திருவுருவாக அருள் பிறக்க சற்குருவைச் சிந்தித்துச் சமாதியில் அசைவற நின்றனன். அவ்வமயம் கோடி சூரியப் பிரகாசம்போல் ஓர் மகாசோதி கிளம்பி ஆகாயத்தில் மறைந்தது அவ் வற்புதத்தைக் கண்ட தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். தேவ துந்துபிமுழங்கின. அரசன் பக்கத்தில் நின்ற ஆசாரியர், அமைச்சர், ராஜபத்தினியாகிய அனைவரும் அச் சோதியைத் தெரிசித்து ஆச்சரியங் கொண்டார்கள்.

அவ்வரதுங்கன் தேகவியோகம் அடைந்த காலம் பின் வரும் செய்யுளில் அறிக.

இறுதியிலாப் புகழ் பரவக் கலியுகவாண் டொருநாலா
யிரத்து நானூற்

றறுபதுவி காரியாம் வருடமார் கழிமாத மடர பக்க

மறுவில்சதுர்த் தசியெனுநா ளிற்கருவை யம்பதிப்பால்
வண்ண நாத

னறுமலர்த்தாட் கன்புடையோன் வரதுங்கன் பரமபத
நண்ணினனே.

சிவபிரான் அரசன் வடிவெய்தல்

எல்லாம் வல்ல இறைவனும் பால்வண்ணநாதப் பெருமான் தம் பக்தனுன வரதுங்கன் பத்தியை உலகோர் அறியும் வண்ணம் திருவுள்ளம் கொண்டு தன் கணத்தலைவனுன நந்தியை யழைத்து நந்தியே! நம் அடியவனுன வரதுங்கன் உலகவாழ்வைத் துறந்து நம் சோதியில் கலந்து விட்டபடியால் அவனது பெருமையை உலகோருக்கு அறிவிக்கக் கருதினேன். ஆதலால் நமது கணங்களை அவ்வரசனது பரிகாரங்களாகவும் நமது இடபத்தை அவனது பரியாகவும் கொண்டு நீ அச்சேனைகளுக்குத் தலைவனுக வருவாய் என்று கட்டளையிட்டனன்.

எம்பெருமான் கட்டளையைச் சிரமேற்கொண்டு சிவ கணங்களே வரதுங்கன் பரிவாரங்களாகவும், இடபத்தைக் குதிரையாகவும் அப்பரிவாரங்களுக்குத் தலைவனுகவும் வந்தனன். அங்ஙனம் வந்த பின்னர் அடியவருக்கு எளியவனுகிய பால் வண்ணநாதப் பெருமான் தம் பத்தனுன வரதுங்கனது திருவுரு வங்கொள்ள, திருவுள்ளம் கொண்டு கங்கையையும் பிறை யுடைய சடாமகுடத்தையும் மறைத்த ரத்தின கிரீடம் தரித்து, சர்பாபரணத்தை மறைத்து, மகர குண்டலங்கள் முதலிய ராஜ பூடணங்களணிந்து யானைப்போர்வை, புலித்தோலாடை மறைத்து அரசனுக்குடைய பட்டுப் பீதாம்பரங்கள் தரித்து அவ்வரதுங் கனது வடிவம்போலத் திருஉருக்கொண்டு விடையென்னும் பரி மேல்ஏறி தன் கணங்களென்னும் ராஜ பரிவாரங்களுடன் சோலே நகரிலிருந்து வரதுங்கன் சுவாமிதரிசனம் செய்ய வருவதுபோல் கருவைமா நகரம் வந்து திருக்கோயில் முன் சென்று பரிவிட் டிறங்கி, தன் பரிவாரங்களும் நகர்ச் சனங்களும் புடைசூழ, திருக்கோவிலுக்குள் பிரவேசித்து கற்பக கிரகத்தினுள் சென்று அநேக கோடி சூரிய உதயம் போன்ற ஒரு பெருஞ்சோதி தோற்றுவித்து சுயப்பிரகாச இலிங்கத்துடன் கலந்தனன்.

அதன் பின்னர் இராஜபரிவாரங்களாக வந்த சிவகணங் களும் மறைந்தன. அதுகண்ட நகர் ஜனங்களும் கோவில் அர்ச் சகர் முதலியோரும் ஆச்சரியமடைந்து அரசன் சிவலிங்கத் துடன் ஐக்கிய மானுனென்று புகழ்ந்து தம் தம் மனேக்குப் போனுர்கள், அர்த்தசாமம் பூசை முடித்து திருக்கதவுத் தாளிட்டு அர்ச்சகர் முதலியோர் தம் தம் இல்லம் சென்றனர்,

மறுநாள் காலேயிலெழுந்து நதியில் ஸ்நானம் செய்து அர்ச் சகர் முதலியோர் பூசைசெய்யச் சிவாலயமடைந்து திருக்கத வைத்திறக்க முயன்றபோது திறக்கக்கூடாத நிலைமையிலிருந்த படியால் அனேவரும் திகைத்து நின்ருர்கள், அப்போது திருக் கோவிலிலிருந்து ஓர் அசரீரிவாக்கு விண்ணிலெழுந்தது.

பக்தர்காள்! நமதன்பன் வரதுங்கன் நிட்டையிலிருந்து நம் சோதியில் கலந்துவிட்டபடியால் அவ்வன்பனுக்காக இது முதல் மூன்று நாள்வரை பிரேதா சௌசமடைந்திருக்கின்றோம். ஆதலால் மூன்று நாள்வரையும் நம்மை ஆராதிக்கக் கூடாதென எழுந்தது. அத்தேவ வாக்கைக் கேட்டு அர்ச்சகர் முதலாய சகலரும் திருவருளை நினைந்து புகழ்ந்து கொண்டு சோலைநகரில் அரசனுக்கு நிகழ்ந்த காரியம் அறியும் பொருட்டுக் கருவைமா நகரிலுள்ள சகல ஜனங்களுடன் புறப்பட்டு அரண்மனையில் நிகழ்ந்த யாவையும் ராஜகாரியஸ்தர்களால் அறிந்து கொண்டு கருவைமா நகர் முகலிங்கப் பெருமான் திருவுருக் கறந்தும், மூன்று நாள் வரையும் அபிடேக, நிவேதனம் கூடாதென்று அசரீர வாக்குப் பிறந்ததை அவ்விராஜ காரியஸ்தர் முதலியோரும் திருவருளை வியந்து கொண்டாடினர்.

அதன்பின் ஆசிரியன், அமைச்சர் முதலிய பெரியோர்கள் ஒன்றுகூடி அரசனுக்குச் செய்யவேண்டிய கிரியைக்கு ராசபத்தினிகளொழிய வேறு யார் இருக்கிறார்களென்று ஆலோசனை செய்து சிவகாம சவுந்தரியிடம் சென்று சொல்ல அம் மாதரசி மனம் கொதித்து எனதாருயிர்த் துணைவனை இழந்து இவ்வுடலைச் சுமந்து சஞ்சாரப் பிரேதம்போலத் திரியேன். என் மனதிற்கினிய அரசருடன் யானும் அனுமரணமடைய ஈஸ்வர சாட்சியாக சித்தமாக இருக்கிறேன் என்று புகன்றனன். ஏனைய ராஜபத்தினிகளும் அவ்வாறே கூறினர்.

அது கேட்ட ஆசிரியர் முதலிய சகலருங் கவலையடைந்து இராஜவமிசத்தில் ஒருவருமில்லை. நம் அரசனுக்கு இளையோன் காசி நகரஞ் சென்றுள்ளான். சத்திரியர்க்குப் பிராமணராவது வைசியர் முதலோராவது ஈமக்கடன் இயற்றுதல் முறையன்று. அரசனுக்கு வைதிக கிரமப்படி அந்தியக் கிரியை யெவ்வாறு செய்கிறதென்று திகைத்துக் கொண்டிருந்தனர்.

சிவபெருமான் சத்திரியப் பிரமசாரியாய் வந்தது

அச்சமயத்து அவர்களுடைய மனக்கிலேசத்தை மாற்றவும் அவ்வரதுங்கனது பத்தி மேலீட்டை உலகத்தாருக்கு வெளிப்படுத்தவும் கருதி அடியவருக்கு எளியனுன திருக்களாவுடையான் நரைதிரை முதிர்ந்து ஓர் கிழப் பிரம்மசாரியாய்க் கங்கா தீர்த்தக் காவடியைத் தன் திருத்தோளில் ஏந்தி அவ்விடத்துவந்து காவடியைக் கீழே இறக்கிவைத்துவிட்டுக் கன்றையிழந்த தாய்போல் அரசன் சரீரத்தின் மேல் விழ்ந்து மங்களகரமான திருவாயால் கோவென்று அலறியழுதான்.

அது கண்ட இராஜபத்தினிகளும் ஏனையோரும் இவ்வயோதிகர் அரசன் சரீரத்தின் மேல் விழ்ந்து புலம்புதற்குக் காரணம் யாது? இவர் அரசகுலத்தினராவென ஆலோசித்து அப்பெரியோரைச் சமாதானப்படுத்தி ஐயரே நீவிர் யார்? எதற்காக அழுகிறீர்? நுமக்கும் இவ்வரசனுக்கும் எவ்வகைத் தொடர்புளது? என்று கேட்டனர். அம்முதியோன் அங்குள்ள அனைவரையும் நோக்கி ஓ சனங்காள்! இவ் வரசன் பிதாவைப் பெற்றோனும், என்னைப் பெற்றோனும் சகோதரர் ஆதலால் இவ் வரதுங்கன் என் தமையன் பிள்ளை. என் பிதா என் இளம் பருவத்தில் பரமபதம் அடைந்தனன், பின் யான் மனை வாழ்க்கையைத் துறந்து தேசாந்திரியாய்த் திரிந்து காசி நகரடைந்து இது காறும் அவ்விடத்து வசித்திருந்தேன், இப்போது யான் விருத்தாப்பிய பருவமடைந்திருப்பதனுலும், காசித்தலத்தினுஞ் சிறந்த இக் கருவைத் தலம் யான் பிறந்த தலமாயிருப்பதனுலும், இவ்வரதுங்கன் புத்திரனுக இருப்பதனுலும் என்னை இக் கிழப் பருவத்தில் போஷித்து என் அந்திய காலத்தில் எனக்குச் செய்யவேண்டிய கிரியையியற்றி என்னை நற்கதி சேர்ப்பான் என்ற எண்ணத்தினுலும் இப்பொழுது இவ்விடத்து வந்து சேர்ந்தேன், இவ்வரும் பெறற் புதல்வன் என்னைக் கைவிட்டுப் பிரிந்தனன். இனி யான் என்செய்வேன். அந்தோ! என்று பூமியில் வீழ்ந்து புரண்டு அழுது கொண்டு பின்னுஞ் சொல்வான். ஜனங்காள்!

நாமொன்று நினைக்கத் தெய்வ! மொன்று நினைத்ததென்றபடி இவன் எனக்கு அந்திய காலத்திற் பிதிர்க் கிரியை செய்வா னென்று நினைத்திருந்தேன். இப்போது இவனுக்கு யானே செய்ய வேண்டிய காலஞ் சம்பவித்தது. யாம் பிரமசரியவிரதம் அனுட் டித்து நடக்கிறவன் ஆதலால் இவ்வரசனுக்குச் செய்ய வேண் டிய அந்தியக் கிரியைகளை மூன்று நாளில் முடித்துவிட்டு அநாதி புரத்து அரசனுன திருக்களாவுடையானுக்கு இக் கங்காசலத்தை அபிடேகத்தை விட்டு மீண்டும் காசித்தலம் போகிறேன், ஆத லால் அபரக் கிரியைகட்கு வேண்டும் பிரயத்தனஞ் செய்க வெனப் புகன்றனன்.

அது கேட்ட ஆசாரியனுல் இராஜபத்தினிகளும் மற்று முள்ள யாவரும் நம் அரசனுக்கு அந்தியக்கிரியை செய்தற்கு உரியோர் ஏற்பட்டு விட்டாரென்று கவலைதீர்ந்தது. அக் கிரி யைக்கு வேண்டுவன தயார் செய்தனர்.

பின்னர் சிவகாம சவுந்தரியம்மாள் ஆசாரியனையும் மந்திரி பிரதான முதலான ஏனையோரையும் நோக்கி அரசனுல் எழுதி வைத்த தானசாசனத்திற் காட்டிய சொத்துக்களைத் தானஞ் செய்ய வேண்டும்மென்று நினைக்கிறேன். ஆதலால் நீங்கள் எல்லோருங்கூட இருந்து அத்தானகிரியை முற்றுவித்து என்னைக் கிருதார்த்தையாகும்படி செய்ய வேண்டுமென உரைத்தனள். அவ்வாறே ஆகட்டும் என்று யாவரும் சம்மதித்தனர், பின்னர் சிவகாம சௌந்திரியும் ஏனைய ராஜபத்தினிகளும் ஸ்நானம் செய்து கொண்டு சந்தோஷமாய் அரசனுல் எழுதிவைக்கப்பட்ட தானசாசனங்களை எல்லாம் சபையின் முன்னேகொண்டு வரச் செய்து பால்வண்ணநாதனை மறவாத சிந்தையுடன் இந்திரன், திசாபாலகர், சந்திர சூரியர், சபையிலுள்ள ஆசாரியர் முதலிய யாவரையும் சாட்சியாக வைத்துப் பட்டமகிஷியான சிவகாம சௌந்தரி சொல்லலுற்றுள்,

ஓ! ஆசாரிய சுவாமிகளே! எனது பத்தாவான அரசனுடைய கட்டளையின்படி ஸ்ரீ பால்வண்ண நாதப்பெருமான் ஆலயத்திற்கு சிலபூமிகளும், கிராமங்களும், மற்றுமுள்ள சிவாலயங்கள், விஷ்ணு ஆலயங்களுக்கும், சில பூமிகளும், கிராமங்களும் தானம் செய்கிறேன். இதுவுமன்றி அரசனுல் அனுபவித்த சகல போக வஸ்துக்களும், பொக்கிசங்களும், இராஜதானியாகிய நகரங்களும், சிம்மாசனமும் தானம் செய்கிறேனென்று தரும சாசன தாமிரப்பட்டயத்தில் சிவகாம சவுந்தரி என்று தன் கையொப்பமிட்டு அவரவர்களுக்குக் கொடுத்தாள்.

பின் ஆசாரியனைப் பார்த்து சுவாமிகாள்! அரசன் பரிபூரணமடைந்த மார்கழிமாதம் அமரபக்கம் சதுர்த்தசியாகிய தினத்தில் அரசனையும், ஏனைய ராஜபத்தினிகளையும் உத்தேசித்து, சிரார்த்தம் பிராமணபோஷனம் முதலியன செய்து அத்தினத்தில் கருவைமா நகரில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பால்வண்ண நாதப்பெருமானுக்கு அபிடேக அலங்காரம் சோடசோபகாரம் முதலிய ஆராதனங்களும் செய்து அன்றிரவு அதிக விமரிசையாக எம்பெருமானை இடபவாகனத்தில் எழுந்தரும்படி உற்சவம் முதலியன நடத்த வேண்டுமென்றும் உமது காலம் சென்றபின் உமது வம்சத்தில் உதித்த சந்ததியாரும் அவ்வாறே வருடந்தோறும் நடத்தி வைக்கவேண்டுமென்று சொல்லி, பின்னும் சொல்லுகின்ருள்.

சுவாமிகளே! இவ்விராச்சியத்திற்கு உம்மை எஜமானகை நியமித்திருப்பதால் என்னுல் உமக்குத் தானம்செய்யப்பட்ட சில பூமிகளையும், கிராமங்களையும் நான்குபாகம் செய்து ஒரு பாகத்தை நீவிர் அனுபவித்துக் கொண்டு மற்ற மூன்று பாகங்களை இந்நகர்வாசியான பிராமணர்களுக்கு வெவ்வேருகப் பிரித்துக் கொடுத்து அனுபவிக்கும்படி செய்து இவ்விராசதானிகளிலுள்ள சகல போகமும் நீரே அனுபவித்துக்கொண்டு அரசாட்சி புரிந்தருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டனள். ஆசாரியனும் அவ்வாறே ஆகுக எனச் சம்மதித்தனன்.

அதன் பின் சிவகாம சவுந்தரி தன்னுடைய மந்திரி பிர தானிகளையும் மற்றுமுள்ளோர்களையும் பார்த்து அன்பர்காள்! யான் அரசன் உத்திரவின்படி இவ்விராச்சியத்தையும், சகல பாத்தியதையும் ஆசாரியர்க்கும், அந்தணர்களுக்கும், ஆலயங் களுக்கும் தானம் செய்து விட்டமையால் இதன் முன் எமக்கு கீழ்ப்படிந்து நடந்ததுபோல் ராசவிசுவாசிகளாகிய நீங்கள் இவ் வாசாரியின் கட்டளைக்குக் கீழ்படிந்து நடந்து கொள்ளவேண்டு மென்றும் கட்டளையிட்டு அவ்விராசதானியின் திசைஎல்லைகைவரை தன் பேர் அடையாளமிட்ட முத்திரையை உடைய எல்லைக் கற்களை நட்டுவித்து அந் நாட்டிற்குச் சிவகாம சவுந்தரி சதுர் வேதமங்கலம் என்று திருப்பெயரிட்டு ஸ்ரீ பால்வண்ண நாதப் பெருமானைத் தியானித்து அவனையே சாட்சியாக வைத்துத் தாரை வார்த்தினள்,

அதன் பின் கிழப்பிரமச்சாரியாக வந்திருக்கின்ற சிவபெரு மான் அரசன் சரீரத்திற்குத் திருமஞ்சனம் செய்வித்து ஆடை ஆபரணம், பட்டு, முத்துகளால் அலங்கரிக்கப்பட்ட விமானத் தில் அவ்வரசன் சரீரத்தை ஏற்றுவித்து பற்பல வாத்தியங்கள் முழங்க விமானத்தை எடுப்பித்து ஆசாரியார், மந்திரிபிரதானி, அந்நகரச் சனங்களும் தன்னைச் சூழ்ந்துகொண்டு வரத் தன் கையில் அக்கினி எடுத்துக்கொண்டு, தகனப் பிரதேசம் அடைந்து அங்கே அடுக்கி வைத்திருந்த வாசனை கமழ்கின்ற சந்தனக் கட்டையின்மேல் அரசன் சரீரத்தை ஏற்றிவைத் தனன்.

வைத்தபின் சிவகாம சௌந்தரியானவள் சகல சனங் களுக்கும் கேட்கும்படியாகச் சொல்லுகின்றுள், அரசன் கட்டளையின்படி என்னால் தானஞ்செய்யப்பட்டபூமி முதலான வைகளை வஞ்சகமாக எவன் அபகரித்தாலும் அவன் கொடூர மான பிணிகளால் வருந்தப்பட்டு வம்சம் நாசமடைந்து நரகம் அடைவான் என்று சத்தியமொழி புகன்று ஆசாரியனை நோக்கிச் சுவாமிகாள்! யான் சொல்லியபடி சகல தர்ம காரியங்களையும் நீரும் உமது வம்சத்தாரும் நடத்தி வருவீராகில் உமது குடும்ப மானது சந்திர சூரியர் உள்ளவரை அபிவிருத்தியடைந்திருக்கு மென்று சொல்லி உடன்கட்டை ஏறி ராஜ சரீரத்துடன் ஒன்றிப் படுத்துக்கொண்டனள், அவ்வாறே ஏனைய இருபத்தாறு ராஜ பத்தினிகளும் சிதையின்மேலேறிப் படுத்தனர்.

பின்னர் வயோதிகப் பிரம்மச்சாரி ஆசாரியனை முன்னிட்டு சாஸ்திர விதிப்படி அக்கினிப் பிரதிஷ்டை, மந்திர ஓமங்கள் செய்து அக்கினி எடுத்து, பத்தினிமார்களுடன் கூடிய அரசனது மார்பில் வைத்தனன், அன்பர்க்கு எளியனுன சிவபெருமானது அருமைத் திருக்கரத்தால் அக்கினிப்பிரதானம் செய்த விசேசத் தால் இராஜபத்தினிகள் அனைவரும் தேவசரீரத்துடன் உருத்திர கன்னிகைகளாகித் திருக்கைலாயம் அடைந்தனர். பின் அப்பிரமச் சாரியான சிவபெருமான் மூன்றுநாளும் பிதிர் கிரியைகளை விதிப் படி குறைவற நடத்தி, நாலாம்நாள் அதிகாலைக்கடன் முடித்து தீர்த்தக் காவடியைத் தோளில் ஏற்றிக்கொண்டு கருவைமா நகரத்தை நோக்கிச் சென்றனன்.

அதுகண்ட ஆசாரியன், அமைச்சர் நகர மக்கள் யாவரும் அவர் பின் சென்றனர். இங்கு இப்படி நிகழ ... ... கருவைமாநகரில் அசரீரி வாக்கின்படி நாலாம்நாள் காலையில் அர்ச்சகர் முதலியோர் ஆலயம் சென்று திருக்கதவு திறந்து பால் வண்ணநாதப் பெருமானுக்குத் திருப்பள்ளி எழுச்சி, காலசந்திப் பூசை முடித்துக்கொண்டிருந்தனர். சோலைநகரத்தில் இருந்து வந்த பிரம்மச்சாரி ஆலயத்துக்குள் புகுந்து அதிகார நந்தி தேவர் முன் தீர்த்தக் காவடியை இறக்கிவைத்து சகல சனங்களையும் கடைக்கணித்து புன்னகையுடன் கற்பக்கிரகத்துள் பிரவேசித்து சிவலிங்கத்துடன் கலந்தனர்.

சகல சனங்களும் உள்பிரவேசித்த பெரியோனைக்காணுமல் திகைத்து மயங்கிக் கங்காதீர்த்தக் காவடியுடன் இங்கு வந்தோன் எம்மையாளும் சிவபிரானே என்று நினைத்து, எம் அய்யன் தன் அன்பனுக்காகச் செய்த திருவிளையாட்டை நினைந்து உருகிப் பரமானந்த வாரியில் மூழ்கினர். பின்னர் ஆசாரியன் அக்காவடி யில் இருந்த தீர்த்தத்தை ஸ்ரீ பால்வண்ணநாதப் பெருமானுக்கு அபிடேகம் செய்து விதி வழுவாது பூசை நடத்தி இடபவாகனத் தில் எம்பெருமானை வீதி வலம் எழுந்தருளப்படுத்தித் தன் பரி வாரங்களுடன் சோலைநகரை அடைந்தனன்.

காசிநகரம் சென்ற அதிவீரபாண்டியன் வருதல்.

அந்நாளில் காசிநகரம் சென்ற அதிவீர பாண்டியனுக்குத் துக்கக்குறியும், துக்கக்கனவும் தோன்றக்கண்டு மனம் கலங்கி நம் அருமைத் தமையனுக்காவது நம்முடைய நாட்டுக்காவது ஓர் தீங்கு சம்பவித்திருக்க வேண்டுமென்று நினைத்து அதி சீக்கிரமாகப் புறப்பட்டு சில நாளில் தீர்த்தக் காவடியுடன் சோலை நகரடைந்தான்.

தன் முன்னோன் முத்தியடைந்ததும் அவன் தேவிமார் அனைவரும் அவனுடைய சரீரத்தின் மீது சிதையிலேறி சிவலோகமடைந்ததும், ஆசாரியான் உரைக்கக்கேட்டு துக்கங்கொண்டு தன் தமையனுக்குத் தான் செய்ய வேண்டிய தர்ப்பணம் முதலிய பிதிர்க்கடன்களைச் செய்து முடித்துக்கொண்டு ஆசாரியன் முதலிய சனங்களுடன் வீற்றிருக்கும் போது அதிவீர பாண்டியனை நோக்கி ஆசாரியான் சொல்லுகின்றான்.

அரசே! நின் தமயன் வரதுங்கபாண்டியன் அரசுபுரிந்து கொண்டிருந்த நாளில் சிவபிரான் கட்டளையின்படி தன் இராச்சியத்திலுள்ள சகல சொத்துக்களையும் சிவாலயங்களுக்கும், வேதியர்களுக்கும் தருமதான சாசனமெழுதி வைத்து இராச்சியத்தைத் தேவியான சிவகாம சவுந்தரியிடம் ஒப்புவித்து அந்திய காலத்தில் தான சாசனத்தில் கூறியபடி சொத்துக்களைத் தானம் செய்து விடும்படி அம்மாதரசிக்கு உத்தரவிட்டனன். அதன் பின் அந்திய காலத்தில் சிவகாமசவுந்தரி தேவாலயங்களுக்கும், பிராமணர்களுக்கும் சொத்துக்களை எழுதிவைத்ததையும் கருவை மாநகரத்தில் மூன்று நாள் வரையும் திருக்கோவில் கதவு திறக்கக் கூடாதென்று அசரீரி வாக்குப் பிறந்ததையும், சிவபெருமான் வந்து தகனக் கிரியை நடத்தி வைத்ததையும், ராஜபத்தினியாகிய இருபத்தேழு பேரும் சிதையிலேறி மோட்சம் பெற்றதையும், நாலாவது நாள் தீர்த்தக்காவடியுடன் கருவை மாநகரம் திருக்கோவிலுக்குள் சென்று கற்பக்கிரகத்துள் பிரவேசித்து சோதியில் கலந்ததையும் நிகழ்ந்தன யாவும் விரித்துக் கூறினன்.

இவ்வாறு ஆசாரியன் உரைத்த அனைத்தையும் கேட்டு அதிவீரபாண்டியன் தன் முன்னோன் வரதுங்கன் அடைந்தபெரும் பேற்றையும் நினைத்து அக்கருவை மாநகரம் சென்று பால்வண்ண நாதப்பெருமானைத் தெரிசித்துத் தான் கொண்டு வந்த கங்கா சலத்தை அப்பெருமானுக்கு அபிடேகம் செய்து அன்பு மேலிட்டால்

“ புரி சூழ்ந்த வலம்புரியுஞ் சலஞ்சல முங்கிடந்த கடல்
புடைசூழ் சக்ர
கிரிசூழ்ந்த பெரும்புவனத் தலமனைத்துந் தேடியுங்
காண்கிலன் யானிந்நா
ளரி சூழ்ந்து மலரயன் சூழ்ந்த மரரொடு முனிவரர்
சூழ்ந்தன் பினேத்தக்
கரிசூழ்ந்த நகரமர்ந்த கருங்களவின் வெண்கனியைக்
கண் கண்டேனே.

என்னும் கவியொன்று கூறி தன் ராஜதானியாகிய தென்காசி நகரடைந்தனன். வரதுங்க பாண்டிய மகாராசன் பரிபூர்ணமடைந்த மார்கழி மாதம் அமரபச்சம் சதுர்த்தசியாகிய தினத்தில் ஒவ்வொரு வருஷமும் அன்று முதல் இன்று வரை ஸ்ரீ பால்வண்ணப் பெருமானுக்கும் ஒப்பனை அம்மாளுக்கும் அபிடேக அலங்காரமும் ரிஷப வாகன வீதிவுலா உற்சபமும், சோலை மாநகரில் சிரார்த்தமும் பிராமணபோஷனமும் சிவகிரி சமஸ்தானத்திலிருந்து நடத்தப்பட்டு வருகின்றன.

உலகம் போற்றுவிக்கும் வரதுங்கபாண்டியன் கதையைப் படித்தோரும், அன்போடு கேட்டோரும் தன் பாவங்கள் நீக்கி சிவபெருமானுடைய பாத நிழல் அடைவார்கள் என்பது திண்ணம்.

வளர்க செந்தமிழ்! ஓங்குக வரதுங்கன் புகழ்!!

வரதுங்க பாண்டிய மகாராஜன் சரித்திரம் முற்றுப் பெற்றது.



ஸ்ரீ ஒப்பனை அம்பாள் அருமைத் திருவுரு

இரண்டாவது

உமையவள் தவமும் - சிவபெருமான் சகள நிட்கள உருவம் காட்டிய வரலாறு.

உலகத்தின் உயிர்கள் உய்யுமாறு உமாதேவியுடன் சிவ பெருமான் கையிலையில் வீற்றிருக்கவும் அரிபிரம்மாதியரும், தேவாதி தேவரும் சதாகாலமும் வந்து பெருமானை வழிபட்டு வேண்டியன பெற்றுப் போவார்கள். அப்போது உமாதேவி இறை வனை நோக்கி விந்தையாக ஒன்றை நினைத்துச் சொல்லலுற்றாள் அய்யனே! என்னை இமைப்பொழுதும் பிரியாமல் இருக்கின்றீரே எவ்வாறு உயிருக்கு உயிராய் அவரவர் செய்த வினையை அடையும் படி எங்கும் வியாபகமாக இருப்பதை அடியேனுக்குத் தெளிவு பெறச் சொல்ல வேண்டுமென்று கேட்கலுற்றாள்.

இறைவன் புன்சிரிப்பு விளங்க நங்காய்! உன்னைப்பிரியா மலிருந்தே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் முதலிய ஐம்பெரும் தொழில் நடத்துவம், பதினுன்கு உலகமும் நமது சத்தியால் சூரியனைக் கண்ட மலர்போல் செயல் படச் செய்வோம். உயிர்கள் செய்யும் வினைப்பயனுக்கெல்லாம் சாட்சியாக இருப்போம். அவரவர் வினைப்பயனை அவரவரே அனுபவிக்குமாறு செய்வோம். கனமங்களே வினைப்பயனைத் தந் தாலும் என் செயலல்லாது கன்மங்கள் பயனைத்தராது. மேலும் சகள நிட்களமாகி உலகில் இருப்போம். முகலிங்க ரூபமாகவும் காட்சி யளிப்போம். தேவியே! நீ, இதைக் காண்பதரிது என சொல்லலுற்றார்.

தேவியானவள் சிவபெருமானை அடிபணிந்து ஐயனே! அச் சகள நிட்களமுடைய முகலிங்க ரூபமாக அருள் செய்ய வேண்டு மென்று அடி பணிந்து பிரார்த்திக்க. தேவியே! நீ, பூவுலகில்

சென்று அரிய தவம் செய்வாயாயின் சகள நிட்களமாகிய முக லிங்க வடிவத்துடன் தெரிசனம் உனக்குக் கொடுப்போமென அருளிச்செய்ய, உமாதேவியும் அவ்வாறு தவம் செய்வதற்குச் சிறந்த தலம் ஒன்றைச்சொல்ல வேண்டுமென்று கேட்கலுற்றாள்.

சிவபெருமான் தேவி உரைத்த மொழி கேட்டு பூவுலகில் தெக்கண கயிலாயமென விளங்கும் திருக்கருவைப் பதியென்னும் தலத்திற்குச் சென்று தவம் செய்யெனக் கூறியருளினார். அய்யன் திருவாய் மொழிகேட்டு உமாதேவியும் அங்கு செல்வதற்கு மன மிசைந்து அரமங்கையர் நடம்புரிய, கின்னரர் கீதம் இசைக்க, வாணி பல்லாண்டு கூற, இலக்குமி அடப்பை தாங்க, கெங்கை கவரிவீச தென்திசை நோக்கித் திருக்கருவைத் தல மடைந்து ஆனந்தத் தாண்டவம் புரியும் பால்வண்ணநாதப்பெருமானை தெரிசித்து, பலவாறாகத் துதி செய்து தன் பணிகள் முற்றும் களைந்து, சடை முடி தரித்து, மரவுறி உடுத்தி, சிரசின்மீது இரு கரங் கூப்பி அநேக காலம் அரிய தவம் செய்யலுற்றாள்.

தேவி தன் அரும் பெருந்தவத்திற் கிரங்கி சிவபெருமான் தேவி முன் தோன்றி தேவியே! இமயமலை உதவும் செல்வியாகி உலகெல்லாம் ஈன்ற தாயாகியவளே அரும்பெருந் தவம் பேணி எல்லாப் பணிகளையும் களைந்தும் குன்றாத அழகு உனக்கு ஏற்பட்டதால் ஒப்பில்லாதவளென ஒரு பேரும் கொடுக்கப்பெற்று சகள நிட்கள ரூபமான முகலிங்க தெரிசனமும் காட்டி அருள் புரிந்தான்.

தேவியானவள் இறைவனைப் பலவாறு தோத்திரம் செய்து நிற்க. இறைவன் கூறலுற்றான். உமையே! நீ பார்ப்பதற்கரிய சகள நிட்கள உகளமான மூன்று உருவமும் கொண்ட முகலிங்க ரூபத்தை உனக்குக் காட்டியருளினோம். வேண்டும் வரம் கேள். என்று கூற எங்கும் நிறைந்த இறைவா! இப்போது நான் கண்ட மூன்று உருவங்கள் அமைந்த முகலிங்க தெரிசனத்தை யாம் உணர்ந்தவாற்றை இத்தினமாகிய ஆவணி மாத பூராட நாளில்

ஆண்டுகள் தோறும் நம்மைப் பூசிக்க வரும் பக்த கோடிகளுக்கு வேண்டிய வரத்தை எனக்குக் காட்டிய முகலிங்க ரூபத்துடன் வழங்க வேண்டுமென்று சொல்ல. அவ்விதமே கொடுத்தோ மென்று இறைவன் சொல்லித் தன் சோதியில் கலந்தனன்.

இறைவி தவத்திற் கிரங்கி முகலிங்க சொரூபம் காட்டிய தால் இத்தலம் உபயபுரி எனப் பெயர் பெற்றது. இன்னும் வருடம் தோறும் ஆவணி மாதம் பூராட நாளில் அம்பிகை தவச உற்சவம் நடைபெற்று வருகிறது.

மூன்றாவது

பால்வண்ணநாதர் திருநாமம் உண்டான வரலாறு.

அசுரரும், சுரரும் பாற்கடலைக்கடைய அதில் வரும் அமுதம் அசுரர்க்கில்லாமல் தேவர்களே உண்டதால் ஒருவருக் கொருவர் விரோதம் ஏற்பட்டு யுத்தம் செய்தார்கள். முடிவில் தேவர்களை அசுரர்கள் வெல்ல முடியாமல் மனவலியிழந்து தோற்றுப்போனார் கள். மீண்டும் தேவர்களை வெல்வதற்குச் சூழ்ச்சி யாதென்று நினைத்துத் தம் குலகுருவான சுக்கிரனிடம் சென்று தம் மனக் குறையைக் கூறிக் கண்ணீர் ததும்ப நின்றார்கள்.

தம் குல குருவான சுக்கிரன் அஞ்சாதீர்கள். நான் செய்யும் தவ வழிபட்டால் ஓர் பாற் தடாகம் உண்டு பண்ணி அதில் வரும் பாலை உங்களுக்கு அளிப்போம். அதை நீங்கள் அருந்தினீர்களா கில் தேவர்களை வெல்லும் ஆற்றல் உடையவர்களாவீர்கள் ஆகையால். தவம்புரிவதற்கு ஏற்ற இடமொன்றைப் பூவுலகில் பார்த்து வாருங்கள் என்று சொல்லுற்றான்.

அதன்படி அசுரர்கள் பூவுலகமடைந்து இமய முதல் குமரி வரைப் பல இடங்களும் சுற்றி முடிவில் திருக்கருவைத் தலம் கண்டு இதுவே தகுந்த இடமென்று தெரிந்து தன் குல குருவான சுக்கிரனிடம் வந்து தன் விருப்பத்தைத் தெரிவிக்க, சுக்கிரனும் அசுர குலங்களோடு கருவைப் பதியடைந்து களாவனத்தில் சூரிய பிரகாசமாக விளங்கும் இலிங்கத்தின் கீழ்பால் அமர்ந்து பலநாட்களாக அரும் பெரும் தவம் செய்யலுற்றான். தவத்தின் மகிமையால் ஓர் பாற்றடாகம் உதித்தது. இதனை இந்திரன் முதலிய முப்பத்து முக்கோடி தேவர்களும் கண்டு நமக்குத் தோற்றுப் போன அசுரர்கள் இப் பாற்றடாகத்தில் பாலை அருந்தினால் நம்மைப் போரில் வெல்லும் ஆற்றல் உடையவராகி எப்போதும் நம்மைத் துன்புறுத்துவார்கள். இதற்கு என்ன செய்வதென்று மனம் கலங்கி மாலயனுக்கு எட்டாத பரம் பொருளாகிய சிவபெருமான் இருக்கும் கயிலையை யடைந்து இரு கரங்களையும் சிரசின்மேல் தூக்கி முன்னம் கடல்விடமுண்டு எங்களைக் காத்தருளிய கருணையங்கடலே! மாணிக்க மலையே! பிறை அணிந்த பெருமானே! என்று பலவாறு தோத்திரம் செய்து சொல்லுகிறார்கள், சுக்கிரன் அசுரருக்காகத் தவஞ்செய்து ஒரு பாற்றடாகம் உண்டுபண்ணினான். அத்தடாகத்தின் பாலை அசுரர்கள் பருகுவாரானால் எங்களைப் போரில் வெல்வர். அவ்விதம் அடியேங்களுக்கு ஏற்படும் இன்னல்களை நீக்கி நல்வாழ்வுபெற அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். இறைவனும் நும் இன்னல்களைக் களைவோம். நீவிர், நும் இருப்பிடம் செல்லுங்கள். அதன்படி மகிழ்ந்து தம் தம் இருப்பிடம் சென்றார்கள்.

அப்பால் தேவர்கள் இன்னல் தீர்க்க இறைவன் கருதி கருவையம்பதி வந்து சோதியில் நின்றும், ஒரு புருட வேடம் கொண்டு சுக்கிரன் பாற்றடாகத்தை நீற்றடாகமாக மாற்றியமைத்தனன். அதுகண்ட சுக்கிரன் என்னால் உதிக்கப்பட்ட பாற்றடாகத்தை நீர்த்தடாகமாக மாற்றிய ஒரு புருடனை அவன் உயிரை வாங்குவேனென்று அவனைத் தொடர்ந்து ஓடும்போது வேதமறைகளுக்கும் எட்டாத புருடன், சுக்கிரனுக்கு அஞ்சி ஓடுதல்போல பாவனை காட்டி, சோதியில் கலந்தனன்.

மறைந்த புருடனைக் காணுமல் பல இடங்கள் தேடியும் அங்கு ஒரு சோதிருபமான சிவலிங்கம் இருக்கக்கண்டு சந்தேகங் கொண்டு இதனை நாம் நிட்டைசெய்து அறிவோமென்று நிட்டை செய்யும்போது சிவலிங்கத்தினின்றும் எழுந்து வந்தவன் சிவ பெருமானே என்று உணர்ந்து, அந்த சிவலிங்கத்தை வலம் வந்து பலவாறு தோத்திரம் புரிந்து நின்ற சுக்கிரனைக் கண்டு, சிவபெரு மான் கருணை கொண்டு சுக்கிரனே! உன் அன்புக்கு நயந்தனம், வேண்டும் வரங்கேளென வினவினுர்.

சுக்கிரன்சொல்லுகிருன். அசுரர்கள், தேவர்களைப் போரில் வெல்ல வேண்டுமென்று வரங் கேட்கலுற்ருன். அப்போது சிவபெருமான் தேவர்கள் எப்போது எம்மை மறப்பார்களோ அப்போது அசுரர் வெல்வார் என்று சொன்னுர். பின்னுஞ் சுக்கிரன் கேட்கலுற்ருன், இத்தடாகத்திற்கு என்னுடைய பெயர் வைக்க வேண்டுமென்றும் இத்தடாகத்திலுண்டான பாலில் நீவிர் படிந்தபடியால் 'பால்வண்ணநாதர்' என்ற திருப் பெயரும், இத்தடாகத்தில் மூழ்கி உம்மை வழிபடுவோருக்கு வேண்டும் வரம் கொடுக்க வேண்டுமென்றுஞ் சுக்கிரன் கேட்க, அவ்வாறே கொடுத்தோம் என்று கூறி இறைவன் சிவலிங்க சோதியிற் கலந்தனன்.

அதன் காரணமாக எம்பெருமானுக்குப் பால்வண்ணநாத ரென்றும் நம்மால் ஏற்பாடுசெய்த புட்கரணிக்குச் சுக்கிர தீர்த்தம் என்றும், பால்தடாகம் என்றும் விளங்கச்செய்து சுக்கிரன் தன் னிருப்பிடம் சென்றனன்,

நான்காவது

கங்கா தேவிக்கு நடன தெரிசனம் காட்டிய வரலாறு.

முன்னொரு காலத்தில் கங்கா தேவி, இறைவன் சடா பாரத்தை விட்டிறங்கி இறைவனை நோக்கிச் சொல்லலுற்ருள். தேவாதி தேவ! நான்முகனுக்காகப் பிரளய காலத்தில் திருமால் பெருமிதம் கொள்ளுமாறு நீ செய்த திருநடனம் என் ஊழ்வினைப் பயனுல் நான் கண்டு தெரிசிக்கவில்லை. உலகமெல்லாம் பொடியாகி எலும்பு உருக பிரளயத்தில் நான் புனல் உருவமானதால் பார்ப்பது தகாதென கண்மூடி இருந்தபடியால் திருநடனத்தைக் காண முடியவில்லை. அடியாளாகிய எனக்கு நடனத்தைக் காட்டி அருள்புரிய வேண்டுமென்ருள்.

சிவபெருமான் கங்கையே! என்னைத் தவ வழிபாட்டின் மகிமையால் பூசிக்காமல் யாரும் எதையும் அடைய முடியாது. நீ! பூவுலகம் சென்று புண்ணிய தீர்த்தங்களில் ஆடி நம்மை வழி படுவாயானுல் உனக்கு நடனம் காட்டி அருள்புரிவோம் என்று வினவ, கங்காதேவி பூவுலகத்தில் புண்ணிய பூமியை எனக்குக் காட்டியருள வேண்டுமென வேண்டிக்கொள்ள;

இறைவன், அம்பிகையானவள் அருந்தவம் செய்து ஒரு சிவலிங்கத்துள் இரு உருவம் கண்டனள். அத்தலமாகிய திருக்களா என்னும் பதியிற் சென்று எம்மைப் பூசிப்பாயாயின் நம் திரு நடனத்தைக் காட்டுவோமென உரைக்க. கங்கையும் தம் தோழியருடன் அப்பதியையடைந்து நிட்சேபகதிதீர்த்தமாடிகளா வனத்தின் அருகில் அமர்ந்திருக்கும் பால்வண்ணநாதப்பெருமானை பல மலர்களாலும், கனிகளாலும் நெடுங்காலம் பூசனை செய்ய, தேவரீர் திருநடனம் கிட்டாமையால் மனம் வருந்தி, அடியேன்

செய்யும் பூசையின் தவறுதலோ அல்லது சடாபாரத்தை விட்டிறங்கி வந்த செய்கைக்காகவோ உன்னைக் காணுதற்குரிய காலம் கிட்டவில்லை என்று பலவாருக இன்னலுற்று நிற்கும் தேவி காணும்படி வைகாசி மாதம் பௌர்ணமி விசாக நாளில் சிவபெருமான் திருநடன வேடம் கொண்டனன்.

நந்தி மத்தளம் கொட்ட, வானம் இடிமுழங்க, திருமால் கைத் தாளம்போட, பிரமன் சாமகீதம்பாட, அமரர்கள் மலர்மாரி தூவ அரகராவென்ற குரல் விண்ணைப் பிழக்க, ஆதிசேடன் உடல் நெளிய, கூழிகளானவர் சங்கநாதம் முழங்க, சமுத்திரத்தில் அலைகள் சுழல, பூதகணங்கள் மனம் கலங்க, திக்குப் பாலகரும், திக்குக் கஜங்களும் தம் நிலையழிய தேவாண்டு நூறுவரை கங்கா தேவி காண ஆனந்தத் தாண்டவமாடினுன்.


தேவன் நடன தெரிசனத்தைக்கண்டு கண்களில் ஆனந்த நீர் ததும்ப இருகரமும் சிரசின்மேல் கூப்பி இறைவா! நினது திருநடன ஆனந்த வெள்ளத்தைக்கண்டு பரவசமடைந்தேன். இத் திருநடனத்தை இலக்குமி தேவி கண்டு அய்யனே! நெடுங்காலம் நடனம் புரிவதால் உன் திருப்பாதம் நோவாமலிருக்க திருநடனத்தை நிறுத்திவைக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ள சிவபெருமான் நடனத்தை நிறுத்தி, கங்கையை நோக்கி உனக்கு வேண்டிய வரம் பெற்றுக்கொள் என்று வினவ. கங்கை இச் சோதிஇலிங்கத்தினின்று நீ நடனம் காட்டியதால் இந்த லிங்கத்திற்குச் சபாலிங்கம் எனப் பெயர் உண்டாகவும், கெங்கைக்குக் கிருபாநதி என்ற பெயரும், பல புண்ணிய நதிகளில் ஆடிய பலன் இந்நதியில் ஆடுவோர் பெறவும், இத்தலத்தில் இறந்தவர்களுடைய எலும்புகள் இந்நதியில் பன்னிரண்டாண்டு கழிந்ததும் இலிங்க சொருபம் பெறவும், இந்நதியில் புண்ணியகாலமாகிய அமாவாசைதோறும் தர்ப்பணம் செய்தோர்க்கு எல்லாம் மூவேழு தலமுறையாதி பிதிர்களும் மோட்சம் பெறவும் வரம் கொடுக்க வேண்டுமென்று கங்கை கேட்க, இறைவன் அவ்வாறே கொடுத்தோம் என்று சொல்லிச் சிவபெருமான் சோதியில் கலந்தனன்.

ஐந்தாவது

ஒப்பனை திருநாமமும், தேவி தீர்த்த வரலாறும்.

கைலாய மலையின்மேல் வெள்ளியங்கிரியில் உமா தேவியும் பரமேசுவரனும் வீற்றிருந்தனர். அப்போது உமாதேவியானவள் பரமேசுவரனைப் பார்த்து தேவரீர்! அனந்தகோடி சூரிய பிரகாசம் போலத் துலங்கும் உமது திருமேனி ஒளிபோல் அடியவளாகிய எனக்கும் கொடுத்தருளல் வேண்டுமென வேண்டிக்கொள்ள இறைவன் புன்சிரிப்புகொண்டு தேவியே அனவரதமும் என்போல் உனக்குத் திருமேனி பிரகாசம் வேண்டின், நீ பூவுலகில் வேண்டுவார் வேண்டுவன கொடுக்கும் திருக்களாவனம் சென்று நிட்சேப நதிப் புனலாடி சூரிய பிரகாசமாக விளங்கும் பால்வண்ணனைத் தவ வழிபாடு செய்வாயாயின் எமது சோதிபோல் நீயும் பெறலாம் என்று கூற.

எம்பெருமாட்டியும் இசைந்து எழுந்தருளிய போது தன் நாயகிக் தச் சேடியாக கங்கையைப் போகும்படி உத்திரவுசெய்ய கங்கையும் உமாதேவியுடன் பூவுலகம் வந்து கருவைத்தலம் அடைந்து நிட்சேப நதியில் மூழ்கித் திருக்களாப் பதியில் அமர்ந்திருக்கும் பால்வண்ணனைப் பல பூசா திரவியங்களால் பூசித்துச் சிவலிங்கத்தின் ஈசானமாகிய திசையில் தவச்சாலை அமைத்துத் தவக்கோலம் கொண்டு பூமியில் வலப்பாதப் பெருவிரலூன்றி அப்பாதத்தின் முழந்தாளில் இடத்தாளை இயற்றி பல காலம் அருந்தவம் புரியலுற்றாள். எம்பிராட்டியின் வலக்கால் பெருவிரல் ஊன்றிய இடத்தில் நின்றும் பாதகங்கை எழுந்து வந்தனள்,



ஸ்ரீ வீரசண்முகர் அற்புதத் திருவுரு

இவ்வாறு உமாதேவி செய்யும் அருந்தவத்திற் கிரங்கி சிவ பெருமான் இறைவிமுன் தோன்றி நங்காய்! உன் தவத்திற்கு உகந்தோம்! உன் நினைவையும் அறிந்தோம். எனது சோதிபோல் உனக்குப் கொடுத்தோம். என் பக்கமாகவே இத்தலத்தில் இரு வென்று சொல்ல, தேவி தன் திருவடிப்பெருவிரலில் நின்று வந்த கங்கைக்கு நீர் வரம் கொடுக்க வேண்டுமென வினவ. இறைவன் உன் திருவடிப் பாதவிரலில் நின்று வந்த இக் கெங்கைக்கு தேவி தீர்த்தமென்று பெயர் கொடுத்தும், இத் தீர்த்தத்தில் மூழ்கு வோருக்கு உலகிலுள்ள தீர்த்தங்களில் யாவற்றிலும் மூழ்கிய பலன் இத் தீர்த்தத்தில் மூழ்குவோர் அடைவர் என்றும், இத் தலத்தில் தவம் செய்த பலனால் ஆரிய பாண்டியன் என்னும் அரசன் இத்தலத்திற்கு வந்து உனக்கும் எனக்கும் ஆலயம்செய்து பிரதிட்டை செய்வானென உரைத்துச் சோதியில் கலந்தான்.

ஆறாவது

சித்திவிநாயகர் — வீரசண்முகர்

திருநாமம் பெற்ற வரலாறு.

திருக்கைலாயத்தில் எல்லாம் வல்ல இறைவன் இறைவி யோடு எழுந்தருளியிருக்கும்போது உமாதேவியானவள் தேவனே! அடியேனுக்குச் சிவராத்திரியின் மேன்மையை நன்கு விளங்கும் படி கூறியருளவேண்டும் என்று வினவ சிவபெருமான் உமையே சிவராத்திரியான தினத்தில் மூன்று உலகத்திலுள்ள நம் சுயம்பு லிங்கத்தைத் தெரிசிக்க வேண்டும். அது முடியாதெனில் ஆயிரம் சுயம்புலிங்கத்தையாவது தெரிசிக்க வேண்டும். அதுவும் முடி

யாதெனில் பஞ்சலிங்க தெரிசனமாகிய பிருதிவி, அப்பு, தேய்வு, வாயு, ஆகாயம் என்று சொல்லப்படும் இலிங்கங்களையாவது தெரிசிக்கவேண்டும். அதன்படி பஞ்சலிங்க தெரிசனம் செய்தால் மூன்று உலகங்களிலுமுள்ள நம் லிங்கத்தைத் தெரிசித்த பலன் கிடைக்கும். தெரிசித்த பலன் பெற்று, நம் பாத தாமரை நிழலில் வீற்றிருப்பர் என்று வினவ, உமையும் சந்தோஷமடைந்திருக்கும்போது, ஆறுமுகத்தோன் தன் தந்தையை நோக்கி நாளை வரும் சிவராத்திரி தினமாகிய இரவில் உலகிலுள்ள லிங்கங்கள் எல்லாம் கண்டு தெரிசிக்க ஆசைகொண்டு நாமே எந்தக் காரியத்தையும் செய்து முடிக்கவல்லவன் என மனக் கர்வம் கொண்டு நம் தமையனை பெருவயிற்றோனுக்கு இந்தக் காரியம் ஆகாதென நினைத்து பெருமானை நோக்கி அய்ய! நான் இம்மூவுலகிலுள்ள இலிங்கங்களைக்கண்டு தெரிசித்து வர ஆசையுடையேன் விடை கொடுக்க வேண்டுமென வினவ, சிவபெருமானும் விடை கொடுக்க, சண்முகன் மயில் வாகனத்திலேறி மூன்றுலகமும் சென்றான்.

அப்பால் முன்னவனை கணபதி தம்பி தன்னை யிகழ்ந்து கர்வமுற்றதையும் தெரிந்து தந்தை சிவபெருமானிடம் சென்று அவன் பொன்னடியை மனத்தில் வைத்து நிட்டை புரிந்தான். அப்போது தன் கருத்தில் எங்கும் பலகோடி இலிங்கம் கூடி நடுவில் சுயம்புஇலிங்கம் ஒன்று தோன்றக் கண்டு தந்தையே நான் நிட்டையிலிருந்து கண்ட சுயம்பு இலிங்கக் காட்சியின் மகிமையை எனக்குத் தெரிவிக்கவேண்டுமென்று வினவ', இறைவன், நீ இப்போது கண்ட சுயம்பு இலிங்கம் அயன் திருமாலுக்கும் அறியமுடியாதது. அதை உன்பால் தோன்றச் செய்தோம். மூன்று உலகத்திலுள்ள சுயம்பு இலிங்கத்துக்கெல்லாம் இது மூலப்பொருளாகிய இலிங்கம். இவ்விலிங்கம் ஞானபாசுரமென்னும் திருக்கருவைத்தலத்தில் உள்ளது. நீ அக் கருவைத் தலம் சென்று சிவராத்திரியில் பூசிப்பாயென அறிவிக்க.

கணபதியும் கருவைத்தலமடைந்து நிட்சேப நதியில் மூழ்கி விபூதி அணிந்து உத்திராக்கம் பூண்டு பஞ்சாக்கரத்தை ஒருமையுடன் ஓதி அவ்விலிங்கத்தின் கீழ் பால் வடதிசை நோக்கி எல்லா இலிங்கங்களையும் பாவனையால் எண்ணிப் பூசை செய்யுங்கால் அச் சுயம்பு இலிங்கத்தைச் சுற்றி பலகோடி இலிங்கங்கள் பல நிறங்களாகவும் புற்றுமண், கோமேதகம், வைடூரியம், மாணிக்கம் முதலிய ஒன்பது வகை மணிகளாலும் விளங்கும் சுயம்பு இலிங்கத்தைக் கண்டு நாம் நிட்டை புரிந்து கண்ட அந்த லிங்கமே இந்த லிங்கமென்று நிச்சயித்துப் பல மலர் வகைகள், சந்தனம், களபம், கத்தூரி முதலியன கொண்டு அபிடேகம் செய்து சிவராத்திரி நாலுசாமப்பொழுதில் பூசித்திருந்தான்

முன்னம் தமையனை இகழ்ந்து மூவுலகமும் உள்ள இலிங்கத்தை தெரிசிக்கக் கருதிச் சென்ற குமரன் எவ்வுலகிலும் ஒரு லிங்கமும் காணுமல் வருந்திக் கடைசியில் கருவைத்தலம் அடைந்தும் களாவனப் பதியில் உதயமாக இன்னும் ஒரு சாமம் இருக்கும் நேரத்தில் பலகோடி இலிங்கங்கள் சூழ நடுவில் சுயம்பு லிங்கத்தைப் பூசித்திருக்கும் தன் முன்ரேனைக் கண்டு சந்தோசித்து முதலில் கணபதியைப் பூசித்துத் தானும் பூசிக்க எண்ணி பூசனைக்குரிய பொருள் முற்றும் கொண்டு சூரியன் உதயமாகும் வரை பூசித்திருந்தனன்,

இவ்வாறு தன் மக்கள் ஆறுமுகனும், ஐந்துமுகனும் செய்யும் பூசைக்கு சுயம்பு இலிங்கத்தினின்று வெளிப்பட்டு மைந்தர்காள்! நீங்கள் செய்த பூசைக்குப் புன்னகை கொண்டனம், வேண்டிய வரம் கொடுப்போம் என்று வினவ இருபேரும் சோதியைத் தெரிசித்து இத்தலத்தில் சிவராத்திரியில் பூசிப்போருக்கு மூன்று உலகத்திலுமுள்ள சுயம்பு இலிங்கத்தையும் தெரிசித்த பலன் கிடைக்க வேண்டுமென வினவ, அவ்வாறு கொடுத்துத் தந்திமுகனைப் பார்த்து இத்தலத்தில் உன்னை வழிபடுவோர் சகல சித்தியும் பெறுவார்கள், ஆனபடியால் சித்திவிநாயகனென்று பெயர் கொடுத்தோம், என்று வின்வி.

இளையோனை நோக்கிக் குமரனே நீ, இம்மூன்று உலகத்தும் உள்ள இலிங்கங்களைக் கண்டு பூசித்து வருவேனென்று வீரத்துடன் சென்றதால் உனக்கு வீரசண்முகர் என்ற பெயரும் கொடுத்தோமென்று வினவ, குமரன் தந்தையை நோக்கி நான் மூன்று உலகமும் சென்று ஒரு இலிங்கமும் காணாதது கண்டு வருந்தி நிற்க, என் முன்னோன் இத்தலத்தில் இலிங்கங்கள் அனைத்தும் கண்ட காரணம் சொல்லவேண்டுமென்று உரைக்கச் சிவபெருமான் உன் முன்னோன் மனத்தில் ஐயமற அன்பு லிங்கமே நாம் என்று நினைத்துப் பூசித்தான், நீயோ கர்வம் கொண்டு மூன்றுலகமும் சுற்றி வந்தாய். அதனால் உனக்குக் கிட்டவில்லை. அதன் மகிமையை இத்தலத்தில் உனக்குக் காட்டி அருள் புரிந்தோம் என உரைத்துச் சோதியிற் கலந்தனன்,

---

ஏழாவது

சூரியன் பூசித்த வரலாறு.

உலகத்திலுள்ள புற இருளை நீக்கும் பொருட்டுச் சூரியனிடம் சில வேதியர்கள் வேதம் படிக்கவேண்டுமென்று விரும்பி சூரியனிடத்தில் வந்து சொல்ல அவனும் நாள்தோறும் அருமையான வேதங்களைப் போதித்து வந்தான், வேதியரும் கல்வி பயின்று வரும் நாளில் ஒருநாள் தேர்ச் சக்கரத்தின் உருளையின் ஒலியால் வேதமுறை தவறி ஓதலும் சூரியன் சினமடைந்து நீவிர் வேதம் சுரம் வழுவிச் சொன்னதால் நீசராவிர் என்று சபித்தார்.

அச் சாபத்தை வேதியர்கள் கேட்டு மனம் தளர்ந்து சூரிய னடியில் விழ்ந்து எளியேம் அறியாது செய்த பிழையைப் பொருத் தருளல் வேண்டுமென்று உரைக்கச் சூரியனும் மனமிரங்கிச் சொல்லலுற்ருன். பகல் மத்திய காலத்து மூன்று நாழிகை வரை நீசம் பெற்றுத் தண்ணிரில் மூழ்கியவுடன் இச் சாபம் நீங்கப் படுமென்று சொல்ல வேதியர் மகிழ்ந்தார். அப்பால் குற்றமற்ற வேதியரைச் சபித்ததால் தன்னுடைய பிரகாசம் குன்றப்பெற்றது.

அதனுல் சூரியன் எல்லாம் வல்ல சிவபெருமானிடம் சென்று தனக்குற்ற குறையைச் சொல்லித் துயர்நீக்கி அருள்புரியுமாறு வேண்டிக்கொள்ள சிவபெருமான் சூரியனே உன் பாவம் தீர வேண்டின் பூவுலகில் கருவைத்தலம் அடைந்து, அப்பதிக்குக் கிழ்பாலுள்ள அமுதவிந்து எனப் பெயர்கொண்ட அமுதாசலத்தை அடைந்து, அதன் மேல்பாலிருக்கும் நதியில் மூழ்கி, சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசிப்பாயானுல் குன்றிய ஒளியைப் பெறலாம் என உரைக்க, சூரியனும் அவ்வாறே திருக்களா பதியை யடைந்து நிட்சேப நதியில் நீராடி, சிவலிங்கப் பிரதிட்டை செய்து பலகாலம் வழிபாடு செய்ய,

ஒருநாள் சிவபெருமான் உமாதேவியுடன் தோன்றக்கண்ட சூரியனும் பலவாறு தோத்திரம் செய்ய, இறைவன் திருவுள்ள மிரங்கி சூரியனே! உன் பாவம் தீர்த்தனம். குறைவில்லாமல் உன் சோதியைக் கொடுத்தோம். நீ மூழ்கிய இத் தீர்த்தத்திற்குச் சூரிய தீர்த்தமென்றும், நீ பூசித்த லிங்கத்திற்கு சூரிய லிங்கம் என்றும் பெயர் கொடுத்தோம். மகா சங்கராந்தி ரதசப்தமி என் னும் நாளிலும் மற்றைய காலத்திலும் இத்தீர்த்தத்தில் மூழ்கிச் சிவலிங்கத்தை வழிபடுவோருக்கு முத்திபெற்று நம் பாதமலரை யடைவார் என்று கூற, சூரியன் பின்னும் சொல்வான். தேவரீர் நின் பக்கத்திலிருக்கும்படி அருள்புரிய வேண்டுமென்று கேட்க, நீ கைலேயில் சென்று சிலகாலம் விமானமாகயிருப்பாய் அப்பால் இத்தலத்தில் எம்மை நீங்காதிருக்க அருள்புரிவோம் என்று கூறிச் சோதியிற் கலந்தனன்.

அவ்வாறே சூரியனும் கைலையில் விமானமாக இருக்க அங்கு சிவபெருமானைச் சேவிக்க வந்த இந்திரன் பெருமான் சந்நிதியிலிருந்த விமானத்தைக் கண்டு ஆச்சர்யங்கொண்டு இறைவன்பாற்சென்று இறைவா! உன் சந்நிதியில் இவ்விமானம் வந்த வரலாறு கேட்க, இறைவன் சொல்லலுற்றான். சூரியன் ஒருநாள் களாவனத்தில் எம்மைப் பூசித்தான், அவன் கேட்டுக் கொண்டபடி இங்கு விமானமாக அமைந்திருக்கிறான். நீ அதை நம் களாவனத்தில் இலிங்கம் பக்கத்தில் கொண்டு சேர்க்க வேண்டுமென, இந்திரனும் தன் வெள்ளையானையில் ஏற்றி அவ் விமானத்தைப் பூவுலகில் களாவனமடைந்து சிவலிங்கத்தின்பாற் வைத்து தன் பதி சென்றான். இதன் இடம் களாவனத்திற்குக் கிழக்கே இரண்டு கல் தொலைவில் சூரியலிங்கம் கோவில் என்ற திருநாமத்துடன் விளங்குகிறது. ஏராளமான பக்தர்கள் இன்றும் சூரியனுக்குப் பாப விமோசன நாளாகிய மகா சங்கராந்தி என்று சொல்லப்படும் தை மாதம் ரத சப்தமியாகிய புண்ணிய நாளில் பூசித்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எட்டாவது

அக்கினி தேவன் பாவந்தீர்த்த வரலாறு.

அக்கினி தேவன் எல்லா உயிர்களுக்கும் இன்பம் கொடுக் கப்பட்டவன். இவன் திக்குப் பாலகருள் ஒருவன். ஐம்பெரும் பூதங்களுக்குள் ஆத்மாவாக உயிர்கள் தோறும் பிரகாசிப்பவன்.

இவன் பாண்டவருள் ஒருவனான அர்ச்சுனனால் கொடுக் கப்பட்ட இந்திரன் காண்டாவனத்தில் இருப்பவராகிய இயக்கா, நாகர், அரக்கர் முதலானபேர்களுடன் தங்கியிருக்கும் காலை பல விலங்குகளுடன் புட்களும் தமக்கு இரையாகப் பசியாற்றி வந் தார்கள். இதனால் அக்கினி தேவனுக்குப் பெரும் பாவம் உண் டாகி, தன் பிரகாசமுள்ள சோதியும், திடகாத்திரமுள்ள வலிமை யும் குறைவடைந்து குன்ம நோய் கொண்டு அவதியுற்றான்.

அதனால் நோயின் வேதனை தாங்கமாட்டாமல் பலபல துன்பத்தினுல் உழன்று என்செய்வோமென்று வேதனையடைந் திருந்த சமயம், திரிகாலம் உணர்ந்த நாரத முனிவர் அவ்வழியாக வந்து சேர்ந்தார். அக்கினி தேவன் அவரைக்கண்டு தன் குறைகளை அவரிடம் முறையிட நாரத முனிவர் மனம் இரங்கி உன் பாவமும் நோயும் தீரவேண்டுமாயின் அநாதிபுரமென்னும் திருக்கருவைத்தலமொன்று விளங்குகிறது. அங்கு சென்று நிட்சேப நதியின்கண் மூழ்கித் திருக்களா நிழலமர்ந்த பால்வண்ணனைப் பூசனை செய்வாயானுல் பாவம் தீர்ந்து நல்வழிப்பட உனக்கு அருள்புரிவாம் என்று கூற,

அவ்வாறே அக்கினிதேவனும் கருவைத்தலமடைந்து நிட்சேபநதியில் மூழ்கி திருக்களாவனம் சென்று சோதிலிங்கமாக விளங்குகின்ற பால்வண்ணனை ஐம்புலன்களும் ஒருமைப்பட, பயபக்தியுடன் பூசா விதிமுறை தவருமல் பூசனை செய்யலுற்றுன். அவன் செய்யும் பூசைக்கு மாலயன் காணுத சிவபெருமான் அக்கினி தேவன் முன்தோன்றி அக்கினி! உன் பூசைக்கு உகந்தேன, உனக்கு வேண்டியதென்ன என்று வினவ,

அக்கினி எம்பெருமானைக் கண்டு இரு கரங்களைச் சிரசின் மேல் கூப்பி இறைவனே! அடியேன் காண்டாவனத்திலுள்ள உயிர்கள் யாவும் இரையாக அனுபவித்ததன் பயனுல் என் சோதியும் வலிமையும் குன்றி குன்ம நோயால் மன வேதனையடைந்து தவிக்கும் என்னை நல்வழிப்பட அருள்புரிவாய் என்று வேண்டி நின்றனன்.

சிவபெருமான் அக்கினியே! நமது முத்தலைச் சூலத்தால் உண்டாக்கப்பெற்ற சூலதீர்த்தம் இவ்வாலயத்துள் தென்கிழக்கு மூலையில் உள்ளது. அதில் நீ சென்று மூழ்கி வருகவென்று உரைக்க அவ்வாறே அக்கினியும் சூலதீர்த்தத்தில் மூழ்கி இறைவன்பால் அணுகி, கைகட்டித் தொழுது நிற்க, திருக்களா வனம் வாழும் பால்வண்ணப்பெருமான் தன் அருகில் வரவழைத்து

சோதியினின்றும் வெளிவந்து தனது திருக்கரத்தால் வெண் பூதி யணிந்து அக்கினியே! நீ, நம்மிடம் வந்து வழிபட்டபடியால் உனக்கு முன் குன்றிய சோதியைப் பெறவும் வலிமையை அடை யவும் குன்ம நோயுந் தீர்த்து அருள்புரிந்தோம். நீ மூழ்கிய தீர்த் தத்திற்கு அக்கினி தீர்த்தமென்று பெயர் விளங்குக. இதில் மூழ்கி என்னை வழிபாடு செய்யும் அடியார்களுக்குச் சகல பிணிகளும் தீரப்பெற்று உயர்கதியடைவார்கள் என்று வரங்கொடுத்து சோதியில் கலந்தனன்.

அதன்பின் அக்கினி தேவன் தன் பாவம் முற்றும் தீர்ந்து தன் சோதியைப் பெற்று தன் இருப்பிடம் சேர்ந்தான். இத் தீர்த்தமானது இவ்வாலயத்துள் வெளிப்பிரகாரமாகிய தென் கிழக்கு மூலையில் இன்றும் அழகுகொண்டு நிகழ்கிறது. இறை வன் முத்தலைச் சூலத்தால் ஏற்பட்டதால் சூலதீர்த்தமென்றும் அக்கினி தேவன் மூழ்கி வழிபட்டதால் அக்கினி தீர்த்தமென்றும் பெயர் விளங்கிக்கொண்டிருக்கிறது.

ஒன்பதாவது

நாரதர், காளாயர் பாவந்தீர்த்த வரலாறு.

திருக்கைலாய மலையிலிருந்து பூர்ணை, புட்கலை என்னும் தேவிகளும் காளாயன் முதலிய சேனை பரிவாரங்களுடன் பூவுல கிற்கு வர, பூவுலகடைந்து தென் திசை நோக்கி வெள்ளையானை யின்மேல் இந்திரன் சாத்த ரூபங்கொண்டு தென் திசை நோக்கி வந்தனன். எதிரே நாரதமுனிவன் வர, இந்திரனை சாத்தனும் கண்டு தன் வலக்கை நீட்டி நாரதனுக்கு நல்லாசிகூறலுற்றான். நாரதன் சினமடைந்து சாத்தனே! நீ ஒரு பெரியவன்போல கை நீட்டி நல்லாசிகூறினய், நான் பிரமன் மகன் என்பது தெரிந்தா யில்லை. சற்றும் அஞ்சாமல் மனத்தில் கர்வம் கொண்டாய். அதனல் நீ எப்போதும் வனத்திலேயே சஞ்சரிக்கக்கடவாய் எனக் கடிய சாபம் கொடுத்தனன்.

இதைத் தெரிந்த சேனைக் காவலனான காளாயன் கோபம் கொண்டு தன் எஜமானனான சாத்தனை நீ இப்போது கொடுத்த சாபம் நன்று. நாங்கள் வனத்திலேயே வாழ்கின்றோம். எப்போதும் புறமே சொல்லித்திரியும் நீ, கலகப்பிரியனாவாய் என்று நாரதனைச் சபித்துத் தன் கையிலுள்ள தண்டாயுதத்தைக் கொண்டு நாரதரைக் கொல்லுமாறு ஏவ. தண்டாயுதமும் நாரதனை நோக்கி வர. அஞ்சி நாரதனும் திருக்கைலாய மடைந்து உமாபதியைத் தெரிசித்து, அய்யனே! உன்னைத் தெரிசிக்க வேண்டி வந்துகொண்டிருந்தேன். அப்போது தன் பரிவாரங்களுடன் அரிகர புத்திரன் தென் திசை நோக்கி வந்துகொண்டிருந்தான். அவனையும் சேனைத் தலைவனான காளாயனையும் நான் வணங்கவில்லை என்று கோபித்து என் உயிரைக் கொண்டுவரும்படி தண்டாயுதத்தை ஏவினார்கள். அய்யனே! உன்னருளாற் பிழைத்து இங்கு உற்றேன் என்று வருந்திக் கூறலுற்றான்.

சிவபெருமான் தன் பக்கத்திலிருந்த நந்தியை நோக்கி நந்தியே! அந்த வீணாகிய காளாயனை இங்கு அழைத்து வா என்று கட்டளையிட. நந்தியும்போய் காளாயனைக்கண்டு உன்னை இறைவன் அழைக்கிறார். அதிசீக்கிரம் வருக என்று கூற. காளாயன் பயந்து நமக்கு என்ன ஆபத்து வருமோ என மனங்கலங்கிக் கைலை சென்று எம்பெருமானை அடிபணிந்து பயபக்தியுடன் ஒதுங்கி நிற்க.

எம்பெருமான் காளாயனே! உன்னை வணங்கவில்லையென்று நாரதரின்பேரில் தண்டாயுதத்தைச் செலுத்தினாயாமே என்று கோபத்துடன் கூற, காளாயன் அரபாபரனே இந் நாரதன் கூறுவது பெரும் பொய். அடியேன் சொல்வதைச் செவியுற்று அருள்புரிக என்று வினவி சொல்லலுற்றான். எம் அய்யனான சாத்தனுடன் சகல சேனை புடைசூழப் பூவுலகில் தென்திசை நோக்கி விரைந்துகொண்டிருந்தோம். அப்போது இந் நாரதனானவன் எங்களுக்கு எதிரே வர, எம் தலைவனான சாத்தன் தன்னுடைய கைகளை நீட்டி நல்லாசிகூற. நாரதன் கோபம் கொண்டு

நீ ஒரு பெரியவன் போல, நான் உனக்குச் சிறியவன் போல மதித்து எனக்கு ஆசி கூறினை. அதன் பயனுல் வனங்களிலேயே சஞ்சரிக்கக் கடவாய் என்று சபித்தான். அடியேனுக்கு அவன் சபித்த வார்த்தை கோபத்தை மூட்ட தண்டாயுதத்தை வீசினேன். அது குற்றமாயின் பொருத்தருள் செய்ய வேண்டும் என்றும் உன் பாதமேயன்றி வேறு துணையில்லை என்று வணங்கி நிற்க,

சிவபெருமான் நாரதனை நோக்கிக் காளாயனை வணங்காத குற்றத்தால் தண்டாயுதம் வீசினுனென்று எம் முன்னுலேயும் பொய் புகன்ருய். அதனுல் உனக்குப் பெரும்பாவம்பற்றி இருக்கிறது. அது தீரவேண்டுமாயின் பூவுலகில் திருக்களா என்னும் பதியையடைந்து பால்வண்ணனைப் பூசிப்பாய். ஆனுல் எம்முன் பொய் புகன்ற பாவம் நிவர்த்தியடையும் என்று சொல்ல, நாரதன் வணங்கி, பிழைத்தோமென்று பூவுலகடைந்து கருவையம்பதியில் திருக்களா நிழல் அமர்ந்த பால்வண்ணனை வழிபாடு செய்து கொண்டிருந்தனன்.

அப்பால் இறைவன் காளாயனை நோக்கி, உன் எசமானின் உத்தரவில்லாமல் தண்டாயுதமெறிந்தது குற்றம். அதன் பாவம் நீங்க, நீயும் கருவையம்பதி சென்று நம்மைப் பூசிப்பாயென வினவ. காளாயனும் கருவையம்பதி சென்று கிருபாநதியில் தீர்த்தமாடி களாவனப்பதியில் அமர்ந்திருக்கும் பிறையணிந்த பெருமானைப் பூசிப்பானுனுன். இவ்வாறு நாரதனும், காளாயனும் ஓராண்டு பூசனை செய்ய. பாம்பணியும் நாதன் சோதியினின்றும் தோன்றி உங்கள் பூசனைக்குகந்தோம். உங்களை அடைந்த பாவமும் தீர்த்தருளினேம் என்று பின்னுஞ் சொல்லலுற்ருன்,

இக்களாவனப் பதியை அடைதலே சரியை. இங்கு அமைந்த தீர்த்தத்தில் மூழ்குதல் கிரியை. எம்மைப் பூசனை செய்தல் யோகம். நம் உருவைத் தெரிசித்தல் ஞானம் என்று சொல்லிக் காளாயன் கொடுத்த சாபமும், நீ பொய் புகன்ற பாவமும் தீர்த்தோம் என நாரதனுக்குக் கூறி தன் சோதியில் கலந்தனன்,

அதன் பின் பாப நிவர்த்தி செய்து வந்த காளாயன் அநுதி புரமும், அவ்விடமுள்ள மகிமைகளையெல்லாம் தன் எசமானனுன சாத்தனிடத்தில் சொல்லச் சாத்தனும் நவரத்தினம் விளங்குகிற இரதத்தின் மேலேறிக் கருவைப்பதி வந்து மாலயனுக்கு மெட்டாத மூர்த்தியாகிய பால்வண்ணனைப் பூசித்து நிற்க, அடியாருக் கெளியவன் சோதியினின்றும் வெளிப்பட்டு மைந்தா! எம்மை அன்பால் நவரத்தினங்களாகிய சித்திரமமைந்த ரதத்தில் வந்து எம்மைத் தெரிசித்தமையால் சித்திர விரத அய்யனுரென்று உனக்குப் பெயர் கொடுத்தோம் என்று தன் அருட்சோதியில் கலந்தனன்.

பத்தாவது

காகபுசுண்டர் கதியடைந்த வரலாறு.

காகபுசுண்டரானவர் இக் கருவையம்பதியில் வாழும் நாளில் திருமால் பதம் எட்டும், அநேக பிரமபட்டமும் எண்ணில்லாத வசிட்டரையும் கண்டு இன்புற்றவர். இக் காகபுசுண்டர் மூதேவியின் வாகனமாகிய பெண் காகத்திற்கும் பிரமதேவனுடைய ஆண் அன்னப்பட்சிக்கும் உற்பவித்தனன். வானுலகிலுள்ள மானத வாவிக் கரையிலுள்ள பிரமன் வாகனமாகிய அன்னப்பட்சியை மூதேவியின் வாகனமாகிய காகம் மருவ வேண்டுமென்று ஆசை தூண்ட அன்னப்பட்சியின் பால் வந்து அழகிற் சிறந்த அன்னமே! யான் மன்மத பாணத்தால் துன்புறுகின்றேன். நீ, என்னை மருவி என் துயரைப்போக்குவாய் என்று வினவ. அன்னப்பட்சியானது காகமே! நீ, சிறிதும் அருள் இல்லாதவளுக்கு வாகனமாயினை. யாவரும் பழிக்குமாறு இழிகுலத்தில் உற்பவித்தாய். ஆதலால்

உன்னை நான் தீண்டேன். என்று வினவ. காகம் மனமுடைந்து மன்மதனை நோக்கிப் பலகாலம் தவம் செய்ய மன்மதன் தோன்றி காகமே! உனக்கு வேண்டுவது என்ன ? என்று கூற -

மூதேவியின் வாகனமாகிய காகமானது எதிரில் நிற்கும் மன்மதனை நோக்கி, அடியேன் பிரமன் வாகனமாகிய அன்னப் பட்சியை மருவவேண்டும் என்று ஆசை. அதன்படி அருள் செய்க என்று வணங்கி நிற்க, மன்மதனுனவன் அதன்படி அருள் வோம் என்று சொல்லி தன்னிருப்பிடஞ்சென்றான். பின்னர் அன்னத்தின் மீது தனது மலர்வாழியைச் செலுத்த. அதன் காரணமாக காகத்திற்கும் அன்னப்பட்சிக்கும் புணர்ச்சி ஏற்பட அதன் கருவிலிருந்து உற்பவித்தான் புசுண்டன். பிறந்த புசுண்ட னை மகனுடன் அன்னப்பட்சி பிரமலோகஞ்சென்று பிரமனைப் பணிந்து நிற்க.

பிரமன் அன்னத்தை நோக்கி நீ இதுகாறும் எங்குசென்றனை? உன்னுடன் கூட வந்திருக்கும் இம் மதலை யார் ? அன்னமானது தேவரீரே! மூதேவியின் வாகனமாகிய காகமிடத்தில் காம மயக் கத்தால் மறுவ. அதன் கர்ப்பத்தில் இம் மதலை பிறந்தது. எனக்கு மகன் என்று வினவ. பிரமனுக்கு கோபாக்கினி யெழுந்து அன்னமே! நீ. காமத்தில் மூழ்கினை. மேலும், அருளில்லாத மூதேவியின் வாகனத்தைச் சேர்ந்ததால் உன்னைத் தீண்டோம் என்று வினவ, அன்னப்பட்சி வருத்தமுற்று அடியேன் அறியா மையால் செய்த பிழையை நீவிர் பொறுத்து அருள்புரிவீர்.

பிரமன் அன்னமே! நீ அறியாமையால் செய்த பாவத் திற்குப் பூவுலகில் அநுகிபுரமென்று விளங்குகின்ற திருக்களா வனஞ்சென்று விடமுண்ட கண்டனைக் கண்டு பூசிப்பாயானல் உன் பாவந்தீர்ந்து நல்வழிப் படுவாய் என்று கூற அதன்படி கருவைப்பதி வந்து க்ஷீட்சேபநதி மூழ்கிப் பால்வண்ணநாதப் பெருமானைத் தன் மதலையான காகபுசுண்டனுடன் சென்று வழி பாடு செய்துகொண்டிருந்தது.

சிவபெருமான் வழிபாடு செய்யும் அன்னமே! உன் பாவந் தீர்த்தோம். இம் மதலையை நம் பால் வைத்துப்போ. என்று கூற, பெருமானே! இம் மதலை என்னைப் பிரிந்திருக்கமாட்டான் என்று வருந்தி நிற்க, மறுபடியும் எம்பால் வைத்துப்போ என்று கூற அன்னமும் தம் மதலையை இறைவன்பாலொப்புவித்துத் தன்பதி போய்ச் சேர்ந்தது.

அம் மதலையான காகபுசுண்டர் அப்பதியிலிருந்து மெய்யன்புடன் பால்வண்ணனைப் பலகாலம் பூசித்து வழிபாடு செய்ய இறைவன் திருவுள்ளமிரங்கி காகபுசுண்டருக்கு நீடித்த வாழ் நாளும், மெஞ்ஞானமும், எவ்வுருவமும் எடுத்து, எங்குஞ்சென்று சிறப்புற்று இருக்கவும், புசுண்டர் என்னும் பெயரும் கொடுத்துச் சோதியிற் கலந்தனன்.

பின்னர் காகபுசுண்டர் அங்கிருந்து எல்லாவுலகங்களுஞ் சென்று மீண்டுங் கருவைமாநகரம் அடைந்து, பல திருமால் அயன் பட்டமுங் கண்டு, பல பிரளயமும் பார்த்திருக்கும் நாளில் வசிட்ட முனிவர் இவ்வளவு காலமாக இந்தக் கரியமேனியாகிய காக உருவத்தைச் சுமந்தாலும், முடிவில் ஒருநாள் அழியக்கூடிய கூட்டைச் சுமந்து என்ன பயன் தவநிலையிலிருந்து மோட்சம் அடைவிரென்று உபதேசிக்க.

புசுண்டரும் அவ்வாறே அநேக காலம் தவம் செய்து சாயுச்சிய பதவியை அடைந்தான்றேல், இக் கருவைத்தலமானது இன்ன காலத்தில் உற்பவித்தது என்று யாரால் சொல்ல முடியும் அதன் காரணமாக இப்பதிக்கு அநாதிபுரம் எனப் பெயர் பெற்றதாகச் சூதமுனிவர் சொல்லலுற்றார்.

பதினைன்ருவது
அகஸ்தியன் பூசித்த வரலாறு.

எண்பத்திஞன்கு இலட்சஞ் சிவராசிகளுக்கு முயிருக்கு முயிராயிருக்குஞ் சிவபெருமான் பார்வதி தேவியாரை மணஞ் செய்யும் பொருட்டு, வடதிசையாகிய இமயமலை செல்லுகின்ருர். தேவரீரின் திருமண விழாவைப்பார்ப்பதற்கு நாற்பத்தெண்ணுயிர ரிசிகளும், முப்பத்துமுக்கோடி தேவர்களும், தவமுனி யோகி களும், மயன், மால், கிண்ணரர், கருடகாந்தருவர், திக்குப்பாலகர் மற்றுமுள்ளோர்களும் இறைவனுடன் சென்ருர்கள். அதனல் வடதிசை தாழ்ந்து, தென்திசை உயர்ந்தது.

இது கண்ட இறைவன் அகஸ்தியரையழைத்து இந்த உலகம் நேர்பட வேண்டில் நீ, தென்திசை போவாயென்று கட்டளையிட. அகத்தியன் வணங்கி பெருமானே உன் மணக் கோலம் கண்டு தெரிசிக்க எல்லோருங் கூடியிருக்க யான் ஒருவன் மட்டுங் காணுமல் போகச் செய்வது என்ன பாவஞ் செய்தேன். அல்லது உன் அருளுக்கு இடமில்லாதவனே? கண் பெற்ற நான் உன் மணக்கோலத்தைக் கண்டு தெரிசிக்க அருள் புரிவாய் என்று துதிக்க, இறைவன் அகஸ்தியனே! நீ ஒருவனு லேயேதான் இக் காரியத்தைச் செய்துமுடிக்கச் சக்தியுள்ளவன். மற்று யாவராலும் ஆகாத காரியம் என்று உன்பால் கூறினேன். நீ, சந்தோசத்துடன் தென்திசை நோக்கிச் செல்வாய். நம் மணக் கோலத்தைத் தென் பொதியத்தில் காட்டி அருள்புரிவோம் என்று கூறி, அகஸ்தியனே நீ செல்லும் மார்க்கத்தில் சூரியன் தன் மார்க்கம் செல்லாது தடுத்து நிறுத்தும் விந்தமலையின் செருக்கை நீக்கிச் சூரியனுக்கு மார்க்கம் கொடுத்தும், பின் முனிவருக்கு இடர் விளைவிக்கும் வாதாவி, வில்வலன் என்ற இருவரையுங் கொன்று முனிவருக்கு நன்மை செய்து, திரிகூடமலையில்

செண்பகாதேவி அருவிக்கரையில் அமர்ந்திருக்குர் திருமாலை இலிங்க வடிவமாக்கித் திரிகூடமலையிலிருந்து இரண்டு யோசனை தூரத்திலுள்ள அனுதிபுரம் அடைந்தால் உனக்கு அருள்பெற சித்தியும் ஞானமும் ஏற்பட வரங்கொடுப்போமென்று சொல்ல.

அகத்தியனுஞ் சிவபெருமானை வணங்கி விடைபெற்றுத் தென்திசை நோக்கிப் புண்ணிய தலங்களாகிய காசி முதல் கன்னியாகுமரி வரைப் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு சூரியனுக்கு இடர்விளைவிக்கும் விந்தமலையைத் தரைமட்டமாக்கி சூரியனுக்கு வழிகொடுத்தும், வாதாவி, வில்வலன் என்ற இரண்டு பேரையுமாய்த்து முனிவருக்கு நலம் புரிந்தும், அனுதிபுரமாகிய நிட்சேப நதியைக் கண்டான். கண்ட மாத்திரத்தில் அவனுக்கு அறிவு தோன்றலுற்றது. இவ்வுலகம் நான் ஒருவனால் எவ்வாறு சமன் செய்யமுடியுமென்று இறைவனிடம் கேளாமல் வந்தது தன்னறிவாகரத்தை இழந்தமையால் நிட்சேப நதிக்கரையில் இரவில் தங்கி மறுநாள் சூரியன் உதிக்கும் முன் எழுந்து நதியில் மூழ்கி வரும் வழியில்,

வெள்ளை வடிவான சிவலிங்கம் தோன்ற அதனருகில் நாணமாதன் என்ற வேடுவனை வேங்கையொன்று சீறிக் கொல்ல முயன்றது. சிவலிங்கத்தைக் கண்டதும் அஞ்சி, தன் வலி குன்றி நின்றது. அதுகண்ட அகஸ்தியன் இப் பரமன் செயலென்று நினைத்து தானும் பூசிக்க எண்ணிச் சிந்தையில் காமதேனுவை நினைக்கக் காமதேனுவும் பரமன் பூசைக்குரிய பல பொருள்களும் சேகரித்து கொடுக்க அகத்தியனும் மெய்யன்புடன் இறைவனை பூசித்திருக்குநாளில் சிவபெருமான் தோன்றி நீ, செய்த பூசைக் குகந்தோம். வேண்டும் வரம் பெற்றுக்கொள்ளென்று வினவ,

அண்ணலே! அடியேனைத் தென்திசைக்குப் போகுமாறு கட்டளையிட்ட காலத்தில் நான் ஒருவனால் எவ்வாறு பூமி சமமாகுமென்று கேட்க, அறிவில்லாமல் வந்துவிட்டேன். மேலும், இந்த நினைவு பல தலங்களிலும் உன்னைப் பூசிக்கிறபோது உண்டாகாமல் இக் கருவைப்பதியைக் கண்ட அளவில் தோன்றிய காரணம் என்னவென்று வினவ,

இறைவன் இத்தலத்தில் அன்புகொண்டு என் மநாஞ் சொல்லுவோர் மூர்க்கராயிருந்தாலும் அறிவுடையோராவர். நம்மைச் சதாவும் போற்றும் இந் நகர வாசிகள் பேசும் வார்த்தை நமது அஞ்செழுத்தை சிவஞ்செய்வதுபோலாகும். நித்திரை யோகமானது நம்மை அலங்கரிப்பது போலாகும். புகழ்பெற்ற இத்தலத்தின் பெருமை வேதங்களாலுஞ் சொல்லமுடியாது.

இத்தலத்தில் ஒருநாள் நம்மைப் பூசித்தால் அநேக காலம் தவஞ்செய்த புண்ணியத்தையடைவர். தந்தை, தாய், ஆசாரியன், கடவுள் இவர்களை நிந்தித்தவரும், பிறர் பொருளைக் கவர்ந்தோறும் சைவம் விட்டு அசைவம் அடைந்தவனும், ஜீவவதை புரிந்து புலா லுண்டவனும். செய்நன்றி மறந்தவனும், பஞ்சமா பாதகஞ் செய்தோனும், இத்தலத்தில் இருப்பவரோடு நட்புற்றிருந்தாலும், அவர்கள் சொல்லைச் செவியிற் கேட்போரும், மற்றைய யாவரும் நம் கிருபா நதியில் மூழ்கி நம்மை நினைத்தால் அவர்கள் செய்த பாவமானது சூரியனைக்கண்ட பனிபோல் விலகி நற்கதியடைவார் கள் என்பது திண்ணம்.

சாந்திராயணம் பத்து, ஏகாதசி ஆயிரம், சோமவாரம் நூறு, மாசிமாதம் வருகின்ற சிவராத்திரியின் பலன் எல்லாம் இத்தலத் தில் ஒருநாள் இருந்தவர்கள் பெருவார்கள். தேன்படி ஒன்று, பால் படி இரண்டு, நெய் படி மூன்று. நதியின் நீர் கொண்டு உறுதியாய் நம்மை அபிடேகம் புரிந்த்வர்கள் இந்திரனாசைப் பெறுவார். மேலும், இத்தலத்தில் நம் பூசனைக்குரிய வில்வம், துளபம், தாமரை. நீலக்கொத்துடைய அலறி, கொன்றை மற்றும் ஏனைய புஷ்பங்கள் முதலியவை உண்டுபண்ணி நந்தவனம் வைத் தவர்கள் பெரும் பலனை நம்மால் சொல்லமுடியாது.

இளநீர், சந்தனம், கஸ்தூரி புநுகு கொண்டு அபிடேகம் செய்பவர்கள் நூறு அசுவமேதயாகம் செய்த பலனைப் பெறுவார் கள். தாமரை மலர், குவளை மலர், துளபம் கொண்டு சிவலிங் கத்தை அர்ச்சிப்பவர் நம் பக்கத்தில் இருப்பர். மறையவர்களுக் கும் முனிவர்களுக்கும் காவி வஸ்திரமணிந்த சாதுக்கள் யாவருக் கும் இப்பகுதியில் அன்னம் கொடுப்பவர்கள் தேவ ஆண்டு நூறு வீதம் நம் கைலாயத்திலிருப்பர்.

நிட்சேப நதிப்புனல் ஒரு துளி அளவாவது சிரசின்மேல் படுமாயின் புருடார்த்தம் நான்கையும் அடைவர். ஆடி அமாவாசை, தை அமாவாசையில் பிதிர்க்களுக்குச் சிரார்த்தம் செய்து அன்னதானஞ் செய்வோர் திருக்களாவுடையான் என்று தம் மக்களுக்குப் பெயர் வைப்போர் யாவரும் மூவேழு தலைமுறைக்கும் பிதிர்க்களோடு இருப்பர் என்று கூற.

அகத்தியர் ஐயனே! உன் திருமணக்கோலம் எனக்கு எப்போது காட்டி அருள்புரிவீரென்று வினவப் பெருமான் மேட சங்கராந்தியான தை மாதம் பிரதமையும், பொன்வாரமுங் கூடிய நன்னாளில் தென் பொதிய மலையில் உனக்கு நம் மணக்கோலத்தைக் காட்டுவோம் என்று சொல்ல. அகத்தியன் விடைபெற்றுக் கொண்டு திரிகூட மலையையடைந்து திருமாலைச் சிவமாக்கிச் சிந்தனையால் பூசித்துத் திருக்குற்றாலமென்று ஓதி, செண்பகா அருவிக்கரையாகிய பொதிய மலையையடைந்து சிவபெருமானின் திருமணக்கோலமுங் கண்டு பொதிய மலையில் வீற்றிருந்தான்.

பன்னிரண்டாவது

கருவையம்பதியில் ஆரியன் திருக்கோவில் அமைத்த வரலாறு.

ஆதியில் பிரம்மாவின் காலம் மூன்று முடிந்து நாலாவது கர்ப்பத்தில் இறை தவ மனுவான அரசன் காலம் இருபதாம் சதுர்யுகத்துச் சொல்லும் திரேதாயுகத்தில் சத்தி, மலையம் என்னும் இரு மலையின் நடுவில் மணவூர் என்னும் நகரத்தை ஆட்சி புரிந்து வந்த வீரபாண்டியனென்னும் சேர மன்னனனவன், இந்து காந்தை என்னும் ஒரு மாதை மணந்து அரசாட்சி செய்து வரும் நாளில் அம்மன்னனுக்கு இரு புதல்வர்கள் அவதரித்தனர், அவர்

களுக்கு ராஜசூரியன் என்றும், ஆரியனென்றும் பெயர் சூட்டி அருமையாக வளர்த்து, கல்வி அறிவு, வில் வித்தை முதலிய சகல கலைகளிலும் வல்லவனுக்கி மூத்தவனுகிய ராஜசூரியனுக்கு இளவரசுப்பட்டம் சூட்டி இளையவனை ஆரியனுக்குச் சங்க ரேகை, பதுமரேகை முதலிய பலவுறுப்புகள் உடம்பில் தோன்றக்கண்டு ஆரியன் எவ்வுலகுக்கும் அரசனுவானென்று நிச்சயித்துத் தன்னருகில் வைத்து மன்னன் சொல்லலுற்ருன்.

என்னுருயிர் மைந்த! தென் திசையில் அமுதாசலமென்று ஒரு மலை உளது. அதன் பக்கம் நதிகள், அடர்ந்த சோலை வனங்களும் உள்ள இடத்தில் பல நகரங்களுள்ளன, அங்கே அரக்கர் முதலிய வேடுவரால் மறையவர், முனிவர்கள், தேவர்கள் துயரடைகின்றனராம், நீ அங்கு சென்று அவர்கள் துயர்நீக்கி, உன் மனதிற்கிசைந்த வோரிடத்தில் நகரம் அமைத்துத் தெக்கண திசையைச் செங்கோலாட்சி செய்து வா என்று கட்டளையிட்டனன்,

---

ஆரியனும் அவ்வாறே நால்வகைச் சேனையுடன் விடைபெற்றுக்கொண்டு தென்முகம் நோக்கித் திருக்களாவனமான காட்டையடைந்தான். அன்றிரவு நாம் எந்த இடத்தில் நகரம் செய்வதென எண்ணி நித்திரையடைந்தான். அன்று மன்றுளாடிய பால்வண்ணப்பெருமான் ஒரு மறையவன்போல் அரசன் கனவிற்றேன்றி ஆரியனே! இப்பதிக்குத் தெற்கே இரண்டு யோசனை தூரத்தில் ஒரு சக்கியம் என்னும் மலையுண்டு. அவ்விடத்தில் கிருபாநதி ஓடுகிறது. அவ்விடம் போவாயாகில் முனிவனை அகஸ்தியன் வருவான், அவன் சொற்படி எனக்கு ஆலயம் செய்து ஆலயத்தின் வடக்கே நிட்சேப நதியில் சிலையுருவாக ஒருவருமறியா வண்ணம் நீருள் அமிழ்ந்திருக்கும் நம் தேவியைப் பிரதிட்டை செய்து, நமக்கும் நம் தேவிக்கும் விழா முதலியன சொல்லுதற்கரிய புகழோடு பல அரசர்கள் போற்ற வாழ்ந்திரு எனச்சொல்லி மறைந்தனர்.

பின்னர் ஆரியன் துயில்நீக்கி தான் கண்ட கனவை நினைத்து அவ்விடம் நீங்கிப் பூங்களாவனத்தைக் கண்டனன். கண்ட போது மன்னன் தன்னை மறந்து பரவசமானான். சிறிது நேரம் சென்றபின் நம் கனவில் இறைவன் சொன்னபடி அகஸ்தியன் வரும் நாள் என்னாளோ? இலிங்கம் எங்குளதோ? என்று திகைத்து தன்னுணர்வற்று நின்றுகொண்டிருக்குஞ் சமயம், அகத்தியன் வரவு கண்டு அரசனெழுந்து, அவனை யடிபணிந்து, தாம் கனவில் நிகழ்ந்ததை அம்முனிவன் இடத்துக்கூற, முனி வனுங் களாவனத்தைச் சீர்திருத்தங்கள் செய்யவும், சிற்பநூல் வல்லவரைக் கொண்டு பால்வண்ணப் பெருமானுக்கும், ஒப்பனை தேவிக்கும் ஆலயம் அமைக்கும் அளவையும், பல கோபுரங்கள் அமைப்புங் கூறினான்.

அப்போது கும்பமுனிவரும், இந்திரன் முதலிய தேவரும், அறுபகை அனைத்தும் வென்ற முனிவரும் இவ்விடம் வரும்படி நினைக்க. எல்லோரும் அவ்விடம் வந்தார்கள். வந்த தேவர் களுடன் மன்னன் நிட்சேப நதி சென்று புனலில் மூழ்கியிருக்கும் அதுலாம்பிகையை யெடுத்துக் கோவிலுக்குள் புகுந்து பிரதிட்டை செய்து, ஆரியனும் நதியில் மூழ்கிப் பால்வண்ணப்பெருமானுக்கும் ஒப்பனையம்மாளுக்கும் நறுமலர் தூவிப் பூசித்துப் பின்னர் இறை வனுக்கும், இறைவிக்கும் திருமணம் நடத்த எண்ணி, அந்நகரத் தை இந்திரன் நகர்போல் அழகு விளங்கச்செய்து பல வாத்தியங் களும் முழங்க ஓர் சுபதினத்தில் திருமண விழா நடத்தக் காசிப் பதியிலிருந்து ஆதி சைவர் பலரை அழைத்து, பூசை நடத்தும்படி செய்து இன்புற்றிருந்தான்.

ஆரியன் பின்னர் இந்திரன் முதலிய தேவருடனும், தந்தை யுடனும் தன்னரண்மனை புகுந்து இந்திரன் கையால் முடிசூட்டப் பட்டுத் தென்னாடு புரந்திரு என ஆசியும் பெற்று, அவரவர் இருப் பிடம் சென்றனர். அப்பாலாரியன் முனிவர்களுக்கு இடையூறு செய்யும் அரக்கர், வேடர் முதலியோரை வதைத்துத் திக்விஜயஞ் செய்து, இந்திரன் ஊர்சென்று, அவன் கொடுக்கப்பட்ட ஆசியை யும் பெற்று மனு நீதி தவறாமல் அரசு புரிந்து வந்தான்.

அந்நாளில் அவ்வாரியனுக்குத் தான் செய்த புண்ணியத்தாலும், பால்வண்ணநாதப்பெருமானருளினுலும் அம்மன்னனுக்கு ஒரு சற்புத்திரனவதரித்தனன். அதுகண்ட அரசன் பால்வண்ணநாதப்பெருமான் திருவருளால் அவதரித்த சற்புத்திரனுக்கு குலபூடணன் என்னும் திருநாமம் சூட்டி, அருமை பாராட்டி, வளர்த்து, சகல கலைகளிலும் வல்லவனுக்கி இராச்சியத்தை அவன்பால் ஒப்புவித்துப் பால்வண்ண இலிங்கத்தின் ஜோதியுடன் கலந்தான்,

---

பதின்மூன்ருவது
குபேர ஆரியன் பீடப் பிரதிட்டை
செய்த வரலாறு.

உலகில் தோன்றிய யுகங்களான நான்குள் துவாபரயுகத்தின் அந்தத்தில் தென்னவனுன வீரசிகாமணி வள்ளலென்போன் மேக கன்னியென்னும் ஒரு மாதுடன் கருவைமா நகரத்தை செங்கோலாட்சி செய்து வரும் அந்நாளில், இறைவன் தோழனுன குபேரன், தக்கன் மக சாபத்தால், வீரசிகாமனி மன்னனுக்கு மகவாய் வந்து தோன்றினுன். இவ்வாறு உதித்த தன் மகனுக்கு என்ன பெயர் சூட்டியழைப்பது என அரசன் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது எதிரே குறுமுனிவன் வருதலைக் கண்டு, அவன் எதிர்சென்று, அநேகவுபசாரஞ்செய்து தன் மனையிலிருக்கச்செய்து குறுமுனிவனைப் பார்த்து முனிவர் பெரும! தவத்தாலுதித்த என் சற்புத்திரனுக்கு உன் திருவாய்மலரால் திருநாமமிட்டுயழைப்பாய் என, முனிவனும் ஆரியன் எனப் பெயரிட்டு நல்லாசி கூறிப் போயினுன். மன்னன் தன் புத்திரனுக்கு உலகிலுள்ள சகல கலைகளிலும் வல்லவனுக்கி இராச பாரத்தை அவ்வாரியன்பால் ஒப்புவித்துச் சிவபதவியடையலுற்ருன்.

அதன் பின் ஆரியன் நீதி வழுவாமல் அரசாட்சி செய்து வரும் நாளில், காவேரி நாட்டில் சிறந்த தில்லைத் திருநகரில் அங்க அகளங்கனென்னும் பெயர் கொண்ட சோழன் ஆட்சிபுரிந்து வந்தான். அவனுக்குக் கத்தூரிவல்லி என்னும் மாது வாழ்க்கைத் துணைவியானாள். அக் கத்தூரிவல்லியின் வயிற்றில், அழகை என்னும் நகருக்கதிபனான குபேரன் மனைவி சுப்பிரசூயை யென்பவள் மகளாகப் பிறந்து பிரசன்னை யென்னுந் திருநாமம் விளங்க உதித்தாள்.

இவ்வாறுதித்த பிரசன்னை வளர்ந்து மங்கைப் பருவம் அடையப் பெற்றாள். அரசன் இம் மங்கைக்குக் கணவனாக எல்லா தேசங்களிலும் அறியலுற்று ஒருவனுந் தென்படாமல் ஆலோசனை செய்துகொண்டிருக்குங்காலை, துருவாசரென்னும் முனிவர் அரசன் சபைக்கு வர, அது கண்ட அரசனெதிர்சென்று வரவழைத்து ஒரு பொற்பீடத்தில் எழுந்தருளச்செய்து முனிவர் பெரும! என் மகள் இப் பிரசன்னைக்கு அரசருள் எவன் மணவாளனாக வருவான் என்பதைத் தெரிவிக்கவேண்டுமென்று கூற. வேந்தே உன் மகள் இருநிதிக் கிழவனான குபேரன் மனைவி, சுப்பிரசூயை யென்பவள், கத்தூரியாகப் பிறந்து செய்த நல்வினையால் இம்மையில் பூர்வ ஜென்மம் உணர்ந்து உன் புதல்வியாகப் பிறந்தாள். இவளுக்கு முன் பதியான குபேரனுங் கருவை மாநகரில் தன் முற்பவந் தெரிந்து முதிர்ந்த அறியவனான ஆரிய பாண்டியனெனத் திருநாமங்கொண்ட அரசன் பிறந்திருக்கிறான். அவனே உன் மகளுக்கு ஏற்ற கணவன் என்று வினவிப், பின்னுஞ் சொல்லலுற்றான். உன் மகள் சுயவரங் குறித்து, மன்னர் யாவரும் வரும் நாளில் பாஞ்சால வேந்தனும், காசி வேந்தனும் விசுவநாதனைத் தியானம் பெற்று வருவதால், ஆரியனைப்போல் உருவெடுத்து முற்பவமுணர்ந்து ஆரியனுடன் வருவார்கள். அவர்களில் உண்மை ஆரியனைக் காண்பது யாருக்கும் முடியாது. ஆனபடியால் உன் மகள் கருவைப்பதிப் பரமனை மந்திரத்தால் உபசரித்துக் கொண்டிருந்தால், உண்மை ஆரியனை அறிய முடியும் எனவுரைத்துத் தன்னிடஞ் சென்றான்,

அப்பால் மன்னவனும் முனிவன் கூறியபடியே, தன் மகளை கருவைத் தலத்துக்கு அனுப்பிவைக்கப் பிரசன்னையும் களாவனத்துப்பெருமானை மந்திரத்தால் உச்சரித்துக்கொண்டிருந்தாள் சோதியினின்றும் பெருமான் தோன்றி, உண்மையாரியனை உணரும்படி ஒரு விஞ்சை கொடுக்கப்பட்டுத் தன்னுயிர்த் தோழிகளுடன் கன்னிமாடத்திலிருந்தாள். அரசன் தன் மகள் சுயவரம் நாளைச் சொல்லி நாற்றிசையுமுள்ள அரசரெல்லோருக்குந் தூதுவரை அனுப்பிவைக்கக் குறித்த நாளில், அரசர் யாவரும் வந்தனர். அவர்களுடன் காசி வேந்தனும், பாஞ்சால வேந்தனும் ஆரியன் உருக்கொண்டு உண்மை ஆரியனுடன் இருந்தார்கள்,

இவ்வாறு, வேந்தர் யாவரும் வந்தபின் அகளந்தனென்னும் அரசனும், தன் மனைவியான ஆதந்தையும், தம் மகளைச் சுயம்வர மண்டபத்திற்குக் கொண்டுவரும்படி உத்திரவிட, தோழியர்களும் அழகுக்கழகு செய்பவர்போல பிரசன்னையை அலங்கரித்து மண்டபத்திற்குக் கொண்டு வந்தார்கள். தந்தையானவர் வந்த அரசர்களை நோக்கி யென்மகள் பூர்வ ஜென்மம் உணர்ந்து சொன்ன அரசர் யாவரோ அவருக்கே உரியவளென்று சொல்ல, மற்ற அரசர்கள் யாவரும் இதற்கு யாம் என்செய்வோமென்ற எண்ணத்துடன் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். பாஞ்சால தேசத்து வேந்தனும், காசிப்பதி வேந்தனுமான மூவரசரும் சந்தோஷமாயிருக்க, நங்கையான பிரசன்னை திருக்களாவுடையானுல் தனக்குக் கொடுத்த அடையாளத்தின்படி உண்மையாரியனுக்கே தன் மாலையைச் சூட்டினுள்.

அதுகண்ட அரசர்கள் யாவரும், அவரவர்கள் இருப்பிடஞ் செல்ல, ஆரியனும், தன் மனைவியுமான பிரசன்னையுடன் கருவைத் தலத்தில் வாழுநாளில் பெருமான் திருவருளினுல் மார்த்தான் பாண்டியன் என்னுமோர் மகவைப்பெற்று, உள்ள மகிழ்ந்து திருக்களாவுடையான் சிவலிங்கமானது தரைமட்டமாயிருப்பது கண்டு வேறு பீடம் இயற்றக்கருதிப் பல தேசங்கடந்து கங்கா நதியில்

புனித சிவலிங்கங் கொண்டு வந்து, அகத்தியன் முதலான பல முனிவர்களோடு கருவையம்பதி யடைந்து, கோவில்கொண் டெழுந்தருளியிருக்கும் பால்வண்ணப் பெருமானுக்கு ஓர் சுப தினத்தில் பிரதிட்டை செய்து, இனி வரும் கலியுகத்தில் இப்பீடத் தை யாரும் ஏடுக்காதபடி அருள்செய்வீரென்று களாவிசனைப் பணிந்து நிற்க,

சிவபெருமான் சோதியினின்றுந் தோன்றி, இச் சிவலிங்க மானது கீழ்பாகஞ் சிறுத்தும், மேல்பாகம் பெறுத்தும், இருக்கும் படி செய்தோம். இச்சிவலிங்கமானது நிலைபெற்றுப் பிரகாசத் துடன் தோன்றுமென்று உரைத்துச் சோதியிற் கலந்தனன். அன்பால் திருக்களாவிசனுரைத்தபடியே கீழ்பாதி சிறுத்தும், மேல்பாதி பெருத்தும் இருக்குஞ் சிவலிங்கத்தைத் தெரிசித்து, தான் அரசு புரியுங் கருவைமா நகரத்தை ஆட்சி புரிந்து, ஆரியன் மகிழ்ந்திருந்தான்.

பதினொன்காவது

சுனு பாண்டியனுக்குத் தல மகிமை

உரைத்த வரலாறு.

அநாதிபுரமென்னுங் கருவைமாநகரைச் சுனு பாண்டிய னென்னுமோர் அரசன் செங்கோலாட்சி செய்து வரும் நாளில், விளக்கெரிந்து கொண்டிருக்கும் தீத்தேடுபவன்போல் நம் களா வனப்பதியில் பெருமான் தன் பக்கத்திலிருக்கக் காசிப்பதி சென்று பூசித்து வருவோமெனக் கருத்துடையவனாகித் தன் நகரம் விட்டு நால்வகைப் படையோடும் காசிப்பதி செல்லுந் நாளில், இடையில்

தென் திருவாலங்காட்டில் அமர்ந்துள்ள சிவபெருமானைத் தெரிசித்துக்கொண்டு கோவில் வலம் வரும்போது கோவிலின் வடக்குப் பிரகாரத்தில் நம் கருவைப் பெருமானுனவன் ஒரு சித்தன் வடிவங்கொண்டு நிட்டையிலிருக்க, மன்னன் அச் சித்தனை வணங்கி அய்யனே! காசித்தலமடைந்து தெரிசித்துவரக் கருதி வந்துளேன், என் கருத்து முற்றுப்பெறுமோ? என்று கேட்க. அடிகளானவர் அரசே! உன் எண்ணம் முற்றுப்பெருது. உன் பதிக்குப் போவென்று உரைத்தான். மன்னனும் எவ்விதமாவது நான் காசிப்பதியடைந்து பூசித்துவர உன்னருள் செய்ய வேண்டுமென்று கூற.

சித்தன் அரசே! முடியாதென்று யாம் சொன்னேம். நீ கேட்பதற்கு மார்க்கமில்லை. உன் விருப்பப்படியே செய்க என்று வினவ, மன்னனும் சித்தன் வரங்கொடுத்தானென்று தன் சேனையுடன் ஆறு திங்கள் முடிவில் காசிப்பதியடைந்தான். அன்றிரவில் காசிப்பதியில் கங்கா நதிக்கரையில் தன் சேனையுடன் அமர்ந்து, மறுநாள் கங்காநதியில் மூழ்கி, விசுவேசனைப் பூசிக்கலாமென்ற கருத்துடன் தூங்கினுர்கள்.

அப்போது கருவைப்பரமன் காசிப்பதியிலிருக்கும் மன்னனையுஞ் சேனையையுங் கருவைப்பதியிலுள்ள நிட்சேப நதிக்கரையில் வரும்படி, நம் கருவைப் பெருமான் திருவுளத்தில் நினைக்க, அவ்வாறே நிட்சேப நதிக்கரையில் அரசனுஞ் சேனையும் வந்து சேர்ந்தனர். அதன் பின் அரசன் துயில் நீத்து எழுந்தபோது காசிப்பதியுங் கங்கைக்கரையுங் காணுமல் தன் பதியிலிருப்பது தெரிந்து ஆச்சரியமடைந்து நாம் அன்று திருவாலங்காட்டில் சித்தன் சொன்ன மொழியை மறுத்துச்சென்றேம். அந்தச் சித்தன் நம் கருவைப் பால்வண்ணனென்று நிச்சயித்து, நிட்சேப நதியில் மூழ்கிக் களாவனமடைந்து பால்வண்ணப் பெருமானுக்கு அபிடேக அலங்காரம், நிவேதனம் முதலியன செய்து எம்பெருமானை வழிபட்டு நிற்க. பெருமானுஞ் சோதியினின்று அரசன் முன் தோன்றினுன்,

எதிரில் தோன்றுஞ் சிவபெருமானை, மன்னன் இரு கரங்களையுஞ் சிரசின்மேற்குவித்து அய்யனே! அடியேன் காசித்தலமான கங்கைக் கரையில் துயில் கொண்டேன். இப்போது நிட்சேப நதிக்கரையில் இருக்கவேண்டிய காரணந் தெரிவித்து அருள்புரிவீரென்று, வேண்டி நிற்க, சிவபெருமான் அரசே! இத்தலத்துக் கிருபா நதியையும், பால்வண்ணலிங்கத்தையும் நீ மதியாது சென்றனை. சித்தனுருக்கொண்டு நாமே திருவாலங்காட்டில் போகவேண்டாமென்று சொல்லக்கேளாது நீ போயினை இத்தலத்தின் மகிமையை உனக்குச் சொல்ல வேண்டுமென்று கருதினோம். ஆதலால் நீ இங்கு வரப்பெற்றாய் என்று கூறி,

சிவபெருமான் பின்னுஞ் சொல்லுகின்றார். அரி, அயன், மால் முதலான யாவர்களும் பதினான்கு உலகமும் அழியுங்காலத்தும், அழியாமல் நிற்கப்படுவது இக் கருவைத்தல மொன்றே, இத்தலம் என்றுந் நமக்குகந்தது. நம் விராட்டு சொரூபத்தின் சுழிமுனைத் தானமாய்த் தோன்றுங் கடல் சூழ்ந்த எவ்வுலகும் இப்பதியின் கண்ணொடுங்கும். மீண்டுந் தோன்றுமாதலால், இது மூலமாகும். இத்தலத்திற்கு ஒப்பு இதுவேயாகும். வேறொப்பில்லை. வேறொப்புதற்குகந்த இடம் எவ்வுலகிலுமில்லை என்று திருவாய் மலர்ந்தருளித் தன் சோதியிற் கலந்தனன்.

பதினைந்தாவது

இலக்குவன் பிரமகத்தி தீர்த்த வரலாறு.

அயோத்தி பதியாளும் இராகவன் தன் தம்பியுடனும் பல விதச் சேனைகளுடனும் இலங்காபதி சென்று இராவணன், கும்பகர்ணன், இந்திரசித்தன் முதலிய அரக்கர்களைச் சம்மாரஞ் செய்து சீதாபிராட்டியுடன் அயோத்திக்குத் திருப்பி வருங்காலை

இராவணனுன பிரமகத்தித்தோசம் இராமச்சந்திரனைத்தொடர்ந்து வர, திகைத்து தன் கைக்கோதண்ட மெடுத்து வளைக்க விபீஷணன் இராகவா இப்பிரமகத்தித்தோசம் விலகுவதற்குச் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசிக்கவேண்டுமென்று வினவ. இராகவனும் குறுமுனிவனை நினைக்க, குறுமுனிவனு மவ்விடம் வர.

இராமச்சந்திரன் முனிவர் பெரும! இப்பிரமகத்தி தொடர்ந்து என்னை இடர் செய்கிறது. இது நீங்குமாறு ஒரு நெறி சொல்லவேண்டுமென்று கேட்க. முனிவரானவர் இராமச்சந்திரா நீ, நிர்மதை நதியிடஞ்சென்று சிவலிங்கங்கொணர்ந்து சேதுக் கரையில் பிரதிட்டை செய்து பூசித்தால் இராவணனைக் கொன்ற பாவம் தீரும். திருவானைக்காவில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்தால் கும்பகர்ணனைக் கொன்ற பாவந்தீரும். திருக் கருவைப்பதியில் சிவலிங்கம் பிரதிட்டை செய்து பூசித்தால் இந்திரசித்தனைக் கொன்ற பாவந்தீருமென்று சொல்ல இராமச்சந்திரன் மாருதியையழைத்து நீ, முனிவர் சொன்னபடி சிவலிங்கங்கொண்டுவாவெனக் கட்டளையிட்டனன்.

ஆஞ்சநேயரானவர் இராமபிரானிடத்து விடைபெற்றுச் சிவலிங்கங் கொண்டுவரக் காசித்தலத்திற்குச் சென்றான். இராகவன் குறிப்பிட்ட நேரத்தில் ஆஞ்சநேயர் வராதபடியால் சேதுவின் மணலை இலிங்கமாக்கிப் பூசித்திருந்தான். அப்போது ஆஞ்சநேயர் காசித்தலஞ்சென்று நிர்மதையிலிருந்து,சிவலிங்கங்கொண்டு வந்து இராகவன் முன் வைத்து அவனடியில் வீழ்ந்து அடியேன் கொண்டு வந்த இலிங்கத்தையும் பூசிக்கவேண்டுமென்றுபூசிக்க மாருதியே நீ. வருமுன் பூசித்த இந்த இலிங்கத்தை உன்பலத்தால் இழுத்துவிடுவாயானால் நீ, கொண்டு வந்த இலிங்கத்தையும் பூசிப்போமென்று சொல்ல மாருதி தன்வாலால் இலிங்கத்தை வளைத்துச் சுற்றித் தன்பலம் பூராவும் கொண்டெடுக்கச் சற்றும் அசைவின்றி வலிமையாக இருக்கக்கண்டு வெட்கித் தலை குனிந்து ஒதுங்கி நிற்க,

இராகவன் மாருதியை நோக்கித் தன் பக்கத்திலிருக்கச் செய்து, புன்னகை புரிந்து, நீ கொண்டு வந்த இலிங்கத்தையும் பூசிப்போமென்று முன்னைய இலிங்கத்திற்கு இணையாக நீ கொண்டு வந்த இலிங்கத்தை முன்னே தெரிசித்து. எம் இலிங்கத்தைப் பின் தெரிசித்தால் நற்பலன் அடைவாரென்றும், அவ்வாறில்லாமல் நம் சிவலிங்கத்தை முன்னே தெரிசித்துப் பின்னர் உன் இலிங்கத்தைத் தெரிசித்தவர் பலன் நிர்ப்பலனுகுமென்று வரம் கொடுத்துஞ் சேனைகளோடு அயோத்தி நகரஞ் செல்ல, கும்பகர்ணனைக் கொன்ற பிரமகத்தித் தோசந் தொடர்ந்து வர, அது தீரும்படி திருவானைக்காவிலுள்ள சம்புலிங்கத்தைத் தெரிசித்துப் பிரதிட்டை செய்ய, அப் பாவம் நீங்கி யப்பால் செல்லும் போது, இந்திரசித்தனைக் கொன்ற பாவம் இளையவனைத் தொடரவும்.

முனிவன் கூறியபடி திருக்கருவைப்பதியையுடைய யப்பதியாட்சிபுரியும் பாண்டிய னெதிர்கொண்டு வரவேற்க, பாவம் நீங்கும் நிட்சேப நதியில் மூழ்கித் திருக்களா நிழலமர்ந்த பெருமானைப் பூசித்து, அவ்விலிங்கத்தின் ஈசான திக்கில் ஒரு கோவிலமைத்துச் சிவலிங்கப் பிரதிட்டை செய்து, இராமச்சந்திரன் கூறிய வண்ணம் அந்த இலிங்கத்திற்கு இலக்குமணேஸ்வரரென்றுந் தேவிக்குக் கோமளாம்பிகை யென்னுந் திருநாமமிட்டுப் பூசனை செய்யப் பிரமகத்தித் தோசம் நீங்கப்பெற்று, வேந்தா வேந்தரான பாண்டியனிடம் விடைபெற்று இராமனுடன் அயோத்தி சென்று வாழ்ந்திருந்தான்.

இராமச்சந்திரனல் அவ்விலிங்கத்திற்கு இலக்குமணேஸ்வரரென்றுங், கோமளாம்பிகை யென்றுந் திருநாமமிட்டு வழிபாடு செய்து பிரமகத்தித் தோசம் நீங்கப்பெற்றபடியால், மற்றுள்ளோரும்போய்த் தெரிசிப்போர்க்குப் பிரமகத்தி முதலான பாவங்களும் நீங்கப்பெற்று நல்வழி பெறுவர். இவ்வாலயத்துக்கு மேற்கிலுள்ள ஆலயத்தில் இராமர், சீதை, இலக்குவன் இருந்து பூசித்துச் சென்றார்களென்று சூதமுனிவர் சொல்லலுற்றார்.

பதினாறாவது

குலபூடணன் யமனை வென்ற வரலாறு.

பூதலத்திலுள்ள மன்னர் யாவரும் வந்து அடிவணங்க இக் கருவைமா நகரத்தைக் குலபூடணப் பாண்டியனென்பான் அரசாட்சி புரிந்துவருந் நாளில், கன்னட தேசத்தில் சிவப்பிரிய னென்னுமோர் அந்தணனிருந்தான். அவனுக்கு மகப்பேறில்லாத தால், உலகின்ற அன்னையை நோக்கி, அநேக காலம் அருந்தவம் புரிந்து வந்தான். தவத்திற்கிரங்கி உமாதேவி சிவப்பிரியனே! பூமியில் நீ உள்ளவரை அற்ப ஆயுளையுடைய ஒரு புதல்வனை உனக்குக் கொடுத்தோம். அவன் மெய்யறிவுடையவனுகிச் சிவ பெருமானுக்காளாகிப் பூரண வாழ்நாள் பெறுவானெனச் சொல்லித் தேவி தன் சோதியிற் கலந்தாள்.

அவ்வாறே சிவப்பிரியனுக்குக் காத்தியானன் என்னுமோர் புதல்வன் உற்பவித்தனன். அச் சற்புத்திரனுக்குப் பல நூல்கலை களையும் பயிற்றுவித்து மன்மதனைப் போரில் வெற்றிபெற்றுப் பிரம்மச்சாரியாய் வாழுந்நாளில் தந்தையான சிவப்பிரியன் தன் மைந்தனுக்கு உமாதேவி வரங்கொடுத்த வரலாறு தெரிவிக்கக் காத்தியானன் பூர்ண வாழ்வுபெற இறைவனிடம் அருள்பெற்று வருவேனென்று தந்தையிடம் விடைபெற்றுத் தவ வனஞ் சென்றனன்.

அவ்விடஞ் செல்லும் வழியில், பரத்துவாச முனிவரைக் கண்டு, அடிபணிந்து, முனிவர் பெரும! எனக்கு நிறையாயுள் வழங்க வேண்டுமென்று பிரார்த்திக்க. முனிவன் மறையோய்! நீ கருதியவண்ணம் பூர்ண ஆயுள்பெற வேண்டின் தென்பாண்டி நாட்டின் திருக்கருவையம்பதி சென்று, அப்பதியைச் செங்கோ லாட்சி புரியும் பாண்டியனை நட்புக்கொண்டுத் திருக்களாப்பதியி லமர்ந்திருக்கும் பிறையணிந்த பெருமானை யன்போடு பூசிப்பா

யாளுல் பூர்ண வாழ்வ பெறுவாயென்று கூற, காத்தியானனுங் கருவையம்பதியடைந்து, மன்னன் குலபூடண பாண்டியனிடம் அடைக்கலம் புகுந்து, தன் தாய் தந்தையருடன் அக் கருவையம் பதியடைந்து, மன்னன் குலபூடண பாண்டியனிடம் அடைக் கலம் புகுந்து தன் தாய் தந்தையருடன் அக் கருவையம்பதியில் வாழ்ந்திருந்தனன்,

அந்நாளில் அவன் தந்தையாகிய சிவப்பிரியனும் பொன் னுலகடைந்தான். அப்போது அவன் மைந்தனுக்கு உமாதேவி கொடுத்த வரத்தின்படி ஆயுள் முடிவுபெற. எமதூதர்கள் அம் மறையவனுவியைக் கவர வந்தனர். அக் கருவையம்பதியில் ஐந்து கூப்பிடுதூரம் வரை சிவலிங்கத்தினின்றும் அக்கினிச்சுவாலை விச, அப்பதியை நான்கு பக்கமும் தேவர்கள் காவல் செய்து வருவதை யமதூதர்கள் பயந்து, அப்பதியை விட்டுப் புறப்பட்டுத் தன் எஜமானனுன இயமனிடம் போய்க்கூற எமதூதன் கேட்டுக் கோபாக்கினி கொண்டு தன் தண்டாயுதத்தைக் கையிலேந்தித் தன் வாகனமாகிய கரியநிறம்பூண்ட எருமைக் கடாவிலேறிக் கருவையம்பதி புகுந்து மறையவன் காத்தியானனை உயிர் கவரும் பொருட்டு அடைக்கலம்பெற்ற குலபூடணன் மாளிகைக்குள் புகுதலும், இயமனுடைய உருவம் பூர்வ வாசத்தால் அம் மறை யவனுக்குத் தெரிய அம்மறையவனும் பயந்து குலபூடணனிடத்து வந்து சொல்ல. மன்னன் கேட்டு இயமனைக்கண்டு வணங்கி நீ இங்கு வருவதற்குக் காரணம் என்னவென்று கேட்க, இயமன் உன்பால் அடைக்கலம் புகுந்த மறையவனுவி கவர வந்தோ மென்று சொல்ல. அதுகேட்ட அரசன் இயமனே! நீ கொண்ட நினைவு ஒழிந்து உன் பதிக்குச் செல்வாய் என்று கூறவும்.

இயமன் சினங்கொண்டு உனையடைந்தவனுயிரும், உன் னுயிரும் ஒருங்கே கொண்டு போவேன் என. அரசனும் என் னுயிர்போனுலும் என்னிடம் சரணுகதியடைந்த இம் மறையவ னுயிரைக் கவர விடமாட்டேன். நீ என்னசெய்தாலுஞ் செய்து பாரென்று கூற, இயமன் சபாசத்தால் அந்தணன் உயிரைக்

கட்டுவது கண்டு, கோபங்கொண்டு தன் கையில் வில்லெடுத்து வில்லை வளைத்து அம்புகளை இயமனை நோக்கிவிட, இயமனும் அரசன் மேல் தண்டாயுதத்தை ஏவ. அரசன் விட்ட பாணங்களை யெல்லாம் தண்டாயுதம் அறுத்துத்தள்ளி மன்னன்பாற்சென்றது. மன்னன் தனக்கு இந்திரன், நாரதர் சொல்லுக்கிசைந்து திருக் களா நிழலமர்ந்த பரமன் தனக்குக்கொடுத்தக் காமேசுர வாழி யென்னுமாயுதத்தை யெடுத்துவிட, அது இயமனுடைய தண்டா யுதத்தைப் பொடிசெய்து, எமனையும், எமதூதர்களையும், மூர்ச்சை யடையச் செய்து மீண்டும் மன்னன் கையில் வந்தமர்ந்தது.

மன்னனும் வெற்றியடைந்தோமென்று தன் கையில் வெற்றிச் சங்கெடுத் தூதலுற்றான். பின் தேரை விட்டிறங்கி அந்தகன் அணிந்த மணி முடியைக் கைக்கொண்டு எமபாசத்தால் கட்டுண்ட மறையவனுடன் தன்னரண்மனை புகுந்து மகுடத்தை யும், மறையவனையும் வைத்துவிட்டு, அன்பால் உள்ளமுருகிப் பால்வண்ணனைப் பலவாறு தோத்திரஞ்செய்து நிற்க.

இயமனும் மூர்ச்சை தெளிந்து சிவனடியாருக்குப் பிழை செய்தோம். அதனால் நாம் துயரடைந்தோம் என்று பயந்து களாவனப்பதியை யடைந்து பால்வண்ணனை மனமுருகித் தோத் திரஞ் செய்யக் களாவனப் பெருமான் திருவுள்ளமிரங்கித் தேவி யோடு இடபாகத்தில் தோன்ற, பாண்டியனும் இயமனுங்கண்டு அடிபணிந்து போற்றி நிற்க.

சிவபெருமான் யமதர்மனே! இம்மறையவன் என்னை அன்புடன் பூசித்தான். இவனுக்குப் பூரண ஆயுள் கொடுத்தோம். இவனை அறியாமல் நீ, வந்ததால் இத்துயரடைந்தாய் என்று பின்னுஞ் சொல்லுவான்,

இயமனே! நீ இக் கருவையம்பதிக்கு ஐந்து குரோச தூரம் வரை யணுகக்கூடாது. இப்பதிக்குத் தகுந்த தேவர்கள் காவல் புரிந்துள்ளார்கள். உன் தூதரையும் பிழைக்கச் செய்தோம். இந் நாட்டு மன்னனாகிய குலபூடணனை நீ, நட்புக்கொண்டு இழந்த உன் மணிமுடியைப் பெற்றுப் போவென்று சொல்லி,

குலபூடணனைப் பார்த்து குலபூடண! நீ, நம்பால் வைத்த அன்பால் இயமனையும் வென்றாய். அதைக் கண்டு யாம் மகிழ்வுற்றோம். என இன்சொல் இயம்பித் தன் சோதியிற் கலந்தனன். பின்னர் இயமனும் குலபூடணனை நட்புக்கொண்டு இழந்த தன் மணிமுடி பெற்று கார்த்தியானனைப் பிணித்த பாசத்தை எடுத்துக் கொண்டு தன் பதியடைந்தான்.

பின்னர் கார்த்தியானன் மூர்ச்சை தெளிந்தெழுந்து பால் வண்ணப்பெருமானைப் பலவாருக துதிசெய்து குலபூட பாண்டிய னிடம் விடைபெற்றுத் தன் தேசமாகிய கன்னட தேசத்திற்குச் சென்று தந்தை சிவப்பிரியனோடு அநேக காலம் வாழ்ந்து சுகித் திருந்தான்.

பதினேழாவது

சேர வரதுங்கர் தெரிசனம் பெற்ற வரலாறு.

இக் கருவைமா நகரத்தைக் கலியுகவாண்டு இரண்டா யிரத்து ஐநூற்றிருபத்தைந்தாவது காலத்தில் இராஜபூடண னென்னு மரச னாட்சி புரியுங்காலே, மலையாள நாட்டை அரசு புரிந்து வந்த இராஜ வன்மாவென்னு மரசன், களா நிழலமர்ந்த பிறைசூடும் பெருமானைக் கண்டு தெரிசிக்க வாசைகொண் டிரவு பகலாய் சிந்தனை செய்துகொண்டிருக்கக் கருவைமா நகர மரசா ளும் தம் பகைவனாகிய இராசபூடணனைக் கண்டு தெரிசிக்காம லெப்படிப் பால்வண்ணனைத் தெரிசிப்பது என்ற சிந்தனையி லாழ்ந் திருக்குங் காலைக் களாவனப் பெருமா னரசன் கனவிற் றோன்றி, அன்பனே! நமது தெரிசன முனக்குக் கொடுப்போம். கருவை யம்பதி புறப்பட்டு வருவாயெனக் கூறி மறைந்தனன்,

பின் மலையாள நாட்டு மன்னனான இராஜவன்மா வென்போன் விழித்தெழுந்து, நாயினுங் கடையவனான வென்னைக் கடைத்தேற வண்ண மெளியேனையு மொருபொருளாக வெண்ணிக் கனவில் வந்து உரைசெய்ததை மகிழ்ச்சி கொண்டு, தன் சேனைகளுடன் தெரிசனத்திற்காகக் கருவைமா நகரஞ் செல்ல, நம் பால்வண்ணநாதப் பெருமானின் களாவனப் பதியிலிருந்து, ஒரு சிறுத்தைத் தோன்றச் செய்தான். சிறுத்தையான புலி பெருஞ்சீற்றத்துட னகருக்குள் வரவுஞ் சனங்கள் பயந்து, நகரையரசாட்சி புரியு மிராசபூடணனிடஞ் சென்று, சிறுத்தையின் கொடுஞ்செயல்களையு ளிக்கி, யெங்கள் பயந்தீரும்படி செய்வாயெனக் கூறலுற்றனர்.

அவ்வாறே வரசனுந் தனது நால்வகைப் படைகளுடன் சிறுத்தைப் புலியைத் தொடர்ந்து சென்றான். அப்போது மாலயனுக் கெட்டாத பால்வண்ணப் பெருமான், மலையாள வரசனான விராச வன்மாவுக்குக் கருவை மன்னனைப்போல வுருக்கொண்டெதிர்சென் றழைத்துத் திருக்கோவில் போய்ச் சிவதரிசனஞ் செய்து வைத்தான். அதன்பின் இ ரா ஜ வ ன் ம ா வென்போனன்புடன் பூசித்துத் துதித் தாடிப்பாடித் தன்னிருப்பிடஞ் சென்றனன்.

சிறுத்தைப் புலியைக் கொல்லச்சென்ற வரசன், காட்டில் கொன்று, தன் படையுட னரண்மனை செல்லும்போது, நகர மக்கள் நம்மரசன் எதிரியான மலையாள வரசனை வெதிர்கொண்டு சுவாமி தரிசனஞ்செய்து வைத்தானே வென்று பேசுகிறதைக் கேட்டு, இது என்ன அதிசயம். நாம் சிறுத்தையைக் கொல்லும் பொருட்டு வனத்துக்குப் போனேமே. அவ்வமயம் னம்போலுருக்கொண்டு வந்தவன் யார்? இங்கு நடந்ததெல்லாந் திருக்களாவுடையானே யன்றி, வேறில்லையென்று தெளிந்து, இன்னுமின்னகரத்திலிருந்தா லெப்போதாவது நமக்குத் தீங்கு விளையுமென்று நினைந்து, நகரை விட்டுப் புறப்பட முயற்சித்தான்.

அதன்படிக் கருவைமா நகரம் விட்டு, அதன்கிழக் திசையி லமுதாசலமென்ற விடத்தில், தென்பக்கம் ஒரு நகர் நிருமாணஞ் செய்து, நல்விழாக்கண்டு, அங்கு குடியிருந்தான். இவ்வாறிருக்க நம் கருவைப் பெருமானந்த இராஜபூடணனன் கனவிற் றோன்றி, வரசே! ஒன்றுக்கு மஞ்சே! லுன்னையு முன்னரசையுங் காப்போம் மீண்டுந் நகரத்திற்கு வந்து அரசாட்சி செய்து வருவாயெனக் கூறி மறைந்தனன்,

அரசனும் விழித்தெழுந்து, பெருமான் கனவில் கூறிய பிரகாரம் நகரையடைந்து, செங்கோலாட்சி புரிந்து வந்து சிவ பெருமானை வழிபட்டு நல்வாழ்வு பெற்று வந்தான்.

பதினெட்டாவது

அரிபிரம்மாதியர் சாபந்தீர்த்த வரலாறு

சிவபெருமானை மதியாமல் தக்கன் செய்த யாகத்திற்குத் துணையாய் நின்ற அரி, பிரம்மாதியானவர்கள் கருவையம்பதியின் நிட்சேப நதிக்கரையி னிருபக்கமுந் தருப்பையாகவும், சந்திரன் உடுக்கள் தாமரையாகவும், மருத்துவர் இருகோடியராகவும், சூரியர் கோடி கடம்பாகவும், அட்டவசுக்கள் கோடி பலா மரங் களாகவும், உருத்திரர்கள் பதினுறுகோடி அகில் மரங்களாகவும், தக்கன், இளையன் ஒன்பது பேருங் கூவிளமாகவும், பிருகுமுனிவர் கடுக்கையாகவும், உயர்தர முனிவர்கள் யாவரு அருகன் புல்க ளாகவும், எச்சன் வெள்ளெருக்காகவும், ஏழு கிரகங்களும் மாதுளை மரங்களாகவும், ரதியும், மன்மதனும் கவரிமான் ரூபமாகவும், மற்றுமுள்ளோர், மிருகம், பறவைகளும், மரஞ், செடி, கொடி, புதர்களாகவுமிருந்தன.

அவ்விதமிருக்குங்காலை மாலு, மயனுந் தம் பத்தினிகளோடும், வாகனங்களோடும், பூசனைக்குரிய பொருள்களோடுங் கருவைமா நகரத்திற்கு வந்து, நிட்சேப நதியில் மூழ்கித் தருப்பை, வில்வம், பூக்கள் கொய்துப் பால்வண்ணப் பெருமான் முன் சென்று மலர் வகையாலும், கனி வகையாலும் பூசித்து வழி பட்டார்கள்.

அதன்பின் மற்றுங் கனிவகைகளைத் தம் வாகனங்களாகிய அன்னப்பட்சியுங், கெருடனுஞ் சேகரித்துக்கொடுக்க, இலக்குமியும், சரஸ்வதியும் வாங்கி மாலயனுக்குக் கொடுக்க, மாலயனும் வாங்கி இரவு பகலாகப் பால்வண்ணப் பெருமானைப் பூசா விதிப் படிப் பூசித்து வந்தார்கள். அவ்வாறிருக்குங் நாளில் ஒருநாள் பால்வண்ணப் பெருமான் அரிபிரம்மாதியரின் சாபந் தீர்க்கத் திருவுள்ளங்கொண்டான்.

பெருமான் வேடுவனாகவும், பெருமாட்டி வேடுவ மாதாகவு முருவமெடுத்து, மண்ணில் தெர்ப்பையைப் பரப்பி, யதன்மேலானையின்றோலை விரித்து, வேடுவ மாது தன் கைகளால் தன் னாயகன் காலை வருடவுமவன் தூங்குபவனைப்போல் காலை நீட்டிப் படுத்திருந்தனன்.

அப்போது வேதனுமாலுந் நதியில் தீர்த்தமாடி, மலர், தருப்பை, வில்வமெடுக்கக் களாவனப் பதிக்கு வரும் வழியில், வேடன் கிடந்த நிலையைக்கண்டு, நீ யாரடா? வறிவில்லாதவனே. இறைவனுக்குரிய பொருளை அநுசிதஞ்செய்து கெடுத்தாயே! உன்னை இப்போதே என் சக்கராயுதத்தால் உயிரையழிப்பே னென்று வினவினன்.

வேடன் மனங்கொதித்து இவ்வன மெங்களுக்குப் பாத்தி யப்பட்டது. இதிலுள்ள பொருள்கள் எம்மக்களால் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வாறு எங்களுக்குரிமையிருக்க, நீ கோபிப்பதற்கென்ன காரணம்? என்று கூற, திருமாலோன் றும் பதிற்பேசாமல் வேடனது இரு கால்களையும் பிடித்திழுக்க

வேடன் திருமாலைக் கடைக்கணோக்கி யாரடா? என் காலைப் பிடித்திழுப்பவன். உனக்கென்ன அகந்தையாயெனக் கேட்கத் திருமால் தன் கையையோங்கி வேடனையடிக்க, வேடனுந் திருமாலைப் பிடித்துக்கட்ட. இவ்வேளையில் பிரமனும் வந்து வேடனைப் பிடித்தடிக்கப் பிரமனையும், மாலையும் வேடன் தன் கையாலெடுத்தப்பாலெரிய அவ்விருவருங் களாவனத்தில் விழ்ந்து மயக்கமுற்றனர்.

அதுசமயங் கெருடனும், அன்னமுங் கண்டு வேடனுடன் போர் செய்ய. வேடன் கெருடனையு மன்னத்தையுந் தன் வில் நாணில் கட்டுவதைக்கண்ட இலக்குமியுஞ், சரசுவதியு மிதுஎன்ன விபரீதமென்று கண்கலங்கி இறைவனைத் தோத்திரஞ்செய்து நிற்க மூர்ச்சை தெளிந்த திருமால் வனத்தில் திருவிளையாடல் செய்ய வந்தவன் வேடனல்ல. வேதங்களுக்குமெட்டாத சிவபெருமானே யென்று தேறி யொருவருக்கொருவர் பேசிக்கொண்டிருக்குந் நேரத்தில்,

பெருமான் வேடருபங் கறந்து சுயரூபத்துட னெதிரில் நிற்கக்கண்ட திருமாலும் அயனுமடிபணிந்து ஐயனே! நாங்கள் செய்த பெரும்பிழை பொறுத்தெங்களை மன்னித்து அருள்புரிவாயென வணங்கி நிற்குந் திருமாலையு மயனையும் பார்த்து இறைவன் கூறலுற்றனன். தக்கன் யாகத்தில், நீவிர் பெரும்பிழை செய்தீர்கள். அதன் பாவத்தாலெம்மை யடைந்து, எம்மை ஓராண்டிங்கு பூசித்ததால் உம் பாவத்தைத் தீர்த்தோமென்று கூறிச் சோதியிற் கலந்தனன்.

பத்தொன்பதாவது

இந்திராதியர் சாப விமோசனமும், கரிவலம்வந்தநல்லூர் எனத் திருநாமம் பெற்ற வரலாறும்.

கருவைமா நகரத்தைச் சேர்ந்த அமுதாசலத்தின் கீழ்பால் திட்டினியம் என்ற நகரமிருக்கிறது. அதில் வேடுவர்களிருந்து வாசஞ்செய்கிறார்கள். அந் நகரைக் காதகன் என்னும் அரசன் இடும்பி என்னும் ஓர் மாதை மணந்து அரசாட்சி செய்துவந்தான். அந்நாளில் அவர்களுக்கு மக்கட்பேறு இல்லாததால் வருத்த முற்றுத் தன் இன பந்துக்களாகிய பெரியவர்களிடத்திற் கூற,

அப் பெரியார்கள்! அரசனே! நம் குலதெய்வமாகிய சாத்தனையும் குமரனையும் நோக்கித் தவம் செய்வீராயின் மக்கட் பேறு உண்டாகுமென்று கூறுவாராயினர், அதன்படிக் காதகனென அரசன் சாத்தனையும் குமரனையும் நோக்கித் தவம் செய்து மனைவி யுடன் வாழும் நாளில், தக்கன் யாகத்தில் சாபமுற்ற இந்திரன், காதகனென அரசனுக்கும் அவன் மனைவியான இடும்பிக்கு மகவா யவதரித்தான்.

அருந் தவத்தால் பெற்ற சற்புத்திரனுக்குக் காரியென்னுந் திருநாமமிட்டுச் செல்வமாக வளர்த்து நூல் கற்பித்து, ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, அன்பு பாராட்டி வளர்க் கப்பட்ட காரியென்பானுக்கு வயது பதினாறு அடையப், பெற் றோர்கள் தன் புத்திரனுக்கு மண விழா நடத்தத் திட்டஞ் செய்துகொண்டிருக்க.

முன் சாபத்தால் இந்திரன் மனைவியான சசி என்பவள் தன் மனைவியான இடும்பியின் சகோதரனை ஜெகனென்போனுக்கும் அவன் மனைவி சுனி என்பவளுக்கும் அவதரித்த இராஜேந்திரி என்னும் புத்திரி வளர்ந்துகொண்டிருந்தாள். அப் புத்திரியைக் காதகன் மகனை காரிக்கு திருமணம் பேசி நந்நாளில் மண விழா நடத்தினர்கள்.

பின் காரியென்பான் இராஜேந்திரியுடன் இல்லறம் நடத்தி வரும் நாளில், சாபத்தால் இந்திரன் மகன் சயந்தன், இராஜேந்திரியின் வயிற்றிலுதித்தான். அம் மகவுக்குக் காரியென்போன் சாத்தன் என்னும் பெயர் சூட்டி, அருமை பாராட்டி வளர்த்து வரும் நாளில் தனக்கு மூப்பெய்திச் சிவபதவியடைந்தான்.

தக்கனிப்பதியில் பேயாகி இருந்தான். சுவாகை என்னும் தேவியோடு வாயுவும் நாயாகப் பிறந்தான். தூமோரனை என்னும் தேவியுடன் மறலியானவன் பன்றியாகப் பிறந்தான். உக்ரி என்னும் தேவியுடன் நிருதி உருவையாகப் பிறந்தான். வாருணி என்னும் தேவியுடன் வருணன் எண்குவாகப் பிறந்தான். சுப்பிரசூயை என்னும் தேவியுடன் குபேரன் கத்தூரியாகப் பிறந்தான். இந்திரன் யானை காட்டானையாகவும், விஞ்ஞையர், சித்தர் கிளிகளாகவும் பிறந்தார்கள். காமதேனு, கருவைப்பதியிலுதித்து, நதிப்புனலில் மூழ்கிக், களாவீசனைப் பூசிக்குங் கருத்துடைய குணம் பெற்றும், தத்தைகள் செம்பாதம் பரவி ஏத்தவும், ஒமலி வலஞ்செய்யவும். நானமா, நாணத்தை இறைவனுக்கு அணியவும், மற்றும் பன்றி முதலெல்லா வன விலங்குகளும் பரமனுக்குப் பணிசெய்யவும், யானை பரமனுக்கு வெயில் படாமல் தருப்பையால் பந்தலிட்டு, முள் மரங்களால் வேலியிட்டு சிந்தையொருமித்து நிட்சேப நதியில் மூழ்கித் தன் துதிக்கையால் புனல் முகந்து அபிடேகஞ் செய்து, பல மலர்களால் பூசித்து வழிபாடு செய்திருக்குந்நாளில்.

காரியானவன் தன் மகனுன சாத்தனுடனும், வேடுவக் கூட்டத்துடனும் களாவனத்தில் வேட்டையாடச் சென்ருன். அவ்விடத்தில் பால்வண்ணலிங்கத்தைக் கண்டதும் இவனை யார் பூசிக்கின்ருர்களோவென்று தானும் பூசிக்க எண்ணி நிட்சேப நதியிலாடி நன்மலர்களாலும், தீர்த்தங்களாலுமர்ச்சித்து ஊன், மதுகொண்டு நிவேதித்துத் தினமும் பூசை செய்ய அவனுக்குப் பத்தியே முதிர்ச்சியாக இறைவன் பக்கத்தில் மிருகங்கள் வராமல் முள்வேலியிட்டுத் தன் பதியடைந்தான்,

அவனுடன் வந்த வேடுவர்களெல்லாங் கூடி நம் அரசனுக்குப் பைத்தியம் ஏற்பட்டுவிட்டதென்று. அவனைப் பெற்ற தாய் தந்தையரிடங் கூறினர்கள். தாயான இடும்பி கேட்டு மைந்தா ! முன்னமே உன் மூதாதையர்கள் வனத்தில் சிவலிங்கமிருக்கிறதென்றுந் தினமும் வழிபட்டு வந்தார்கள், அதன்படி நீயும் பூசித்து வருவாயாகவென்று கூறினுள்.

அதன்படி அவன் வழிபட்டு வா, அவ்வனத்திலுள்ள மிருகங்கள் யாவும் இரவில் வழிபட, வழிபடுவதற்கிடையூருக விருக்கும் முள்வேலிகளைக் கண்டு, வேடர்கள் நம்மைப் பிடிப்பதற்காக இவ்வாறு செய்திருக்கிருர்களென்றுங் கருதி இறைவனைப் பூசிக்காமல் உணவு உட்கொள்வதில்லை என்று உறுதிகொண்டு வேலியைச் சுற்றிச் சுற்றித் துயரடைந்திருக்கும்போது யானை வந்து காரியானவன் ஏற்படுத்திய வேலியைச் சிதைத்துத் தள்ளி உட்புகுந்து விமலனை யர்ச்சித்துப்போக, மற்றைய மிருகங்களும் அவ்வழியே சென்று பூசித்து வெளிவந்ததும் யானையைப் பார்த்துச் சொல்லலுற்றது.

யானையே ! நாங்கள் பூசிக்க வழிசெய்தாய். இன்றுமுதல் நாமெல்லோரும் ஒன்றுகூடிச் சிவலிங்கத்தை வழிபாடு செய்ய வேண்டுமென்று ஒப்பந்தம் செய்துகொண்டது. வழக்கம்போல் காரியும் பூசனைக்கு வரும்போது தாம் இட்ட வேலி முழுவதும்

அழிக்கப்பட்டிருப்பது கண்டு, இதை அழிக்கப்பெற்றவர் யார் என்று வருந்தி, முன்னைய வேலியிலும் வலிமைமிக்க வேலியிட்டு நறுமலர்களாலும், இறைச்சிகளாலும், நெய்வேதனம் புரிந்து வழிபட்டு தன் பதி போயடைந்தான்.

இவ்வாறு பகலில் காரியும், இரவில் யானை முதலிய மிருகங்களும் பூசித்து வர, அவற்றின் சாபந்தீரும் நாளேற்படக், காரியும் இரவில் தங்கி மிருகங்களின் கொடுஞ் செயல்களை வேட்டையாடி முடிவுகட்டுவோமென நினைத்துத் தன் மாமனுன ஜெகனும் வேடர் கூட்டங்களோடுஞ் சென்றனர். அவ்விரவில் வழக்கம் போல் மிருகங்கள் இறைவனைப் பூசிக்க வர, மற்றைய வேடர்களும் பயந்தோடிப்போய் இறைவனைப் பூசிக்குங் கருத்தழிந்து, அவ்விடமுள்ள புதறிற் பதுங்கித் துன்பத்திலாழ்ந்து கொண்டிருந்தது. நாயைப் பாசம் வாங்கி யானை மீதெறிய, யானை சீறியதால் நாய் பயந்தோட, சாத்தன் அந்த யானையை நோக்கி நடந்தான். அவனைக் கண்டு, காரி நீ, நில்லென்றுத் தன் கையில் வில் வாங்கி பல அம்புகளை யானையின் மீது விட்டான்.

அது சமயம் கொடிய பன்றியொன்று காரியின் காலைப் பிளந்தன. காரி கோபத்துடன் பன்றியைக் கொன்று மற்றைய மிருகங்கள் யாவையுங் கொல்லப், படைகளுடன் காரி நிற்கும் போது ஜெகனை ஒரு நாய் கடித்துத் தள்ள ஜெகனுமிறந்தான். அந்த நாயைக் காரி கொன்றான். வேடர்களோடி யிடும்பிபாற் சென்று உன் தமையன் ஜெகனும் மிருகத்தாலிறந்தான். காரியும் மிருகத்தாலிறப்பானென்று கூற, யிடும்பியும், இராஜேந்திரியும் பயந்து வனத்திற்கு வந்தார்கள். வந்தவர்களை காரி இங்கே நில்லுங்களென்று யானை மீது பல அம்புகள் விட்டு வருத்தவும்,

யானையானது இராஜேந்திரி, யிடும்பி மற்றுளோரையுந் தனது துதிக்கையாற் றூக்கியடிக்க அவர்களிறந்தனர். பின்னர், அங்கு நின்ற காரியையும் கொல்லப் பார்த்தது. காரியும் அந்த யானையின் துதிக்கை வழியாக மத்தகத்திற்கு ஏறினன். அவனை

கீழே விழும்படி யானை உதறித் தள்ளத் தரையில் விழுந்த காரி யானையை இரு கூறுகப் பிளக்கும்படிப் பலமாக அடித்தான். அடிபட்ட யானை பொறி கலங்கிப் பூமியிற்கிடந்தெழுந்து இறைவனைத் தியானிக்க,

இறைவன், யானைக்குங் காரிக்குந் ரிஷப வாகனத்தில் காட்சி கொடுக்கக் காரியாகிய இந்திரனுனவன் சாத்தன், சயந்தன், வெள்ளையானை, இராஜேந்திரி, இந்திராணி மற்றும் இறந்த மிருகங்களெல்லாமுருவம் பெற்றெழுந்தன. யாவரையும் பார்த்து உமாதேவியானவள் உங்கள் பாவங்கள் யாவும் நீக்கினேம். உங்கள் பதிக்குச் செல்லுங்களென வினவ, யானையானது அண்ணலே! உன்னை நான் வலம் வந்து பூசித்ததால் இந்நகருக்குக் கரிவல நகரென்று பெயர் கொடுக்கவேண்டுமென்று கேட்க அவ்வாறே யிறைவன் கொடுத்தோமென்று கூறிச் சோதியிற் கலந்தான். இந்திரனுஞ் சாபம் நீங்கி வெள்ளையானை மீதேறி தன் பதி போயடைந்தான்,

---

இருபதாவது

பராசக்தி பீடம் உண்டான வரலாறு.

கருவைமா நகரத்தை ஆட்சிபுரிந்து வந்த வீரசேகரனென்னும் அரசன், அம்பிகையை மனதில் தியானித்துத் தேவியின் சந்நிதியில் இராப் பகல் துயி, லூன் நீக்கி மூன்று தினம் பூசித்திருக்க, அதுலாம்பிகையானவள் நேரிற்றோன்றி வீரசேகரா! உன் பத்திக்கு மெச்சினேம். வேண்டிய வரம் பெற்றுக்கொள் என்று வினவ.

அரசனுனவன் அன்னேயான ஒப்பனேயம்பாளே யிருகரங்கள் கூப்பிச் சிரசின்மேல் கை வைத்து வணங்கி, அதுலாம்பிகையே! அடியார்களிதயத்தில் கோயில் கொண்ட அருட் குன்றே! என திடர் தீர்க்குந் நாயகியே! என்னறிவின் சுடரே! உலகன்னேயே! என்று பலவாருகத் தோத்திரஞ் செய்து தொழுது மனமுருகிப் போற்றி நிற்க.

அம்பிகையான ஒப்பனேயம்பாள் மந்திரங்களுருப்பெற்ற எந்திரமான வொன்றை, வணங்கி நிற்கும் அம் மன்னன் கையிற் கொடுத்து, வீரசேகரா! இந்த இயந்திரமானது, என் சொந்தவுரு வென்று நினைத்து, நாடோறு வழிபடுவாயானுல், மின்னல் படுத்தும் பிணிகளேயும், முனி பூதங்களும், பசாசுகளுந், நவக்கிரகத்தால் வருந் தோசங்களும், நீங்கப்பெற்று மக்கட்பேறும், பல வகைச் செல்வங்களும், புகழுங், கல்வியு முண்டாகு மெனவும்,

பின்னுஞ் சொல்லுகிறுன். இந்த இயந்திரத்தை நம்மை வழிபட வருங் குறுமுனிவன் சொற்படி, ஆலயத்தின் வெளிப் பிரகாரத்தில் தென்றிசையிலோர் ஆலயமமைத்துப், பீடமியற்றி, யப்பீடத்தின் கீழ் நம் மந்திரமாகவுறுப்பெற்ற இயந்திரத்தைத் தாபனஞ்செய்து, பூசிப்பாயெனக் கூறி, தேவி தன் சோதியிற் கலந்தனள்.

அதன்பின் வீரசேகரபாண்டிய மன்னனுங், குறுமுனிவன் வரவை யெதிர்நோக்கி நிற்க, சிலகாலஞ் சென்றபின், தேவியின் அனுக்கிரகப்படி, அவ்விடங் குறுமுனிவன் வர, மன்னனுனவன் குறுமுனிவனே வரவேற் றடிபணிந்து, தேவியி னருட் டிரத்தைக் கூற, அவ்வாறே குறுமுனிவனும், ஆலயத்தின் தென்றிசையிலோ ராலயம் நிருமாணஞ் செய்யும் விதிகளேக் கூறித் தன்னிருப்பிடஞ் சென்றுன்.

அதன்படி நகரை யரசாளு வீரசேகர மன்னனுங், குரு முனிவன் காட்டிய விடத்தி, லவன் கூறிய விதிகளின்படி ஓராலய மமைத்துப் பீடமியற்றி, அப்பீடத்தின்கீழ் தேவியான வொப்பனை யம்பாள் திருக்கரங்களா லருள் செய்யப்பட்டுத், தன் மந்திர வுறுவான வியந்திரத்தைத் தாபனஞ்செய்து, பூசித்து, அநேக காலஞ் செங்கோலாட்சி செய்து, சிவபதம் பெற்றான்.

இன்றும் நகரமக்கள், வரும் பௌரணமி நாளாகிய நந் நாளில், உபவாசமிருந்து, திருவிளக்கேற்றிப், பத்தியோடு பூசிப் பவர்களுக்கு, நவக்கிரகங்களா லேற்படும் தோசங்களும், மற்று முனி, பசாசு முதலியவைகளின் பயங்களும், பிணிகளும், வறுமை களுந் நீங்கும்படி, பக்தகோடிகளுக்குப், பராசக்தியான வன்னை, தன்னருளை வழங்கிக்கொண்டு, ஆலயத்தின் தென்திசையி லெழுந் தருளி யிருக்கின்றனள்.

இருபத்தொன்றாவது
மாலயன் பஞ்சலிங்க தெரிசனமறிந்த
வரலாறு.

முன் காலத்தில் திருமா லுந்தியி லுற்பவித்த பிரமனானவன், தனியாக ஆலோசனை செய்யலுற்றான். இவ்வுலகம் நாம் படைக்கு முன் எங்கிருந்தது? பின்ன ரெங்கொடுங்குகிறது? என்ற சந் தேக நிவர்த்திக்காகத் திருப்பாற்கடலில் ஆதிசேடனின் மேல் துயில்கொள்ளவும், மூதேவி, சீதேவி யென்னு மிரு தேவிகள் பாதம் வருடிக்கொண்டிருக்குந் திருமாலைக்கண் டடிபணிந்து, ஐயனே! எனக்குளேற்பட்ட சந்தேகத்தைத் தவிர்க்க வேண்டு மென்று வினவினன்,

திருமாலும் யான் உன் போலவே சந்தேகங் கொண்ட மனத்துடையேன், அதன் விவர மெனக்குந் தெரியவில்லை, அதன் விவரத்தைப் பிறையணிந்த சிவபெருமானிடஞ் சென்றாற் றீருமென் றிருவருஞ் சிவபெருமான் வீற்றிருந்தருளும் வெள்ளியங் கிரியடைந்து சிவபெருமானைக் கண் டடிபணிந்து வணங்கி நிற்க. நீ விரிருவருள்ளத்தி லெழுஞ் சந்தேகத்தை யறிந்தேன்.

உன் கருத்தைச் சித்துருவ புரமென்னுந் திருக்கருவைத் தலத்தில் நீவிர் சென்று திருக்களாப்பதியி லமர்ந்திருக்கும் விட முண்ட விமலனைப் பூசித்திருங்கள். உங்கள் சந்தேகத்தை யவ் விடத்தில் நிவர்த்தி செய்வோமென்று திருவாய் மலர்ந்தருளினன்,

அவ்வாறே திருமாலு மயனும் பெருமான் மொழிகேட்டு மனதில் கழிப்புற்றுப் பலவாறு துதித்துக்கொண்டு, திருக் கருவைத் தலமடைந், தங்கு விளங்குகின்ற சிவலிங்கத்தை மெய் யன்புடன் பூசித்திருக்குந் நாளில், ஒருநாள் இடபவாகன ரூபமா யெழுந்தருளக்கண்டு திருமாலு மயனும் மெய்யன்புடன் வணங்கி நிற்க, பெருமான் பஞ்சலிங்கங்களைக் காட்டியதன் தன்மையை யுரைக்கலுற்றனன்.

இதன் தென்றிசையில் புன்னைவனத்து ளமர்ந்திருக்கு மிலிங்கம் பிருதிலிங்கம் இதன் நிருதித் திக்கில் சூதவனத்துளமர்ந் திருக்கு மிலிங்கம் அப்புலிங்கம் இக்களாவனத்து ளமர்ந்திருக்கு மிலிங்கந் தேயுவ லிங்கம், இதன் வாய்வுத் திக்கில் வில்வ வனத்து ளமர்ந்திருக்கு மிலிங்கம் வாய்வுலிங்கம், அதன் வாய்வுத் திக்கில் பலாசக்கர வனத்தி லமர்ந்துள்ள லிங்கம் ஆகாயலிங்க மென்று திருமாலுக்கு மயனுக்குங் காட்டி இப் பஞ்ச லிங்கத்துக்குள்ளே பஞ்சபூத விகாரமான உலகமெல்லா மாகியிற் றோன்றும். இந்த லிங்கங்களுக்குள்ளேயே மீண்டு மொடுங்கும். ஏனைய இலிங்கங்க ளெல்லா மிந்த சோதி இலிங்கத்திற்குள் தோன்றியொடுங்கும், இந்த பஞ்ச இலிங்கமானது எல்லா உலகங்களுக்கும் மூலப்

பொருளென்று தெரிவியுங்கள் என்று சொல்ல, திருமாலுமயனும் வணங்கி ஐயனே! நாங்கள் இப்பதியில் ஞானம் வரப்பெற்றோம். இத்தலத்தில் எந்தப் பாதகராவது வந்து தெரிசித்தாலும், அவர் பாவந்நீங்கி நல்வழிப்பட அருள்புரிய வேண்டுமென வினவ, அவ்வாறே கொடுத்தோமென்று பின்னு மிறைவன் சொல்லலுற்றான்.

இதன் தெக்கண திசையி லரையோசனை தூரத்தில் நாக சுனையெனுந் தீர்த்தமுண்டு. இதில் புன்னைவனத்தே மாலுடன் விளங்கித் தோன்றுந் திருமேனி காண உமையவள் அரிய தவஞ் செய்த நாளில் திருமாலுடனிருக்குந் திருமேனி காட்டிக் கோமதி யென்னுந் தேவியுடன் பால்வண்ணநாதனே சங்கரநாராயண னென்னும் பிருதிவி லிங்கமாக திருப்பெயருடன் கோயில்கொண் டிருக்கிறான். இத் தலத்தின் நிருதி திக்கில் முக்கால் யோசனை தூரத்தில் சிவகங்கை யென்னுந் தீர்த்தமுஞ் சூத வனமென்னுந் தோப்புமுண்டு. அத் தலத்தில் சேர, சோழ, பாண்டிய மூவருந் தம் தம் எல்கையின் காரணமாக ஒருவருக்கொருவர் யுத்தஞ் செய்ய ஆரம்பிக்க, மத்தியஸ்தமாகத் தோன்றி ஞாயங் கூறும் பொருட்டு மத்தியஸ்தனென்னும் பெயர் கொண்டு, அகிலாண்ட ஈஸ்வரி யென்னுந் தேவியுடன் பால்வண்ணனே யப்புலிங்கமாக இருந்தானென்றும், இதன் வாயுத் திக்கி லைந்து குரோச தூரத்தில் வில்வ வனமென்னுந் தலத்தில் திரிபுர அசுரரை வென்ற வயர்வு நீங்கச் சிவபரிபூரணி யென்னுந் தேவியோடு பால்வண்ணனே வாயு இலிங்கமாக விருந்தானென்றும், அதன் வாயுத் திக்கில் பலாசத்தாவென்னுந் தேவதான மென்னுமொரு தலமுண்டு. அதில் தேவியானவள் தன்னையன்புடன் பூசிக்கும் பாண்டியனைக் கொல்லும்பொருட்டு சோழன் விடுத்த வம்பை நீக்கி வெற்றி பெற்றாள். அதனால் தவம்பெற்றாளென்னுந் தையலுடன் பால் வண்ணனே ஆகாய இலிங்கமாக விருந்தான்.

திருபாநதி முதலிய பதின்மூன்று தீர்த்தப் பெருமைகொண்டு விராட்டின் சுழிமுனைத் தானமா யோங்குமிக் கருவைத் தலத்தி லொப்பனையென்னுந் தேவியுடன் பால்வண்ணன் தேயுலிங்கமாக வீற்றிருந்தான். இவ்வாறிருக்குங் கீர்த்தியுடைய சிவபெருமான் புகழை யெடுத்துரைத்துச் சோதியிற் கலந்தான்.

பின்னர் திருமாலு மயனுஞ் சிவபெருமான் கூறியபடி இப் பஞ்ச தலங்களை வழிபட்டுக்கொண்டு தம் தம் இருப்பிடஞ் சென்றார்கள்.

—[: :]—

இருபத்து இரண்டாவது

தாயைக் கொலைபுரிந்த வேதியன்

பாவந்தீர்த்த வரலாறு.

இலங்காபுரியி லிராவணுதியரை வென்று, சீதாபிராட்டியை மீட்டி, இராமபிரான் அயோத்திமா நகரம் வந்து அரசாட்சி செய் யுந்நாளில், அப்பதியி லுற்பவித்தவனும், வேதமுதல் பலகலை, மறைகளையு முணர்ந்தவனுமாகிய, யம்பகனென்னும் பெயருடைய யந்தணனெருவனிருந்தான். அவன் பல தீவினைகள் செய்து, பல சிவனைத் துறந்தவன். அவனுக்குச் சுவிரதை யென்னும் மனைவி யிருந்தனள். அவர்களுக்கு ஒரு புத்திரனவதரித்தான். அப் புத்திரனுக்குக் காலவனென்னும் பெயரிட்டுச், சகல கலைகளிலும் வல்லவனுக்கிப், பிரம்மச்சாரியாகி, ஐயமெடுத்துண்டு வாழ்ந்தான்.

வாழுந்நாளில் யம்பகனுக்கு வயது ஐம்பது நிறைவுபெறத் தன் மகனுன காவலனை நோக்கி, நான் கௌதம முனிவன்பாற் சென்று யாகஞ்செய்து வரும்வரை உன் தாயைக் காத்திருவெனச் சொல்லி கௌதமர்பாற் சென்றுன்,

அதன்பின் தாயான சுவிரதைக்கு அந்தியகாலஞ் சம்ப விக்க இயமதூதர்கள் நெருங்கினுர்கள். அவர்களி லொருவன் இவளுக்கு எவ்வித அங்கங்களும் பங்கமில்லாமலிருக்க இவ ளுயிரை எவ்வாறு கவர்வதெனு வினவ, வந்த தூதர்களிலொரு வன், இவள் மகன் கையினுலேயே இவளுயிர் கவர்ந்து போவோ மென்று கூறி, அவர்கள் தூங்கிக்கொண்டிருந்த மகன் காலவனின் காலி லெறும்புருவாகக் கடிக்க. காலவ னித்திரைவிட்டெழுந்து இரவில் தூதரைக் கண்ணுற்றுன். இவர் நம் மனையிலுள்ள பொருளைத் திருடவந்த கள்வனென்று தடியாலடிக்க, வந்த தூதர்கள் அவன் கண்ணுக்குத் தெரியாமல் மறைய, அவர்களைத் தேடித் தன் விட்டிற்குட் செல்ல, தன் தாயான சிவரதைத் தூங்கிக்கொண்டிருக்குஞ் சப்தம் கேட்கப், படுத்திருப்பவளைத் தாயென்பதை மறந்து கள்வனென்று நினைத்துத் தடியால் கோபத்துடனடித்தான். அதனுல் அவளுயிர் துறந்தாள்.

அடிபட்ட அவளுயிரைத் தூதர்கள் கொண்டுபோனார்கள். இறந்த அவளைத் தாயென்று தெரிந்து அவள் காலடியில் விழ்ந்து ஐயோ, என்னை மாதம் பத்துஞ் சுமந்து பெற்றனையே, அறியாமல் கொன்றேன். தாயைக் கொலை செய்த பாதகனென்று ஊரில் உள்ளோர் இகழ்வாரே, இந்த உயிரை உடம்பில் வைத்திருக்க மாட்டேன். தாயே, நானும் உன்னோடு வருகிறேன். என்று, வருந்திப் பொறி கலங்கப் பித்துப் பிடித்தவனைப்போல நகரை விட்டு வனத்திடைச் சென்றான்.

அங்கே யாகஞ்செய்யப்போயிருக்கும் அம்பகன் யாகத்தை முடித்துக்கொண்டு தன் பதிக்கு வர, மனைவியையும், மகனையுங் காணாமல் திகைத்து, அருகிலுள்ளோரை வினவவும் அவர்கள் உன் மனைவி ஒரு திங்களுக்கு முன்னதாக ஆவிநீத்துக் கிடந்தாள். ஆவி நீத்துக் கிடந்த உன் மனைவியைக் கண்டோம், மகனைக் கண்டி லோமெனக் கேட்ட வம்பகனுந் தேவியை யிழந்தனன். புதல்வன் காலகனையுங் கண்டிலேன். நான் இனிமேல் இப்பூமியில் உயிர் சுமந்து வாழேனென்று புலம்பி யொருவாறு தேறி மகனைக் காண வேண்டுமென்ற ஆசையால் பலவிடங்களுந் தேடி முடிவிலொரு வனத்துக்குட் கண்டான்.

மகனே நானுனக்குரைத்த வார்த்தையை மறந்து இவ் வனத்துக்குளேன் வந்தாய் என்று கூற, மகனுங் கண்ணீர் சிந்த விம்மியழுது சிறிது மனந்தெளிந்து நடந்ததைச் சொல்ல. இப் பாவந்தீர வென்செய்வோமென்று புண்ணியத் தலமாகிய காசி, சிதம்பரம், திருவாலங்காடு முதலிய தலங்களிலும், புண்ணிய நதி களிலு மூழ்கியும் பாதக மொழியாதது கண்டு தன் பதியாகிய அயோத்திமாநகரம் வந்து இராமச்சந்திரனை வணங்கி நிகழ்ந்ததை உரைக்கலுற்றான்.

இராமச்சந்திரன், வேதியனே என் றம்பி இலக்குமணன், இராவணன் மகனான விந்திரசித்தைக் கொன்ற பிரமகத்தித் தோசந் நீக்கிய கருவைமா நகரத்திற்கு நீ, இம்மகனுடன் போய் ஆங்குள்ள நிட்சேப நதியில் மூழ்கிப் பால்வண்ணப் பெருமானைப் பூசிப்பாயானால் உன் மனைவியின் பிரமகத்தித்தோசம் நீங்குமென்று கூறினன்,

வேதியனு மவ்வாறே றன்மகனுடன் கருவைமாநகரடைந்து நிட்சேப நதியில் மூழ்கிப் பால்வண்ணப் பெருமானைப் பூசை செய்யச் சூரியன் முன் பனி நீங்கினதுபோல் தன் மகனுலடியுண்ட மையலுருவம் நீங்கித் தேவ சரீரத்தோடு தன் நாயகன், மகன் முன்னே தோன்றித் தான் கதிபெரும் பொருட்டவரை நோக்கி நீவிர் கருவைப்பதி விட்டு வரும்போது நிட்சேப நதியின் புனல் கொண்டுவந்து அப்புனலை யென்மீது தெளியுங்கள். நான் கதி யடைவேன் என்று சொல்லவும் அவர்களு மவ்வாறே செய்ய மையல் ரூபமாய் வந்த பார்ப்பனி மீது நிட்சேப நதியின் தீர்த்தத் தைத் தெளிக்க மையலுருவம் விட்டு உயர்கதியடைந்தாள்.

அப்பால் அம்பகனும், தன் மகனுன காலகனு மயோத்தி நகரஞ்சென்று இராமச்சந்திரனை வணங்கி நிகழ்ந்ததை யுரைத்து மகிழ்ந்து அநேக காலஞ் சுகித்திருந்து சிவகதியடைந்தான்.

இருபத்து மூன்ருவது

வைசியனை வஞ்சித்த மறையவன்

பாவந்தீர்த்த வரலாறு.

முன்னொரு காலங் காஷ்மீரகண்ட தேசத்தினருகில் மணி மந்திர மென்னு மூரில் வாகுலகனென்னும் வைசியனொருவன் பெருஞ் செல்வந்தனுக வாழ்ந்து வந்தான். அந்நாளில் வேதசர்மா வென்னுமோர் மறையவன் பல துன்பந் தன்னைச்சுற்ற வறுமை, பிணி வாட்டப் பசியினல் வருந்தி மணிமந்திர மென்னு மூரின் வீதியில் விரைவாகச் செல்லும்போது, தன்னெதிரே வருமொரு முதிய மறையவனை நோக்கி வேதசர்மா வென்போன் என்னுடைய பசியை நீக்குந் தருமவா னிங்குள்ளனே? என்று விளம்ப. அம் முதியவனுன மறையவன் கூறலுற்றன்.

இந்நகரில் வாகுலகனென்னும் வைசியனொருவனுள்ளான். அவன் தன்னுயிர்போல் மன்னுயிரும் பேணுந் தன்மையுடையவன் தரும சிந்தையன். அவன் மனையிற் நீ சென்று லுன்பசி முழுதுந் நீங்குமென்று கூற, வேதசர்மாவும் விரைந்து வைசியன் வீட்டிற்குச் சென்று ஐயா! இந்த உலகமெல்லாந் நான் சென்று, சென்றுழன்று துன்பமுறப் பசியினால் வாடி யுன்னிடம் வந்தேன்.

என்னுடைய பசியை மாற்றி யென்னைக் காப்பாயென்று சொல்ல, வைசியனுங் கருணை கூர்ந்து புன்னகை செய்து உனக்கு வேண்டுவது கொடுத்து உன்பாலுள்ள துன்பத்தை மாற்றுவேன் என்று கூறி வீட்டிற்குள் அழைத்துச்சென்று கை, கால் சுத்தம் செய்யச் சொல்லி வீட்டிலுள்ளோரை இலை கொண்டுவந்து அவ் வேதியனுக் கமுது படைக்குமாறு கூற,

அவ்வாறே வைசியன் மகள் இலை கொண்டுவந்து வமுது படைக்க, வேதியனானவன் அம்மாதைக் கண்ணுற்று, ஆகா! தாமரையில் வாழு மிலக்குமியோ? அரம்பையோ? ரதியோ? இந்திராணியோ? தெய்வலோகத்தில் வாழு மடந்தையோ? வென்று வெண்ணலுற்றான். அவ் வைசியன் மடந்தையைக் கண்டவுடன் பசிப்பிணியை விட்டுக் காமப்பசி யதிகரிக்க மனம் வருந்தி மையலி லுழன்று தரும வைசியனை நோக்கி என்னுடைய துன்பந் தவிர்ப்பேனென்று கூறினாய். இப்போது நான் மன்மதங் கணையா லென்னுள்ள மிடரடைகின்றது.

ஆதலா லுன்மகளை யிப்போதே யெனக்குக் கொடுவென்று வேதசர்மா சொல்லலுற்றான். வஞ்சக மனத்துடைய வேத சர்மாவே! நீ யிப்போ துரைத்த வார்த்தை யறிவுடையவன் வார்த்தையல்ல, கொடியவனே! என் மனையை விட் டோடிப் போவென்று விழி சிவந்து கோபத்துடங் கூற, மறையவ னுன் மகளை நான் கேட்பதற்கு நீ, சம்மதியாது கொடிய வார்த்தை சொல்லலுற்றாய், இன்னுமொன்று நானுனக்குரைப்பேன்.

மாதவருக்காவது, மறையவருக்காவது, யாசிக்கும் வித்துவான்களுக்காவது வேண்டியது கொடுப்பேனென்று சொல்லிப் பின்னர் உலோபகுணத்தால் கொடுக்கமுடியாதென்று சொன்னவன் பாதகமான பிரமகத்தி யேற்பட்டு தீவாய்நாகி லடைவாயெனக் கோபத்துட னுரைக்கவும் வைசிய னிதற் கென்செய்வோமென்று வருத்தமுற்றிருந்தான்.

அச்சமயங் கண்ணுவ முனிவனென்பாஞ் சிவபெருமா னருளாலந்த வைசியன் மனைக்கு வந்தான். கண்ணுவ முனிவன் வரவு கண்டு எழுந்து வணங்கி முனிவர் பெருமானே! அடியேனில்லத்திற்குத் தாங்களெழுந்தருளி வந்தது யடியேன் செய்த தவப்பயனுகுமென்று ஆசனத்தி லிருக்கச்செய்து சொல்வானுயினன்.

முனிவர் பெருமானிடத்தில் எதிரே னிற்கு மறையவனைக் காட்டித்தா னவனுக்குச் சொன்ன வார்த்தையுங், கபடமாக வேதியன் சொன்ன வார்த்தையுஞ் சொல்லி, இதற்கு நான் நல்வழி யுணரும் வண்ணம் நீ சொல்லவேண்டுமென்று வினவ, முனிவன் அந்தணர் சிந்தையின்படி அரசர்கள் செய்த மனம் அளவில்லை. வேண்டுவது கொடுப்பேனென்று நீ உறுதியாய்ச்சொன்னதால், இந்த வேதியனுக் குன் மகளை மணஞ்செய்து கொடுவென்று சொல்லி எதிரே நிற்கும் மறையவனை நோக்கிக் கண்ணுவ முனிவன் கூறுகிருன். உன்னுடைய பசிக்காகாரம் வேண்டிக் குற்றமறச் சொன்ன வார்த்தை பின்னுல் குற்றமுறச் சின்னவன் போலச் சொன்னுய். இது கொடிய பாவமாகும். அதிலும் வஞ்சமான வார்த்தை சொன்னுய். அது பஞ்சமாபாதகஞ் செய்ததற் கொப்பாகும். இந்தப்பாவமுனையடையாமலிருக்கக் காசி யாத்திரை செய்வாயென்று கூறி முனிவனும் புறப்பட்டான்.

அப்பால் வைசியனுந் தன்னின பந்துக்களை வரவழைத்து அவர்களிடம் வேதியன் வஞ்சனையால் சொன்ன வார்த்தைகளையும் உலக நீதியின்படிக் கண்ணுவமுனிவஞ் சொன்ன வார்த்தைகளையுங் கூறி ஆலோசனை செய்ய, இன பந்துக்களுமனதில் சந்

தோஷங்கொண்டு வேதியனுக்கு உன் மகளைக் கொடுப்பது நன்றென்றுசொல்ல. வைசியனும் வேதியனுக்குத் தன் மகளைத் திருமணஞ் செய்து கொடுத்தான்.

வேதியனுந் தனக்குக் கிடையாத பெருஞ் செல்வங் கிடைத்ததென்று வைசியன் மகளைக் கலியாணஞ்செய்து மனங் களிப்புற்று மூன்றுநாள் தன் மனைவியோடு இருக்கத் தான் மாறு பட்டுச் சொன்ன வார்த்தையையுந் தானடைந்த பாவத்தையும் நினைத்து மனதில் சஞ்சலமுற்றுக் கண்ணுவமுனிவங் கூறியபடி பாவந்தீர்ந்து நல்வழிப்படக் காசி யாத்திரை சென்று விசுவ நாதனைத் தெரிசிக்க வேண்டுமென்று கூறியதைத் தன் மாமனாகிய வைசியனிடத்துக் கூறினான்.

அவ்வார்த்தையைக் கேட்ட வைசியனும் மகளும் வருத்த மும் சந்தோஷமுங்கொண்டு விடை கொடுக்கப்பெற்று வேதிய னும் காசி நோக்கிச் சென்றான். அநேக தூரஞ் சென்ற பின் காட்டின் வெயிலினால் வாடி ஆங்கோர் மர நிழலிலமர்ந்திருக்கும் போது திரிகாலமுணர்ந்த நாரதமுனிவர் அவ்விடம் வர. முனிவ னைப் போற்றி மறையவன் நடந்த தன்மையை முற்றும் உறைத்தான்,

நாரதமுனிவன் உன் பாவந் தீரவேண்டின் முன்னால் இந்திரன், சூரியன், இலக்குவன் முதலியவர்களுஞ் செய்த பாவந் தீரும் பொருட்டுத் தெக்கண கயிலாயமென்று சொல்லப்படுங் கருவைமா நகரில் நிட்சேபநதியில் மூழ்கித் திருக்களா நிழலமர்ந்த பால்வண்ணநாதரைப் பூசித்துப் பாவந்தீர்த்து நல்வழிப் பட்ட தாக அவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். அதன்படி நீயும் கருவையம்பதியடைந்து பால்வண்ணனைப் பூசித்தா லுனது பாவந் தீருமென்று கூறிச் சென்றனன்.

வேதியனும் நாரதன் கூறியபடி கருவைமா நகரமடைந்து நிட்சேபநதியில் மூழ்கி மூன்று காலமும் பூசிக்க பால்வண்ணப் பெருமான் சோதியினின்றுந் தோன்றி வேதியனே! உன் பாவம் யாவும் தீர்த்தோம். நின் பதி சென்று வாழ்வாயாகவென்று கூறிச் சோதியிற் கலந்தனன்.

அப்பால் வேதியன் பெருமானை வணங்கிக் கருவைமா நகரம் நீங்கப்பெற்றுத் தன் மனைவி வாழும் மணிமந்திரமென்னும் ஊரடைந்து தன் மனைவியுடன் வாழுங் நாளில் அறிவிற் சிறந்த மக்களைப்பெற்றுச் சகல ஐசுவரியமுமடைந்து உலகத்தில் யாரும் போற்றும்படி வாழ்ந்து வந்தனன்.

இருபத்து நான்காவது

கற்பகதரு களாவன வரலாறு.

முற்காலத்தில் தக்கனுடைய மகள் சாபத்தால் கற்பகா தரு கருவைப்பதியில் சிவலிங்கத்தின் ஈசான திக்கில் களாமரமாக இருந்தனள். இக் களாவனமானது, உலகிலுள்ள தருமங்களெல் லாம் ஒரு கூட்டமாய்த் திரண்டு அவதாரஞ்செய்ததுபோல், மலர், இலை, காய், பழமாக அழகு பொருந்திக் காட்சியளிக்க, அக் களாவனத்தில் எடுக்கப்படும் மலர் தேன் அபேடகமாகவும், இலைகள் அர்ச்சிக்கவுங், கனிகள் நிவேதனமாகவும், அதன் நிழல் கொடையாகவும், மலர்களின் தேனையுண்டு ரீங்காரஞ் செய்யும் வண்டுகளின் குரல் இன்னிசையாகவும், அதன் கொப்புகள் அசைவது நாட்டியக் கலைகளாகவும் அளப்பருங் காலமுங் களா வனத்திலுள்ள மற்றும் ஏனைய பொருள்களுஞ் சிவபெருமான் உபயோகத்திற்கு அமைந்தாற்போலிருந்தது.

சிவபெருமான் அக் களாமரத்தின் முன்னேன்றி களாவே, நீ இக்கருவைமா நகரத்தில் என் சிவலிங்கப் பக்கத்திலிருப்பதற்கு நீ செய்த ஊழ்வினையின் பயனால் இப் பதியில் களாவனங்களாக அவதாரஞ்செய்து உலகிலுள்ளோர் யாவருங் கண்டுகளிக்கும்படி நம்மை வேண்டிக்கொண்டதால் நம் பக்கத்தில் களாவனமாகக்

காட்சியளித்துக்கொண்டிருக்கிறாய். உன் வாழ்வினையின் பயனை உனக்கு நன்கு விளங்கும்படிச் சொல்வோமென்று பால்வண்ணப் பெருமான் கூறலுற்றனன்.

தேவர்களனைவருளில் பலகாலம் வாழ்வு பெற வேண்டு மென்று திருப்பாற்கடல் கடையப் பாற்கடலில் அமுதத்துளி வெளியிற் சிதற அது உன் மேனியிற் பட்டதால் கூர்மையுடங் கூரிய முள்ளுடன் இலந்தை மரமாக ஆயினை. அதன்பின் நீ, கற்பகதருவாக நம் பக்கத்திலிருக்க வேண்டினை. அவ்வாறு நீ இருக்க, பிருங்கிமுனிவர் நம் சக்தியாகிய அன்னையைப் பூசிக்காமல் நம்மைப் பூசிக்கும் பிருங்கிமுனிவரை அன்னையானவள் சக்தி இல்லாதவராகச் செய்யப் பிருங்கிமுனிவர் நம்மையும் அன்னையையும் வழிபாடு செய்து சக்தியைப் பெறும்படி கொடுத்து அவனுக்குத் தெரிசனமுங் கொடுத்தோம்.

அது தெரிந்த நாரதன் இந்திரனைத் தெரிசிக்க, இந்திரன் சிவபெருமானைக்கண்டு அநேக பூக்களால் தெரிசிக்க. அப்போது கற்பகதரு நமக்கு நிழல் கொடுத்து உதவி செய்தது. கற்பகத் தருவும் வேண்டும் வரம் பெற்று, இந்திரனுடன் போகுமாறு அருள்புரிந்தான். சுவர்க்கத்தில் நீ விரும்பியபடி இந்திரன் பக்கத்திலிருக்கச் செய்தோம். அக்காலத்தில் நீ, அமரர்கோன் வாழ்வு அநுத்தியம் நிட்சியமில்லையென்று கூறியபடியால் இத்தலம் யோகம், சரியை, கிரியை முதலிய எல்லா நலமுந்த நம். தன்னுசை தீர விண்ணுலகு சென்று கற்பகத்தருவாக விருக்குங்காலை தக்கனின் மகள் சாபத்தால்,

நீ, இக் கருவைத்தலத்தில் சிவலிங்கத்தின் ஈசான திக்கில் முன்மரமான களாமரமாகி இருக்கின்றாயென்று கூறிப் பின்னும் உனக்கு வேண்டும் வரங் கேளென்று அருள்புரிந்து நிற்கும் பெருமானிடத்திற் களாவானது அடிபணிந்து பலவாறு தோத்திரஞ்செய்து பெருமானே! நான் உன்னடியினைப் பிரியாமலும் இத் தலத்திற்குக் களாவனமென்றும் உமக்குக் களாநாதனென்றுந் திருநாமம் விளங்குமாறருள்புரிய வேண்டுமென்று வேண்டி நிற்க,

சிவபெருமானு மவ்வாறே கொடுத்தோமென்றும் பின்னுஞ் சொல்லுகின்றார். நின் களாமரத்திற்குத் தண்ணீர் விடுவது எமக்கு அபிடேகஞ் செய்ததுபோலும், உனக்குச் செய்த பூசை எமக்கு நிவேதனமாகவும், நம் திருநாமமான களாநாதனென ஒருதரஞ் சொல்லுவோர் நம் அஞ்செழுத்தைப் பதினாயிரம் உருச் செபித்தாகுமென்ற வரத்தையுங் கொடுத்துச் சிவபெருமான் தன் சோதியிற் கலந்தனன்.

அதன்பின் களாவனமானது கயிலை சென்று பலகாலங் கற்பகத்தருவாகவிருந்து பின் சிவபெருமான் திருவருள்படிக் கருவையம்பதி யடைந்து பால்வண்ணப்பெருமா னமர்ந்திருக்கும் ஈசான திக்கிற் களாவனமாக வின்னுங் காட்சியளித்துக்கொண் டிருக்கிறது.

இருபத்தைந்தாவது
நிட்சேபநதி விசேஷ வரலாறு.

முன்காலத்தில் சிவபெருமானின் சடைபாபாரத்தில் தங்கி யிருக்குங் கெங்கையானவள் தன்னிடம் மூழ்குவோர் பாவமெல் லாந் தன்னைச்சேர அப்பாவந்தீர்க்கும் வல்லமையைச் சிவபெருமான் கொடுத்தாலொழிய இப்பூவுலகத்திற்கு வரக்கூடாதென்று நினைத்து யாவருங் காணமுடியாத ஒரு மலைக் குகைக்குள் மறைந் திருந்தனள்.

மேட சங்கராந்தியென விளங்குஞ் சித்திரை மாதப்பிறப் பாகிய புண்ணிய தினத்தில் கயிலையில் பிரமன், ரிஷிகள், தேவர்கள் மற்றுமுள்ளோர்களுங் கெங்கையில் நீராடும் பொருட்டுப் பூவுல கில் வந்து கெங்கையைக் காணுமல் திகைப்புற்றுக் கெங்கையை நோக்கித் தேடுவாராயினர்.

ஏனைய இடங்களெல்லாந் தேடிக் கடைசியாக மலையின் குகைக்குள் மறைந்திருந்த கெங்கையை நோக்கித் தேவியே! நீ, இங்கொழிந்திருப்பதின் காரணங் கேட்க, கெங்காதேவியானவள் என்னிடம் மூழ்குவோர் பாவம் யென்றுமொழிக்கும் வல்லமையை இறைவன் எனக்குக் கொடுத்தாலொழிய யான் பூவுலகிற்கு வர முடியாதென்று கூற அம்மொழியைப் பிரமன், இந்திரன், தேவர்களோடு வந்திருந்த இறைவனுங் கேட்கப்பெற்றான்.

அச் சொல்லைக்கேட்ட சிவபெருமான் கெங்கை முன் தோன்றிக் கெங்கையே! நீ, திரிகூட மென்னு மலையிற் றவஞ் செய்து திருக்களாவனமடைந்து பால்வண்ணப்பெருமானைப் பூசிப்பாயானால் நீ, விரும்பிய வரத்தைக் கொடுப்போமென்று வினவ. கெங்கையானவள் பெருமானே! திரிகூட மலைக்கு என்னால் செல்லமுடியாதே. அங்குச் செல்லும் முறையை எனக்கருள்புரிவீரென்று கூறலுற்றாள்.

சிவபெருமான் குறுமுனிவனைக் கூப்பிட்டு உன் கமண்டலத்தில் இக் கெங்கையைக் கொண்டுபோய்த் திரிகூட மலையில் வைப்பா யென்று கூற, குறுமுனிவனு மவ்வாறே கெங்கையைத் திரிகூட மலையில் சேர்த்துவிட்டுச் சென்றனன்.

கெங்காதேவி திரிகூட மலையில் இறைவனை நோக்கிக் கடுந் தவம் புரிந்தாள். சிவபெருமான் தவத்திற் கிரங்கிக் கெங்கை முன்றோன்றிக் கெங்கையே! உன் தவத்திற் குகந்தோம், நீ, கன்னி ரூபங்கொண்டு திருக்கருவையம்பதிச் சென்று திருக்களாப் பதியில் நம்மைப் பூசிப்பாயாக. புனல் வடிவமான யுன்னை நான் இக் கற்பாறையுள் உன் கரகத்துள் வைத்துக் காப்பாற்றுவோமென்று சொல்லிச் சோதியிற் கலந்தான்.

அப்பாற் கெங்கையுங் கன்னியுருக் கொண்டு திருக்களாப் பதியடைந்து பால்வண்ணப்பெருமானைப் பலகாலம் பூசிக்க இறைவன் சோதியினின்றுந் தோன்றிக் கெங்கையே! வேண்டும்

வரம் பெற்றுக்கொள் ளென்று வினவ. கெங்காதேவியும் இரு கரங்களுஞ் சிரசின்மேல் தூக்கிப் பெருமானே அடியாளிடம் பூமியில் படிபவர் பாவமெல்லாம் நீக்கும் வலிமை தர வேண்டு மென, அவ்வாறே கொடுத்தோமென்று பின்னருஞ் சொல்ல லுற்றார்.

திரிகூட மலையில் பருவத முனிவன் நம்மை நோக்கித் தவஞ் செய்து நமது சொல்லால் உன்னுடைய கரகத்தை எடுத்துப் பூவுலகில் எந்த இடத்தில் விடுவதென்று எண்ணியிருக்கிறான். அம்முனிவன் உன்னை வேரிடத்தில் விடுவதன்முன் நீ, விரைவிற் சென்று சித்திரை விசுவாகிய புண்ணிய தினத்தில் நீ, பிரவாகமாய் எமது சிவலிங்கத்தை வலஞ்செய்து வருக. உன்னைத் தெரிசிப் போர் கொடிய பாவங்களும் நீங்கி முத்தியைப் பெறுவார். உனக்குத் தெக்கண கெங்கை என்னும் பெயருங் கொடுத்தோம்.

உன்னைத் திரிகூட மலையில் சேமித்து இக் களாவனப் பதிக்கு நீ வந்ததால் நிட்சேபநதி யென்னும் பெயர் வழங்கு மாறு வரங்கொடுத்துச் சிவலிங்கத்துட் கறந்தனன். அப்பால் இறைவன் திருவாய் மொழிந்தருளியபடிக் கெங்கையும் திரிகூட மலைக்குச் சென்று அங்குப் பருவத முனிவன் வைத்திருக்குங் கமண்டலத்திற்குள் பிரவேசிக்க அதுபோது கடகடவென்ற வொலியும் ஓசையுடனுஞ் சற்றுந் தாங்கமுடியாத கனமுந் தோன்றப் பருவத முனிவன் அவ்வொலியைக் கேட்டுப் பயந்து அம்மலையில் ஓரிடத்தில் வைத்துச் சென்றனன்.

கெங்கையு மெழுந்து கோரைநதி, சாம்பவநதி, காகநதி, கத்தூரி நதி, தேவி நதி, அர்ச்சுன் நதி, தேரை நதி யென்னு மேழு நதியுடங் கலந்து மானதம் முதலிய பல தீர்த்தங்களுடன் கருவை யம்பதியில் களாவனத்திற் சிவலிங்கத்தை வலஞ்செய்து யாவருங் காணக் கெங்கை வந்தாள்.

புண்ணிய தினமாகிய சித்திரை விசுவன்று பக்தகோடிகள் நிட்சேப நதியில் மூழ்கிக் களாவனப் பதியில் இடபாக ரூபமாய் விற்றிருந் தருள்புரியும் ஒப்பனைசமேத பால்வண்ணப் பெருமானைத் தெரிசனம் பெற்றவுடன் சகல பாவங்களுந் நீங்கி, இம்மையில் நல்வாழ்வும், மறுமையில் சிவபெருமானின் பாதநீழலில் அடைவார்கள்.

இருபத்தாருவது

பார்ப்பனி பாவந்தீர்த்த வரலாறு.

முன்னொரு காலத்தில், சதாவும் வேதகீதம் ஒலித்துக் கொண்டிருக்கவும், மாதம் மும்மாரி பொழியவுஞ், சோலை வனங்களில் குயில், மயிலினங்கள் கூவி அழகு செய்யவுந், தருமங்களெல்லாந் தலைசிறந்து விளங்குகின்ற, எந்நாட்டினுந் நந்நாடெனப் புகழ்கின்ற, குண்டின புரமென்னு மூரில், வேதியர்குலத்தி லுதித்தோனுஞ், சவுண்டிகேயனென்னும் பெயருடையோ னொருவனிருந்தான். அவன் களாங்கினி யெனுமோர் மாதை இல்வாழ்க்கைத் துணைவியாக்கி, இல்லறமாகிய நல்லறத்தை, அநேக காலமாக நடத்தி வந்தான்.

நடத்திவருங்காலை, சவுண்டிகேயன் மனைவியான களாங்கினி கற்புநெறி தவ்றி, அவ்வூர் கடகனென்னுஞ் சூத்திரனை சேர்ந்து, சுகித்திருந்தாள். இம் மாறுபட்ட செயலைச் சௌண்டிகேயனென்னும் வேதியன் தன் மனைவி ஒழுங்குதவறி நடக்குஞ் செயலைக் குறிப்பினுற்கண்டு தன் மனையை விட்டுக் களாங்கினியை நீக்கலுற்ருன்.

பின் வேதியர் குலத்திலுதித்த களாங்கினியுஞ் சூத்திர குலத்திலுதித்த கடகனும் பயம் நீங்கிப் பல தேசங்கள் சென்று மன்மதனும் ரதியும் போல் காமத்தில் மூழ்கிவருந் நாளில் ஆன்றோர்கள் கூறியபடி 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையு'மென்ற செய்யுள் வாக்குக்கிணங்க அவர்களிருவருக்குந் தீராத பௌந்தர நோயேற்பட்டு நோயின் கொடுமை தாங்கமாட்டாமல் பெரிதும் வருந்திக் காசி க்ஷேத்திர முதற் பலவூர் திரிந்து வரும் வழியில் கருவைமா நகரத்தில் நிட்சேப நதிப்புனலி லிரங்கினார்கள். அந் நதிப் பிரவாகத்தால் களாங்கினி யடித்து செல்லப்பட்டாள். அதில் மூழ்கி இறந்தாள்.

நிட்சேப நதியிற் களாங்கினி உயிர் துறந்ததால் கயிலையி னின்றும் வந்த விமானத்தில் தேவ சரீரம் பெற்று உம்பர் நாடு அடைந்தாள். அது கண்ட கடகனும் இந் நதிப் புனல்பட்ட தன்மையால் தேவ உருப்பெற்றாளென்று தெரிந்து தானும் அந் நதியில் மூழ்கிக் களாநிழலமர்ந்து வாழும் ஒப்பனை சமேதப் பால் வண்ணப்பெருமானை அநேக காலம் பூசனை புரிந்து கருவைப்பதி யிலிருக்கவும் அவனுக்கு ஏற்பட்ட பௌந்தர நோயும் பாவமுந் தீரப் பெற்று நற்கதி சேர்ந்தானென்றும் பின் ஜென்மத்தில் வேத சாஸ்திரந் தெரிந்த வேதியர் குலத்தில் அவதரித்துப் பால்வண்ணனைப் பூசிக்க உயர்கதியடைந்தானென்றும் சூதமுனிவர் சொல்லலுற்றார்.

இருபத்தேழாவது

எமவாதை யொழித்த வரலாறு.

தெக்கண கயிலாயமென்னுங் கருவையம்பதியில் பால் வண்ணப்பெருமான் தன் திருவுள்ளத்திலொன்று நினைக்கலுற்றான். யாவரும் அறியாத வேதம், விந்து, அமுது, பிரணவ மென்னும் நான்கினையும் அழைத்து இக் கருவையம்பதியில் ஐந்து குரோச தூரமுள்ளவரையில் ஜீவித்திருக்கும் ஜீவராசிகள் யாவற்றிற்கும் நோயும் எமவாதையும் அணுகாமல் நான்கு திக்குகளிலும் நீங்கள் மலையுருவாகவிருந்து காவல்புரிய வேண்டுமென்று கட்டளை யிட்டான்.

சிவபெருமான் திருவாக்கின்படி அமுதங் கீழ்திசையிலும், பிரணவந் தென்றிசையிலும், விந்து மேற்றிசையிலும், வேதம் வடக்குத் திசையிலும் மலையுருவாகக் காட்சியளித்து நின்றது. அதன்பின் இறைவன் தன் மக்களான ஐந்துமுகத்தோன், ஆறு முகத்தோன், சாத்தன், வயிரவனென்னும் நால்வர்களை நினைக்க, அந் நால்வர்களும் பெருமான் முன் தொழுது நிற்க, அவர்களை நோக்கி நீங்கள் நாம் வீற்றிருக்கும் இக் கருவையம்பதியின் நான்கு திசையினிடத்தும் ஐந்து குரோச தூரமுள்ளவரை ஜீவித்திருக்குஞ் சகல ஜீவாத்மாக்களுக்கும் நோயும் எமவாதையு மடையாமல் நான்கு மலைகளிலிருந்து காவல் புரிவீரென்று கட்டளையிட்டான்.

சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளியபடி சாத்தனும் பூரணி, புட்கலை யென்னுந் தேவிமார்களோடும் வெள்ளையானை மேலேறிக் கீழ்திசையிலுள்ள அமுத மலையின் சிகரத்தில் கோவில் கொண்டு காவல்புரிந்து வந்தான். ஐந்துமுகவன் கயமுக அவுணரைப் போரில் வென்று தன் மூஷிக வாகனமேறித் தென் திக்கிலுள்ள பிரணவ மலையின் சிகரத்திலிருந்து காவல் புரிந்து வந்தான். ஆறுமுகவன் சூராதி யவுணரைக் கொன்று தேவர்

சிறையை மீட்டி, மயில் வாகனமேறி வடதிசையிலிருக்கும் வேத மலையின் சிகரத்தில் காவல் புரிந்துவந்தான். அப்பால் வயிரவனுஞ் சூலமுந் தண்டுங் கையிலேந்தித் தன் பரிவாரங்களுடன் கருங் குதிரை வாகனமேறி மேற்குத் திக்கிலுள்ள விந்து மலையின் சிகரத்தில் காவல் புரிந்து வந்தான்.

இவ்வாறு நால்வரும் முறையே வேதம், விந்து, அமுதம், பிரணவ மென்னும் நான்கு மலைகளின் சிகரத்திலிருந்து காவல் புரிந்து வருவதால் எமவாதையுங் கொடிய நோயும் உயிர்களுக் கணுகாதபடி சகல ஜீவராசிகளுஞ் சுகித்து இன்றும் வாழ்ந்து வருகின்றன.

—✳—

இருபத்தெட்டாவது
பசாசு வாதை தீர்த்த வரலாறு.

———

பண்டைய காலத்தில் சிவபெருமானை மதியாமல் தக்கன் செய்த யாகத்தில் சாபம் பெற்ற தக்கனனவன் பூவுலகில் பேயுருவாகி பூத பிரேத பசாசு கணங்களுக்குத் தலைவனாகி, கருவைமா நகரத்தில் அரசனுக்கும் மக்களுக்குந் துன்பத்தை விளைவிக்க, மக்கள் துன்பந் தாங்காமல் அதுலாம்பிகையின் சந்நிதியடைந்து தன் குறைகளை முறையிட்டுப் பலகாலம் போற்றிப் பணிந்து நின்றார்கள்.

அதுலாம்பிகைத் தன் சுய வடிவத்துடன் தோன்ற நகர மக்கள் கண்டு களிப்புற்று அதுலாம்பிகையை இரு கரங்களையுஞ் சிரசின்மேல் குவித்துப் பலவாறுக தோத்திரஞ் செய்தனர். அம்பிகையானவள் மக்களே யாவரும் பயப்படாதிர்கள். அந்தத் தக்கனை பேயால் துன்பம் நீங்கி உம்மைக் காப்போமென்று சொல்லிச் சோதியிற் கலந்தனள். அதன்பின் மக்களும் மகிழ்ந்து தன்லிருப்பிடஞ் சென்றார்கள்.

அம்பிகையானவள் பக்தியிற் சிறந்த தொண்டனுன வயிர வனை யழைத்து மைந்தா இப்பதியிலுள்ளோர் யாவரும் பேயுருவம் பெற்ற தக்கனுலும் அவன் சைன்னியத்தாலும் பயபேதிகொண்டு அவதியுறுகிருர்கள். ஆதலால் நீ, சென்று தக்கனுன பேயையும் மற்று மவன் சைன்னியங்களையும் பலமிக்க சங்கிலியால் கட்டி நம் சந்நிதிக்குக் கொண்டுவாயென. வயிரவனும் புறப்பட்டுத் தக்கனுன பேயையும் அவன் கணபூதங்களையும் சங்கிலித்தொட ரால் கட்டி அதுலாம்பிகையின் சந்நிதியின் முன் கொண்டுவந்து நிறுத்தினுன்.

சந்நிதி முன் தாழ்ந்து வணங்கி நிற்குந் தக்கனைப் பார்த்து அதுலாம்பிகையானவள் கோபத்துடன் தக்கனே! நீ, தீவினை செய்து எம்பெருமான் கோபத்தால் யாவரு மிகிழத்தக்க பேயுருப் பெற்றும் இன்னு முனக்கு நல்லுணர்வு வந்ததில்லை, இனியாவது இந்நகர மக்களுக்கு ஒரு தீங்குஞ் செய்யாமல் இப் பேயுருவம் நீங்கும்வரைச் சங்கிலியாற் கட்டுண்டு நம் சந்நிதியிலிரு வென்று கூறினுள். அதன்படி சாபந் நீங்கும்வரைச் சங்கிலியால் கட்டுண்டு அதுலாம்பிகையின் சந்நிதிமுன் னிருந்தான். அன்றுமுத லின்று வரை நகர மக்கள் யாவரும் பேயினு லுண்டான துன்பந் நீங்கிச் சுபிட்சமாய் வாழ்ந்திருந்தார்கள்,

அதன்பின் அதுலாம்பிகை, வயிரவனை நோக்கி மைந்த! பேயுருவங்கொண்ட தக்கனையு மவன் கணத்தவரையும் வேக முடன் சென்று கட்டிக்கொண்டு வந்ததால் உனக்கு சண்ட வயிரவ னென்னும் பெயர் கொடுத்தோமென்று சொல்லி அதுலாம்பிகை தன் சோதியிற் கலந்தனள்.

இருபத்தொன்பதாவது

வைசியன் திரவியம் பெற்ற வரலாறு.

கடற்கரை சூழ்ந்து அலைகள் ஒலித்துக்கொண்டிருக்கவும் செடி கொடிகளிலுள்ள புஷ்பங்களில் தேனையுண்டு வண்டுகள் ரீங்காரஞ் செய்துகொண்டிருக்கவும், தமிழ் காத்த பாண்டி நாட்டில் அங்கு தேசமென்னு மூரில் வைசிய குலததி லுதித்தவரும் இல்லக னென்னும் பெயருடையோ ஒருவரிருந்தார். அவன் முன் செய்த தவத்தினுல் போதுமான அளவு பலகோடி திரவியங் களைப் பெற்று நல்ல கௌரவத்துடன் வாழ்ந்து வந்தான்.

அவனிடம் தருமஞ் சிறிதுமில்லாத மனத்தனுகி தன் நிதியைக் கூடிய வட்டிக்குக் கொடுத்து வட்டியில் வரும் பொருளை மட்டும் தன் குடும்ப சமரட்சணைக்கு ஈடுபடுத்தித் தன் மனைவியோடு இல்லறம் நடத்தி வருங்காலை கங்காநதி தீர்த்தங்கொண்டு தன் மனைவியுடன் காபிலன் என்னும் ஒரு அந்தணன் இக்கருவைப் பதியைத் தரிசிக்க வேண்டுமென்று பலவூர்களின் வழியாக யாசகஞ் செய்து உணவருந்திக்கொண்டு அங்குதேசத்திலிருக்கும் கோடீஸ்வரனுன இல்லகனிடஞ்சென்று, பிரபு! இன்று இந்துவும் இரவியுங் கூடிய நாளாகிய அமாவாசைப் புண்ணிய தினத்தில் யாம் உணவு செய்யவேண்டி சிறிது பொருள் கொடுத்துதவ வேண்டுமென்று கூறுவானுன்.

வைசியனுனவன் வேதியனே! நீயும் உன் மனைவியும் எங்கள் மனையில் அமுது செய்துவித்து மகிழ்ந்து போவீரென் றுரைக்க, வேதியன், ஐயா! நீர் வைசியன், நாங்கள் பிராமணர்கள். உன் வீட்டில் உணவருந்துவது நீதியோ? என்று சொல்ல, வைசியன், என் மனையில் அருந்த மனமில்லையேல் அரிசி முதலிய பண்டங்கள் கடையிலிருக்கிறது. கையில் பொருளிருந்தால் வாங்கிச் சமைத்து உண்பாய் என்று ஈகையற்ற மனத்துடன் கூற, அந்தணன்

கேட்டு, மனம் வருந்தி உன் பொருள்கள் யாவும் சிறிதும் தருமத்திற்குப் பயன்படாமல் அதர்மமாகப் போகக் கடவதென்று சபித்து வருத்தமுற்றுச் சென்றனன்.

நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்கும் பேய்க்காம் பரத்தையர்க்காம் — வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காம்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண்.

என்னும் ஆன்றோர் வாக்கின்படி.

அன்றிரவில் வைசியனுன இல்லகன் மனையில் கள்வர்கள் புகுந்து இல்லகனை மூச்சுத் திணறவடித்து ஆங்கோர் தூணில் கட்டிவிட்டு வீட்டிலுள்ள திரவியங்கள் யாவையும் எடுத்துக் கொண்டு ஓடலுற்றனர். வைசியன் மனங்கொதித்து ஐயோ! வந்த வேதியனுக்கு ஒரு பொருளேனுந் தருமஞ் செய்யாததால் அன்றே? நமக்கு இப்பொருள் போயிற்று. இனி என்செய்வோமென்று தாம் செய்த தீவினையை யெண்ணி மேலும், பால்வண்ணப்பெருமானை சேவிக்கச் செல்லும் வேதியன் பசியுடன் செல்ல நாம் பார்த்திருந்த வினையல்லவோ? திருடன் கவர்ந்துபோக நேர்ந்தது என எண்ணி பராசரமுனிவரிடஞ் சென்று அவரடியில் விழ்ந்து நடந்தவாறு முற்றுஞ் சொல்லி என் வினை தீரும் வண்ணம் ஒரு வழி சொல்லவேண்டுமென்று வைசியனுங் கேட்கலுற்றான்.

முனிவரும் கருணைகூர்ந்து வைசியனே! பாண்டியநாட்டுப் பதிகளில் மேன்மை பெற்ற கருவைப் பதியிலிருக்குங் காபிலனுன வேதியனைக் கண்டு நீ, செய்த பிழையை மன்னிக்கும்படிச் சொல்லி அவன் தயவுபெற்று, நிட்சேபநதிப் புனலில் மூழ்கித் திருக்களா நிழலமர்ந்திருக்கும் வேகங்கெடுத்தாண்ட விமலனை ஓராண்டு பூசிப்பாயாயின் நின் வினை தீருமென் றுரைத்தான்.

அவ்வாறே வைசியனும் திருக்கருவைப் பதியடைந்து அங்குள்ள காபிலன் என்னும் வேதியனைக் கண்டு தான் செய்த பிழையை மன்னித்தருள வேண்டுமென்று அவனைப் பணிந்து பின் நிட்சேப நதியில் மூழ்கிப் பால்வண்ணப் பெருமானை ஓராண்டு காலமாகப் பூசனை செய்துவரும் நாளில் அடியாருக் கெளியவனுனவன் அந்த வைசியன் முன் தோன்றி நீ, செய்த பூசைக்கு மகிழ்ந்தோம். வேண்டிய வரங்கேளென,

ஐயனே! அடியேன் செய்த தீவினையை நீக்கி அருள் புரியுமாறு வணங்கி நின்றான். வணங்கி நிற்கும் வைசியனைப் பார்த்து, உன் பாவந் தீரவேண்டி நம் களாவனப் பதிக்குக் கீழ்பாலுள்ள அமுதாசலத்தில் சூரியலிங்கத்தை அதன் கீழ்பாலுள்ள இருபாநதியுடன் சேரும் சூரிய தீர்த்தத்தில் மூழ்கிப் பூசித்து அதன் வடபாலில் அந்நதியின் மடுவில் புதையுண்டிருக்கும் நிதியை எடுத்துக்கொள்வாயென்று காட்ட.

வைசியன், இந்த நதியில் நான் எப்படி இறங்கி மடுவிலுள்ள நிதிப் பொருளை எடுக்க முடியும்? நீயே எடுத்துக்கொடுக்க வேண்டுமென, பலவாறு துதிசெயுஞ் வைசியனுக்காக அந்த மடுவிலுள்ள திரவியத்தைத் தானே கரையேற்றி வைசியனை நோக்கி உன் பாவமும் வறுமையும் போக்கினேம். இந் நிதி முழுவதும் கொண்டு உன் பதிபுகுந்து நம்மை நினைக்கும் அடியார்களுக்கும் பசிப்பிணியுடையோர் யாவருக்குங் கொடுத்து உதவி புரிந்து நீண்ட காலம் வாழ்வாயென்று கூறித் தன் சோதியிற் கலந்தான்.

இந் நதி பிரசிரவணம் என்னும் தீர்த்தத்தில் ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் கார்த்திகைத் தினத்தில் புந்திவாரமும் திரிதிகை நட்சத்திரத்தில் நீ வந்து தெரிசிக்கக் காட்சி கொடுப்போமென்று கூறியதை இல்லகனும் நிதிகொண்டு தன் பதி சென்று களா நிழலமர்ந்த பால்வண்ணப்பெருமான் திருவாக்கின் படி பல தான தருமங்கள் செய்து ஒவ்வொரு வருடமும் பரமனைக் கண்டு போற்றி செய்து பலகாலம் வாழ்ந்திருந்து நற்கதியடைந்தான்.

முப்பதாவது
சிவராத்திரி விரத வியல்பைப் பெருமான் உரைத்த வரலாறு.

உலகந் தோன்றிய காலத்தில் நான்கு முகங்கொண்ட அயனும், திருமாலும் ஆணவத்தினல் நான் பெரியவன். நீ பெரியவனென்று வழக்காடினர்கள். அவ்விருவருடைய கர்வத்தை யடக்கும் பொருட்டுப் பால்வண்ணப்பெருமான் தன் திருவுள்ளமிரங்கி மாசித்திங்கள் தேய்பிறை பதின்மூன்காம் நாள் திருவோணங் கூடியு நன்னளில் அன்றிரவு பதினன்கு நாழிகையில் தாணுவில் நின்றும், மகேஸ்வரமூர்த்தியாகி அடியு முடியுங் காட்டாமல் அவர்களுக்கு காட்சியளித்தான். இருவீர்களும் அதன் உருவத்தைக் கண்டு இதன் அடி முடி முன்னதாகக் காண்பவரே நம்மிற் பெரியவர் என்று பேசிக்கொண்டு அடி முடி தேடுவதற்காகத் திருமால் பன்றி ரூபமாகவும், அயன் அன்னப்பட்சி ரூபமாகவும் அடி முடி தேடிச் சென்ருர்கள்.

அநேக காலஞ் சென்றும் இருபேரும் அடி முடி காண முடியாமல் திரும்பினர்கள். பிர்மதேவர் பரமசிவத்தின் திருமுடியைக் கண்டதாகப் பொய்யும், திருமாலானவர் திருவடியைக் காணமுடியவில்லை என்ற மெய்யும் விளம்பினபடியால் பால்வண்ணப்பெருமான் நான்முகனுக்குக் கோயில் இல்லாமல் போவது என்ற சாபமும், திருமாலுக்குக் காத்தல் சிறப்புரிமை உண்டாகக் கடவதென்ற வாழ்த்தும் அருளியது மன்றி, அக்காட்சி ஒரு மூன்றே முக்கால் நாழிகையளவு விளங்கி மற்றைய தேவர்களுக்கும் முனிபுங்கவர்களுக்கும் கண்டுள்ளமையால், இராத்திரி காலத்தில் பால்வண்ணப்பெருமான் மகேஸ்வரமூர்த்தியாய்த் தோன்றியபடியால், சிவராத்திரியெனப் பெயர் வந்தது என்றும், அதன் விரதநோற்றோர் யாரும் எப்பாவமுந் தீர்ந்து சாயுட்சிய பதவி யடைவாரென்றும், சிவராத்திரியின் விரதமனுஷ்டிக்கும் வகையுஞ் சொல்வோம்.

சிவராத்திரி முதல்நாளில் ஒருதரம் உணவருந்தியும், துயில் நீத்தும் சிவராத்திரியன்று சூரியன் உதிக்குமுன் எழுந்திருந்து விதிப்படி நிட்சேபநதியில் மூழ்கி விபூதி அணிந்து, உருத்திராக்கம் பூண்டு, துயிலு முணவுந் நீத்துச் சிவலிங்கத்தைப் பூசித்து அபிடேக, அலங்கார, நெய்வேத்தியம் முதலியன செய்து நான்கு காலம் தெரிசித்துப் பூசிக்க வேண்டும். நான்கு காலமாவது முதற்காலம் கிருதயுகத்தில் விநாயமூர்த்தியும், திரேதாயுகத்தில் ஆறுமுகக்கடவுளும், துவாபரயுகத்தில் பிரம்மதேவரையும், கலியுகத்தில் திருமாலையும் பூசிப்பதாக, ஆகமங்களில் விதித்திருக்கிறது.

அதன் விவரமாவது வாதுளம், காமிகம், காரணம், லளிதை, கிரணம், செயம், சுப்பிரபேதம், தீப்தம் என்னும் இவ்வெட்டு ஆகமங்களிலும், சாலோத்தரம், காலநிர்ணயம் என்னும் இவ்விரண்டு உபாகமங்களிலும், பவுடியோத்தரம், காந்தம், வாயு என்னும் இம்மூன்று புராணங்களிலும் சொல்லப்படுகின்றது.

அதன்படி சிவராத்திரியன்று நாலுகாலமும் விதிப்படிப் பூசை செய்து விரதம் அனுஷ்டிப்போர்கள் நல்லார் இணக்கமும், இடம், பொருள், ஏவல் முதலிய சிறப்புகளைப் பெற்றும், மறுமையில் மோட்சத்தை யடைவார்கள். இமயவராயிலும், ஏனையராயினும் இச் சிவராத்திரியில் விரதம் அனுஷ்டிக்காமல் அத் தினத்தில் அன்னம் புசிப்பவர்கள் நாயின் இறைச்சியை உண்பதாகவும், எக்குலத்தி லுதித்தோராயினும் அது கடைப் பிறப்பேயாகும் என்று சொல்லிப் பால்வண்ணப்பெருமான் சோதியிற் கலந்தனன்.

வாழ்த்து.

திண்புவியோர் போற்றுபுகழ்சேர்க் கருவைச் சரிதமதை
பண்போடு கேட்டோரும் படித்தோருந் — தண்பாவைப்
பூதலத்தில் வாராதெப் போதுமிருப் பாருமையாள்
காதலன்பொற் பாதநிழற் கண்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

அறுவகைச் சமயத் தோர்க்கும்
அவ்வவர் பொருளாய் வேறும்
குறியது உடைத்தாய் வேதா
கமங்களின் குறிஇ றந்தங்(கு)
அறிவினில் அருளான் மன்னி
அம்மையோ டப்பன் ஆகிச்
செறிவொழி யாது நின்ற
சிவனடி சென்னி வைப்பாம்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

தென்னாடுடைய சிவனே போற்றி!
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி!!

திருக்கருவைத் தலபுராணம் முற்றிற்று.

பக்கம்	வரி நம்பர்.	பிழை.	திருத்தம்.
12	10	பணிவித்தனன்	அணிவித்தனன்
14	20	அழைத்துப்போய்	அழைத்துப்போய்
14	28	வரதுங்ன்கதஜஇரர ானியாகிய	வரதுங்கன் இராஜ ராஜதானியாகிய
15	18	திருக்ளா	திருக்களா
19	2	வழவாது	வழுவாது
	19	வருங்கிச்	வருந்திச்
21	6	அமைச்சரித்து	அமைச்சரிடத்து
21	10	விசுவேசன்	விசுவேசுவரன்
22	29	நம்மையாயிருக்கும்	நன்மையாயிருக்கும்
23	14	மோட்கத்தை	மோட்சத்தை
24	20	கன் தன் தேவி	தன் தேவி
35	16	கனமங்களே	கன்மங்களே
37	7	தவச உற்சவம்	தவசு உற்சவம்
40	20	நிட்சேப கதி	நிட்சேப நதி
58	1	மநாஞ்	நாமம்
65	17	கொண்டிருக்கம்	கொண்டிருக்கவும்
67	22	சம்மாரஞ்	சம்காரஞ்
76	19	வேதனுமாலும்	வேடனுமாலும்
96	15	சிலபெருமான்	சிவபெருமான்



ஸ்ரீ பால்வண்ணநாதப் பெருமானின் இரதம்